
விலை 20 ரூபா

# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 11 • 04.10.2015



### கைதவறிப்போன பலகோடி

# முதல்வர் கோட்டை விட்டாரா? விலைபோகாமல் இருந்தாரா?

**இரகசிய பேச்சின் அதிர்ச்சி ஆவணங்கள்!**


வடக்கின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படவிருந்த பெருந்தொகை நிதியை, வடக்கு முதல்வரின் செயற்பாடுகள் சாத்தியமாக்க தவறியுள்ளதா? முதல்வரிற்கு நெருக்கமான ஒருவரை திட்டத்தின் இணைப்பாளராக நியமிக்க கோரியது முட்டுக்கட்டையை போட்டதா?

வடக்கிற்கு வரும் ஒவ்வொரு வெள்ளிக்காசையும் பொற்காசாக பார்க்க வேண்டிய தருணத்தில் வடக்கு மாகாணசபை பொறுப்பற்று நடந்ததா? பெரும் நிதியொன்றை முதல்வர் ஏன் கோட்டைவிட்டார்? அல்லது முதல்வர் ஏதாவது ராஜதந்திரமாக செயற்பட்டாரா? ஜநா அபிவிருத்தி திட்டத்தின் கீழ வடமாகாணசபைக்கு கொடுக்கத் தயாராக இருந்த பலகோடி ரூபா பணம் ஏன் தடைப்பட்டது?

நம்பச்சிரமமானதுதான் இந்த விடயம். எனினும், யதார்த்தம் அதற்கு மாறானதாகவே உள்ளது. தீபத்தின் புலனாய்வு செய்தியாளர்கள் பல அதிர்ச்சி தகவல்களை திரட்டியுள்ளனர். இந்த விடயத்தின் முழு விபரத்தையும் ஆதாரங்களுடன் அறிய தொடர்ந்து படியுங்கள்.

தொடர்ச்சி 10-ம் பக்கம்

உள்ளே...



கதை சொல்லும் இந்தியர்கள் 3



'புலி' பார்த்தது காவாலிகளா? ரசிகர்களா? 14



'நாவின் அரசி' இணுவில் ஆச்சி 18

# மரண தண்டனைதான் தீர்வா?

அண்மைய நாட்களில் மரணதண்டனை தொடர்பாக அதிகம் பேசப்படுகிறது. அரசியல்வாதிகள், ஊடகங்கள், பொதுசனங்கள் என அனைத்து தரப்பினரும் மரணதண்டனை பற்றி பேசுகிறார்கள். இதில் பெரும்பாலான குரல்கள் மரணதண்டனையை எந்த தயக்கமுமின்றி ஆதரிக்கின்றன. மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்தினால் இலங்கை பிரமாண்ட காரியமொன்றை நிறைவேற்றிவிடும், இலங்கையின் சீரழிவுகள் அனைத்திற்கும் தீர்வுகிட்டிவிடும் என்பதைப் போன்ற அபிப்பிராயங்கள்தான் பரப்பப்பட்டு வருகின்றன.

குறிப்பாக சமூக ஊடகங்களில் இந்தப் போக்கு அதிகமாக காணப் படுகிறது. ஒவ்வொரு பாலியல் வல்லுறவு, கொலை சம்பவங்கள் தொடர்பான செய்திகளிற்கும் கீழே ஒரேவிதமான பின்னூட்டங்கள் கண்டிப்பாக இருக்கும். குற்றவாளிக்கு மரணதண்டனை கொடுக்க வேண்டும் என்பதை அவரவருக்கு விரும்பிய விதத்தில் பின்னூட்டமிடுவார்கள்.

வேறெந்த காலத்தையும் விட சமகால இலங்கையின் வெகுஜன மட்டத்தில் மரணதண்டனைக்கு வெகுவான ஆதரவு இருப்பதாகவே தோன்றுகிறது. ஏனெனில் இலங்கையில் சம்பவங்கள் அப்படித்தான் அமைந்துள்ளன. கேட்கவே நெஞ்சு பதறும் விதமான செய்திகள் குறிப்பாக குழந்தைகளை கடத்தி சிதைத்து கொல்லும் 'பாஷன்' இலங்கை வெகுஜனங்களை மரணதண்டனையை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

வடக்கில் வித்தியா, யதுர்சிகா, தெற்கில் சேயா என வரிசையாக நெஞ்சைப்பதறும் சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. அதிகரித்த போதைப்பொருள் பாவனை, அதன் தொடர்ச்சியான வன்முறைகள் என சமூகவாழ்வு அச்சுறுத்தலான நிலைமையை எட்டியுள்ளதான அபிப்பிராயம் பரவலாக ஏற்பட்டதன் விளைவே, மரணதண்டனைக்கு ஆதரவான தற்போதைய நிலைப்பாடு.

இதன் விளைவாகவோ என்னவோ, மரணதண்டனைக்கு அதிகரித்த ஆதரவு உள்ளதைப்போலுள்ளது. ஏனெனில் அதற்கு எதிராக இதுவரை உருப்படியாக பதிவு செய்யப்பட்டுள்ளது இரண்டேயிரண்டு அபிப்பிராயங்கள் மட்டும்தான். ஒன்று அமைச்சர் ராஜித சேனாரத்னவினது. மற்றது, மகாநாயக்க தேரருடையது.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது, இலங்கையின் ஊடக, படைப்பு, சிந்தனை பரப்புக்களில் மரணதண்டனையை அமுல்படுத்துவது தொடர்பான எந்த கருத்துப்பரிமாற்றமும் நடக்கவில்லை. அதுபற்றிய செய்தியை அவர்கள் அறிந்தார்களா என்பதையே தெரியமுடியாத நிலைமைதான் உள்ளது.

ஏனெனில் மரணதண்டனையினால் மட்டுமே குற்றங்களை கட்டுப்படுத்த முடியாதென்பதை உலகம் ஏற்கனவே கற்றுக் கொண்டுவிட்டது. குற்றங்கள் நிகழ்வது சமூக, பொருளாதார, உளவியல் காரணிகளால். அச்சுறுத்தலால் அவற்றை தடுக்க முடியாது. குற்றங்களை தவிர்க்க, அதற்கான காரணிகளை கண்டறிந்து நிவர்த்தி செய்வதுதான் பொருத்தமானதாக இருக்கும். உதாரணமாக, போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டங்கள் அவசியம். அப்படியான செயற்றிட்டங்கள் இல்லாமல் வெறுமனே மரணதண்டனைதான் தீர்வென நம்பினால், தினம்தினம் பலரை கழுவேற்றுவதிலேயே முடியும்.

ஏற்கனவே இந்த பகுதியில் குறிப்பிடப்பட்டதைப் போல, பாலியல் வன்முறை சம்பவங்களில் எத்தனை குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்? எத்தனை பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர்? நீண்ட இழுத்தடிப்பின் பின் சந்தேகநபர் நிரபராதியென விடுதலையாவதுதானே வழக்கம். இதற்கு என்ன காரணம்? நீதித்துறையின் போதாமையா? காவலத்துறையின் செயற்றினின்மையா?

பாலியல் வன்முறைக்கு மரணதண்டனைதான் தீர்வா, மரணதண்டனை அமுலில் உள்ள தேசங்களில் பாலியல்வன்முறை நடப்பதில்லையா? பாலியல் வல்லுறவிற்கு மரணதண்டனையை அமுல்ப்படுத்துவதைவிட, உடனடியாக குற்றவாளியை அடையாளம் காணவும், தண்டனை வழங்கவுமான நீதிப்பொறிமுறையை ஏற்படுத்துவது அதிக வினைத்திறனானதாக இருக்காதா? இலங்கையின் அண்மைய நிலவரங்களிற்கு மரணதண்டனைதான் தீர்வா இல்லையா என்ற விவாதங்களிற்குள் நாம் நுழையவில்லை. வெறும் மரண தண்டனை சட்டத்தினாலோ, சிலரை கழுவேற்றுவதாலோ பிரச்சனைகள் தீர்ந்து விடாதென்பதே நமது உடனடியான சுட்டிக் காட்டல்.

பெரும்பாலான பாலியல் குற்ற வழக்குகள் குற்றம் நிரூபிக்கப் படாமலேயே முடிகின்றன. சந்தேக நபர் விடுதலையாகிறார். நாளை மரணதண்டனை சட்டம் வந்தாலும், இதுதான் நிலையாக இருக்கும். ஆகவே, குற்றம் செய்தவர் தப்பிக்கவே முடியாதென்ற நிலைமையை உருவாக்குவதுதான் அதிக பலனுடையதாக இருக்கும். மரணதண்டனையை என்பது வழக்குச் செல்லும் பாதையின் அந்தத்தில் அமைக்கப்படும் தூக்குமேடை. அந்த பாதையில் முடிவிற்கு செல்லாமலே இடையில் சுழித்துவிட்டு செல்லும் குறுக்கு மார்க்கங்கள் இருக்கும் வரை அதுவும் பலனுடையதல்ல.

எனவே, குற்றம் செய்தவரை அடையாளம் காணவும், குற்றத்தை நீதிமன்றங்களில் நிரூபிக்கவும் வினைத்திறனுள்ள, தொழில் நேர்த்தியான, நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய பொலிஸ்சேவை, குற்றவாளிகளை விரைவாக அடையாளம் கண்டு தண்டனை வழங்கும் நீதிக்கட்டமைப்புத்தான் நமது அவசியம்.


**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com

# சொன்னார்கள்



**சுசில் பிரேமஜயந்த**
**முன்னாள் செயலாளர்,**
**ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பு**

தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளராக நான்தான் இருந்தேன். என்றாலும், மகிந்த ராஜபக்சவின் விளம்பரங்களை வெளியிடுவது தொடர்பாக எந்த விளம்பரத்திலும் கையெழுத்திடவில்லை. உண்மையில் இது பற்றி ஒன்றுமே எனக்கு தெரியாது.




**சி.வி.விக்னேஸ்வரன்**
**வடமாகாணசபை முதல்வர்**

எமது நாட்டில் அனைத்துலக சட்டங்களில் உள்ள விடயங்களை கொண்டு வருவதாயின் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். உள்ளூர் விசாரணையாளர்கள் மத்தியில் விசாரணைப் பொறுப்பு சென்றால், பாதிக்கப்பட்டவர்களிற்கு அது நீதியை வழங்காது.




**நிமல்கா பெர்னாண்டோ**
**மனிதஉரிமைகள் செயற்பாட்டாளர்**

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் நீதித்துறை மற்றும் சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் கட்டமைப்பு தொடர்பில் சந்தேகமும் அச்சமும் நிலவியது. எனினும், புதிதாக வந்த ஆட்சியாளர்கள் அவற்றை சுயாதீனமாக செயற்பட அனுமதித்துள்ளதால், நீதியான விசாரணைகள் நடக்குமென்ற நம்பிக்கையுள்ளது.



**ஷ்சுரேஷ் பிரேமச்சந்திரன்**
**ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர்**

இலங்கையில் யுத்தம் முடிந்து ஆறுவருடங்களாகின்றபோதும் இனப்பிரச்சனை நீடித்துக் கொண்டே இருக்கிறது. இனப்பிரச்சனைக்கான மூலகாரணி கண்டறிப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும். அப்படியானால்த்தான் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையுடனான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.




**ரணில் விக்கிரமசிங்க**
**பிரதமர்**

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை மகிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டார். அதிகாலை 3.30 மணிக்கு என்னை தொலைபேசியில் அழைத்தார். அப்போது நான் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தேன். அப்பொழுதே அழைத்ததால் பெரும் சங்கடத்திற்கு உள்ளானேன்.

# க்ளிக் பக்கம்

கமரா என்பது நம்ம மூன்றாவது கண் என்பார்கள். அதன் ரசனையே தனி. அதற்கூடாக பார்க்கும் போது சாதாரண இயற்கை எவ்வளவோ அழகாக தெரிகிறது. சாதாரணமாக அந்த குட்டி பெண் கல்லில் ஏறி நின்று எதையோ பார்க்கிறாள். மாலை நேரச்சூரியன்.... இதுதான் மனிதமும் இயற்கையும் ஒன்றாக சேரும் தருணம்.

**என்னைப்பற்றி:** நான் சி.கோவற்சன். இயற்கையுடன் இணையும் மனிதத்தை ரசிப்பவன் நான். சின்ன வயதில் பேப்பர் கமராவில் படம் பிடித்து விளையாடிய காலம் முதலே எனக்கு புகைப்படகலையில் நிறைய விருப்பமிருந்தது. இது இப்போது கைத்தொலைபேசி படப்பிடிப்பாக மாறிவிட்டது.



**படப்பிடிப்பாளர்:**
**சி.கோவற்சன்**
**இடம்:**
**மாவிட்டபுரம்**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com



# கதை சொல்லும் இந்தியர்கள்

கார்த்திக் பரமேஸ்

அண்மையில் முகநூலில் ஒரு வீடியோ பார்க்க கிடைத்தது. ஐரோப்பிய நாடொன்றில் நடந்தது. தமிழகத்தின் திரைப்பட இயக்குனர் ஒருவர் உரையாற்றுகிறார். சினிமாவைப்பற்றியல்ல. தமிழக வாழ்வைப் பற்றியல்ல. ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றைப்பற்றி. ஏன் தமிழர்கள் போராட்டத்தை தொடங்கினார்கள் என்பது பற்றி, தமிழர்கள் எப்படியெல்லாம் யுத்தத்தில் சிக்கி துன்பத்தை அனுபவித்தார்கள் என்பது பற்றி. இன்னும் என்னென்னவோ எல்லாம். இதை ஒருதொகை ஈழத் தமிழர்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் ஒரு பரவச நிலையில் இருந்ததாக தோன்றியது.

இந்தக்காட்சி அங்கு மட்டுமே நடந்ததல்ல. அண்மைய புலம்பெயர் காட்சிகள் பெரும்பாலும் இப்படித்தான். ஈழத்தமிழர்கள் தங்களைப் பற்றி, தமது அரசியல்போராட்டம் பற்றி தமிழகத் தமிழர்களின் வாயால் கேட்டு அறிந்து கொள்வதில் ஒரு அலாதி இன்பத்தை அனுபவிப்பதாக தெரிகிறது.

இந்தியா குறிப்பாக தமிழகம் என்றாலே ஒரு பக்திபூர்வ மனநிலை அனேக ஈழத்தமமிழர்களிடம் உள்ளதுதான். இளைய சமூகம் அந்தப்போக்கிலிருந்து அனேகமாக விலகிச் சென்றுவிட்டது. என்றாலும், மூத்தலைமுறை இன்னமும் அப்படியானவர்களாகத்தான் இருக்கிறார்கள். இலங்கை தொலைக்காட்சி செய்திகள் பார்க்காமல், இந்திய தொலைக்காட்சிகளில் இலங்கை பற்றி சொல்வார்கள் என காத்துக் கொண்டிருக்கும் அப்பாவி முதியவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன்.

நமது அரசியல்போராட்ட ஆரம்பகர்த்தாக்கள் எல்லோரும், தமிழக பாணியின் பிரதியீடுகளாகத்தானே இருந்தார்கள். பேச்சு... பேச்சு... எதுகைமோனையான... நரம்பு புடைக்கும் பேச்சுக்கள்.

கலையுலககத்தின் கதையும் அதுதான். யாரும் தங்கள் சுயங்களை கண்டடைய முயலவில்லை. இருந்ததெல்லாம், ஈழத்து சௌந்தரராஜன், ஈழத்து சிவாஜி, ஈழத்து காந்திதான். இந்தக்கதை இப்பொழுது இப்படி வந்து நிற்கிறது.

இம்முறை தென்னிந்தியாவிலிருந்த திரைப்பட இயக்குனர் கௌதமன், திருமுருகன் காந்தி, அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட பலர் வந்து ஜெனீவாவில் முகாமிட்டுள்ளனர். அவர்கள் அங்கு வந்து உலகளாவிய நீதிகோரிய செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தெரியவில்லை. மாறாக, ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகளுடன் சண்டைபிடிப்பதற்கென்று புறப்பட்டு வந்ததைப் போல் தெரிந்தது.

இயக்குனர் கௌதமன், திருமுருகன் காந்தி போன்றவர்கள் முகப்புத்தகத்தில் எனதும் நண்பர்களாக உள்ளவர்கள்தான். கடந்த மூன்றாண்டுகளிற்கு மேலாக அவர்களுடன் முகப்புத்தக பரிச்சயம் இருந்ததன் அடிப்படையில், அவர்களிற்கு ஈழம்பற்றிய புரிதல் சரியான அளவில் இல்லையென்பதை அறிந்து, அவர்களின் ஈழம்பற்றிய குறிப்புக்களை படிப்பதை கைவிட்டே இரண்டுவருடங்களிற்கு மேலாகிவிட்டது. நமது பிரச்சனை பற்றிய தவறான புரிதல்களை பதிவிடுவதும், அதனை யாரும் கேள்விகேட்டால், உடனே அவர் அரசின் கைக்கூலியென பிலாக்கனமிடுவதுமான போக்கின் ஆகப்பிந்திய பிரதிநிதிகள் அவர்கள். ஆனால் இன்னும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்திய சினிமாக்காரர்களை அழைத்துத்தான் தமது போராட்டத்தை பற்றி அறிந்து கொள்கிறார்கள் என்பதை நினைத்தபோது, உண்மையில் வருத்தமாக இருந்தது.

யுத்தம் முடிந்ததன் பின்னர் ஏற்பட்ட புதிய போக்கது. தமது கருத்துக்களை கேள்விக்குட்படுத்துபவரை ராஜபக்சவிடம் பணம்வாங்கிவிட்டார் என சுலபமாக குற்றம்சுமத்தி கடந்து சென்றுகொண்டிருந்தனர். இதற்கு தோதாக அமைந்தது, நமது புலம் பெயர்ந்தவர்களின் நிலை. அவர்களில் அனேகரும் இந்தியசினிமாக்களில்த்தான் ஈழப்பிரச்சனையை பார்த்துக் கொண்டிருந்தவர்கள். அதனால் இந்திய சினிமாக்காரர்களின் பிரசங்கங்களில் மெய்மறப்பதில் பெரிய சிரமங்களிருக்கவில்லை.

இம்முறை ஜெனீவாவிற்கு தமிழகத்திலிருந்து சென்றவர்கள் அனைவருமே, ஈழஆதரவு இரத்தம் பொங்கி சென்றவர்களில்லை. ஈழத்தமிழர்களால் அழைக்கப் பட்டவர்கள். அவர்களின் விமானச் செலவிலிருந்து, தங்குமிடச்செலவு வரை பொறுப்பேற்றது நம்மவர்கள் தான். அதாவது, காசுகொடுத்து அவர்களை அழைத்து ஈழப் போராட்டம் பற்றி அவர்கள் அறிந்து கொள்ளப்போகிறார்கள். தாங்கள் அறிவதுடன், உலகத்திற்கும் அறியச்செய்யப்போகிறார்கள்.

இந்த இடத்தில் எனக்கு உள்ள கேள்வியென்னவென்றால், இவற்றை அறிந்து கொள்வதற்கு நம்மவர்களிற்கு தென்னிந்திய திரைத்துறையினர்தான் கிடைத்தார்களா? தமிழர்களின் போராட்டம் தொடர்பில் புரிய வைக்க ஒரு ஈழத்தமிழருக்கும் லாயக்கில்லையா? போராட்டத்தின் பங்காளிகளான எத்தனையோ பேர் இன்றும் ஒருநேர உணவிற்கும் வழியற்றவர்களாக திண்டாடிக் கொண்டிருக்கிறார்களே. அவர்களில் ஒரு திறனானவர், அறிவுடையவர் பொருத்தமானவர் தென்படவில்லையா? இந்தக்காரியங்களை ஆற்ற அவர்களை விட பொருத்தமானவர்கள் யார்?

இயக்குனர் கௌமன் பேஸ்புக்கில் ஈழம்பற்றி கவிதை யெழுதியதை விட அதிகமாக என்ன செய்தார்? திருமுருகன் காந்தி பேஸ்புக்கில் நாற்பது ஈழத்தவர்களிற்கு துரோகிப்பட்டம் கொடுத்ததையும், சில வருடங்களின் முன்னர் மெழுகுதிரி கொளுத்தியதையும் விட வேறென்ன செய்தார்? இந்த செயற்பாடுகளே நம்மவர்களை கசிய வைத்து விடுமா?

தமிழகத்தின் பெருமளவான 'போராளிகளிற்கு' தமிழ்உணர்வென்பது கிட்டத்தட்ட வாழ்விற்கு உத்தரவாதமளிக்கும் ஒன்றாக மாறிவிட்டதென்பதுதான் யதார்த்தம். கொளத்தூர் மணி போன்ற வெகுசிலரும், அன்றாடம் பத்திரிகைகளில் பெயர் அடிபடாத வேறும்பலர் தொடர்பில் உள்ள உயர்ந்த அபிப்பிராயங்களை இங்கு பதிவு செய்கிறேன். மாறாக, கௌதமன், திருமுருகன்காந்தி, லொட்டு லொசுக்குள் அந்த பட்டியலில் இல்லையென்பதையும் குறிப்பிடுகிறேன். புலம்பெயர்ந்தவர்களின் தொடர்பின்மூலம் கிடைக்கும் பணம், அவர்களை ஈழப்போராளிகளாக களத்திலிறங்க வைத்துள்ளதென்பதே எனது அபிப்பிராயம்.

இல்லையென்று யாராவது மறுக்ககூடும். அப்படி மறுப்பவர்கள், யதார்த்தமான ஒரு கேள்வியை எதிர் கொண்டு பதிலளிக்க வேண்டும். தமிழகத்திலுள்ள ஈழ ஆதரவாளர்களின் தலையாய பணியென்ன? ஈழம்தொடர்பில் தமிழகத்தில் சாதகமான அபிப்பிராயமொன்றை ஏற்படுத்த, அல்லது மத்திய அரசிடம் மாற்றங்களை ஏற்படுத்த முனைவதுதானே அவசியம். அவர்கள் அதை எந்தளவிற்கு செய்தார்கள். தமிழகத்தில் செயற்பாட்டு தளமில்லாத இந்தவகையானவர்களை ஜெனீவா அழைத்து செல்வதே அடிப்படையில் தவறான அணுகுமுறை. 'இவரும் நம்மாள்த்தான். எங்களிற்குத்தான் சப்போர்ட்' என இவர்களை அழைத்துச் சென்று ஆட்கணக்கு காட்டுகிறார்களா?

இந்திய பிரபலங்களை அழைத்து வீடுகளில் தங்கவைப்பது பெருமை, இந்தியர்களின் வாயால் பாராட்டு பெறுவது கிடைத்தற்கரிய பேறு போன்ற மனநிலையை நம்மவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். மேலே சொன்ன இந்திய வகையறாக்களை ஜெனீவா வரை அழைத்து செல்வதால் எதுவும் நடக்கப்போவதில்லை. இப்படி விரயம் செய்த பணத்தை, இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாரினாவது வாழ்வை மேம்படுத்த கொடுத்திருந்தாலே மிக வரவேற்கத்தக்க விடயமாக இருந்திருக்கும்.

தமிழர்கள் இனியாவது இதயத்தால் அரசியல் செய்வதை நிறுத்திவிட்டு, மூளையால் அரசியல் செய்ய பழகிக் கொள்ள வேண்டும். ஏனெனில், புத்திமானே பலவான்.


அன்புமணி ராமதாஸ்


கௌதமன்


திருமுருகன் காந்தி



பாதி சம்பளத்தை வங்கியில் போட்விடுங்கள். இவ்வாறு சேமிக்கப்படும் பணம் ஏதாவது அவசரச் செலவுகள் வரும்போது கைகொடுக்கும். நீங்கள் யாரிடமும் கையேந்த தேவையில்லை.

# கைக்குள் காசு

“மாதம் முழுவதும் ஓடி ஓடி உழைத்தாலும் கையில் காசு தங்குதே இல்லை” என்பது நூற்றுக்கு 90 சதவீதமானவர்களின் மனக் குமுறல். இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கைக்கு பணம் அவசியம். அலுவலகங்களில் வேலைபார்ப்பவராக இருந்தாலும் சரி, கூலி வேலை செய்பவராக இருந்தாலும் சரி எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் கஷ்ரப்பட்டுத்தான் பணத்தைச் சம்பாதிக்றோம். ஆனால், அந்தப் பணத்தை எப்படிச் செலவு செய்வது? என்பதில்தான் பிரச்சினை ஏற்படுகின்றது.


தவளும் குழந்தை தொடக்கம் தள்ளாடும் முதியவர்கள்வரை தனக்கு இது கிடைக்கவேண்டும், இப்படி வசதி இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று ஆசைகளும், கனவுகளும் நிச்சயம் உண்டு. இவற்றை நிவர்த்தி செய்ய முற்படும் போதே வீண் செலவுகள் செய்யவேண்டியுள்ளது. இதனால், சில சமயங்களில் நம்முடைய சொத்துக்கள் முழுவதையும் இழக்கநேரிடும். மக்களின் வீண்செலவுகளால் ஒரு நாட்டின் பொருளாதாரமே சரியும் என நிதி நிபுணர்கள்கூட சுட்டிக்காட்டியுள்ளனர். உலகின் வல்லரசு நடாலீன அமெரிக்காவின் பொருளாதாரமே சில தடவை ஆட்டம் கண்டது.

பணத்தைச் செலவு செய்யாமல் இருப்பதால் என்ன நன்மை? என்று நீங்கள் நிச்சயம் கேட்பீர்கள். நியாயம்தான். மகிழ்ச்சியாக வாழ்வதற்கு சில செலவுகளைத் தவிர்க்க முடியாதுதான். ஆனாலும், பணத்தை திட்டமிட்டுச் செலவு செய்வீர்களாயின் உங்களுடைய தேவைகளும் நிறைவேறும், கையில் கொஞ்சம் சேமிப்பும் இருக்கும்.

## சில யோசனைகள்

- நமக்கு எது தேவையோ, நம் பண வரவுக்கு எவ்வளவு செல வழிக்க முடியுமோ அதற்குள் வாழப் பழகுவதே வீண் பணச் செலவை தடுக்கும் முதற்கட்ட நடவடிக்கையாகும். மேலும் நாம் செய்யவிருக்கும் வேலையை சரியான நேரத்தில் செய்து முடித் தால் தேவையற்ற செலவுகளைக் குறைக்கலாம்.
- அழகுசாதனப் பொருட்களை யோ, தன்னை அழகுபடுத்திக் கொள்ள விரும்பாதவர்களோ இருக்க முடியாது. இவை தவறில்லை. பிறந்தநாள் அல்லது திருமணம் போன்ற கொண் டாட்டங்களின் போது தம்மை அழகுபடுத்திக்கொள்ளலாம். அறிமுகம் இல்லாத பொருட் களை எல்லாம் வாங்கிக் குவிக்காமல் அவசியமாயான அழகுசாதனப் பொருட்களை மட்டும் வாங்குங்கள். மற்றபடி வீட்டில் உள்ள பொருட்களைக் கொண்டு உங்களை அழகு படுத்திக்கொள்ளுங்கள்.
- தொலைக்காட்சி, வானொலி, குளிர்சாதனப்பெட்டி என சில உபகரணங்களையோ அல்லது தங்க நகைகளையோ வாங்க வேண்டும் என்றால் நாலு கடை ஏறி இறங்கி விலைகளை நன்கு விசாரித்து உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் வாங்குங்கள். எடுத்த எடுப் பிலேயே எல்லாம் வாங்க வேண்டும் என நினைக்காமல். ஒவ்வொன்றாக பொறுமையாக வாங்குங்கள்.
- ஹொட்டேல்கள்,உணவங்களில் சாப்பிடுவதை விட்டுவிட்டு வீட்டிலேயே சமைத்து உண் ணுங்கள். இதனால் பணமும் மிச்சம்,உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.
- அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங் குவது, ஜோதிடம், கைரேகை பார்ப்பதை நிறுத்துங்கள்.
- வட்டிக்குப்பணம்வாங்குவதைக் குறையுங்கள்.
- விலைகூடிய ஆடைகளை அணிந்தால்தான் அழகு என்று நினைக்காதீர்கள் குறைந்த விலை யிலும் எடுப்பான தரமான ஆடைகள் உள்ளன. அதை தெரிவுசெய்வதுதான் உங்கள் திறமை.
- மின்சாதனப் பொருட்களின் பாவனை முடிந்ததும் அவற்றுக்குச் செல்லும்மின்னை துண்டித்துவிடுங்கள். இதனால் மின்கட்டணம் குறையும்.
- வாங்கும் சம்பளத்தில் பாதியை மட்டும்தான் உங்கள் சம்பளம் என்று எடுத்துக்கொள்ளுங்கள். அதற்குள்தான் உங்கள் வீட்டுச் செலவுகளையெல்லாம் செய்ய வேண்டும். இது மிகவும் கஷ்டமான காரியம். இதுநாள் வரை முழு சம்பளத்தையும் செலவு செய்தே குடும்பத்தை நடத்த முடியவில்லை. பாதி சம்பளத்தில் எப்படி குடும்பம் நடத்த முடியும் என்று யோசிக் கிறீர்களா? புரிகிறது. ஆனால, நீங்கள் வாழ்க்கையில் உண்மையாக முன்னேற வேண்டுமென்று நினைத்தால் இதைச் செய்தே ஆகவேண்டும். எப்படி என்பதை நீங்களே முடிவுசெய்யுங்கள்.

பாதி சம்பளத்தை வங்கியில் போட்விடுங்கள். இவ்வாறு சேமிக்கப்படும் பணம் ஏதாவது அவசரச் செலவுகள் வரும்போது கைகொடுக்கும். நீங்கள் யாரிடமும் கையேந்த தேவையில்லை.



நேர்மையாக, கஷ்ரப்பட்டு உழைக்கும் பணத்தை வீண் செலவுக்கு விரயமாக்குவதை விட அதைச் சேமித்து வைப்பது சிறந்தது. பணத்தைச் சேமித்து வைப்பது மட்டும் சேமிப்பு இல்லை, சிக்கனமாய் செலவு செய்வதும் ஒரு சேமிப்புதான்.




வவுனியா மாவட்டத்தில் உள்ள பழமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றான ஆசிகுளத்தில் அமைந்துள்ள சக்தி விநாயகப்பெருமான் ஆலயத்தின் கும்பாபிசேகம் சிறப்புற நடைபெற்று, தொடர்ந்து 21 நாட்கள் சிறப்பு பூஜைகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 10.10.2015 சங்காபிசேக நிகழ்வு இடம்பெறவுள்ளது. கும்பாபிசேக நிகழ்வை வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரசித்திபெற்ற குருவான வைத்தியநாதக் குருக்கள் தலைமையேற்று நடத்துவதையும் ஏனைய குருமார்களையும் பிரதான கும்பம் வெளி வீதி ஊடாக எடுத்துவருவதையையும் ஆலய கலசங்களுக்கான பூஜைகள் இடம்பெறுவதையும் படத்தில் காணலாம்.









# பிணையால் வரும் வினை

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

“துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதே” என்று சொல்லுவார்கள். அது முற்றிலும் உண்மைதான். காரணம் இல்லாமல் நம் முன்னோர்கள் எதையும் சும்மா சொல்லி வைப்பதில்லை. வேகமாக மாறிவரும் நவீன உலகத்திற்கேற்ப பணத்தின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதனால், பெரும்பாலனவர்கள் தமது பணத் தேவையை நிவர்த்தி செய்வதற்காக கடன் வாங்கும் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகின்றனர். கடன் வாங்குவது ஒன்றும் தவறோ, கெட்ட பழக்கமோ இல்லை. ஆனால், அந்தக்கடனை நேர்மையாகதிருப்பச் செலுத்துவதுதான் கடன்பெற்றவர்களில் 75 சதவீதமானர்களுக்கு சவாலர்க உள்ளது.


கடன் வாங்கியவர் தலைமறைவு, தற்கொலை முயற்சி, குடும்பத்துடன் தற்கொலை என்றெல்லாம் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. ஏன் நம் பிரதேசங்களில்கூட இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றிருக்கும். ஆனால், இப்போதெல்லாம் கடன் வாங்கியவர் சந்தோசமாக சுதந்திரமாக நடமாட அவர் கடன்பெற பிணைக் கையெழுத்துப் போட்டவர்கள் தான் கடனாளியாகி, நடுத்தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### தலை எழுத்தை மாற்றும் கையெழுத்து

வங்கிகளில் மட்டுமல்ல வெளியில் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களிடம் கடன் வாங்குவதென்றாலும் பெறுமதிமிக்க ஆவணங்கள் மற்றும் இருவரின் பிணை அவசியம் எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக அரச வங்கிகளில் அரசாங்க உத்தியோகத்தர் இருவரின் பிணை இருந்தால் மட்டுமே கடன் வழங்கப்படுகின்றது.

கடன் வாங்கியவர் ஒருவேளை அதைத் திரும்பச் செலுத்தாவிட்டால் அதனை வசூலிப்பதற்கு ஒரு குறிப்பிட்டளவு மாத வருமானம்பெறும் ஒருவர் வேண்டும். கடனை மீட்பதற்குத் தகுதி உள்ளவரைத்தான் பிணையாளராக கடன் வழங்கும் வங்கியோ அல்லது தனி நபரோ கேட்கிறார்கள்.

வாங்கிய கடனைச் சரியாகத் திருப்பிச் செலுத்தாத பட்சத்தில் வங்கி அல்லது தனிநபர் கடனாளியின் சொத்தைக் கைப்பற்றும் நிலை ஏற்படுகிறது. அப்படி அவரிடம் சொத்து இல்லை என்கின்றபோது, பிணைக் கையெழுத்துப் போட்டவர்தான் கடன் தொகைக்குப் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கடன் தொகைக்கு இருவருக்கும் சமமான பொறுப்பு உள்ளதால் பிணையாகக் காட்டப்பட்ட



சொத்தை விற்கவோ, சம்பளப் பணத்தை அப்படியே எடுத்துக்கொள்ளவோ கடன் வழங்கியவர்களுக்கு உரிமை உண்டு.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் இருவரை சந்திக்கும் சந்தர்ப்பம் சில நாட்களுக்கு முன் கிடைத்தது. அரசாங்க உத்தியோகம் பார்க்கும் இவர்களுக்கு 30 தொடக்கம் 35 வயதிருக்கும். இருவருக்கும் திருமணமாகி இரண்டு பிள்ளைகளும் உள்ளனர்.

### மதுவுக்கு அடிமை

இவர்களில் ஒருவர் தென்மராட்சிப் பகுதியைச் சேர்தவர். தற்போது குடிப்பழக் கத்திற்கு அடிமையாகி தனது உடல் ஆரோக்கியத்தை மட்டுமல்ல எதிர்காலத் தையும் வீணாக்கி வருகிறார்.

“குடி என்டாலே என்னென்டு தெரியாம இருந்த என்ர பிள்ளைக்கு இப்ப குடிக்கிறத தவிர வேற ஒன்டுமே தெரியாது. இப்படியே போனால் இவன்ர எதிர்காலம் எங்க போய் முடியப் போகுதோ?, நான் போய் சேர முன்னம் இவன் மேல போயிடுவான் போல இருக்கு” என கண்ணீருடன் கூறினார் பெயர்கூற விரும்பாத அரச உத்தியோகத்தரின் தயார்.

இவருக்கு திருமணமாகி ஆறு வருடங்கள்தான் ஆகின்றது. ஒரு பெண் பிள்ளையும், ஒரு ஆண் பிள்ளையும் என மனைவியோடு சந்தோசமாக வாழ்ந்த இவரின் தலை எழுத்தை அவர் போட்ட கையெழுத்து மாற்றியமைத்துவிட்டது. இவருக்கு நன்கு பழக்கமான ஒரே ஊரைச் சேர்ந்த 3 பேருக்கு அரச வங்கியொன்றில் கடன் பெற இவர் பிணை கையெழுத்திட்டுள்ளார். கடன் பெற்றவர்களில் இரண்டு பேர் அதனை மீளச் செலுத்தாத காரணத்தினால் இவருடையசம்பளப்பணம்முழுவதையும் வங்கி அப்படியே எடுத்துக்கொள்கிறது. இதனால் தற்போது பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார். கடனைத் மீளச் செலுத்தாத இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

“தெரிஞ்சவை, நேர்மையா நடப்பீனம் என்டு நினைச்சுத்தான் பிணைக்குப் போனான். ஆனால், இப்படி என்னை நடுத்தெருவில விடுவாங்க என்டு நினைச்சுக்கூடப் பார்க்கல. ஏற்கனவே ஆறு, ஏழு பேருக்கு யையெழுத்துப் போட்டிருக்கன். அவங்க கூலித் தொழில் செய்தாலும் நேர்மையா கடனை கட்டி முடிச்சிட்டாங்க. நல்ல உத்தியோகத்தில இருக்கிறவங்க என்னை ஏமாத்திடாங்க. என்ர பொஞ்சாதி, பிள்ளைகளை எப்படி பார்க்கப்போறன் என்டே தெரியல. சாப்பாட்டுச் செலவு, பிள்ளையள்ட படிப்புச் செலவு என்டு ஆயிரம் செலவு இருக்க ஒரு ரூபா கூட கையில வருகுதில்லை” என விரக்தியோடு கூறுகிறார் பிணை கையெழுத்துப் போட்டு ஏமாந்த குறித்த அரச உத்தியோகத்தர்.

### சொந்த வீடும் போச்சு!

இதேவேளை, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு அரச உத்தியோகத்தர் தனது நண்பர் ஒருவருக்கு தனிநபர் ஒருவரிடம் பத்து வீத மீற்றர் வட்டிக்கு பத்து இலட்சம் ரூபாவை பிணையாக இருந்து கடன் வாங்கிக் கொடுத்துள்ளார். பணத்தை வாங்கியவர் அதனை சுருட்டிக்கொண்டு அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டாராம். இதனால், கடன் கொடுத்தவர் கொடுத்த நெருக்கடி காரணமாக குறித்த உத்தியோகத்தர் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான மாடி வீடு மற்றும் மனைவியின் நகைகளை விற்று கடனை அடைத்துள்ளார்.

இந்தக் காலத்தில் யாரை நம்புவதென்றே தெரியவில்லை. தெரிந்தவர்கள், நல்லவர்கள், நண்பர்கள் என நம்பி தன்னைப் போல் யாரும் இனி யாரிடமும் ஏமாறக் கூடாது எனவும் குறிப்பிட்ட அரச உத்தியோகத்தர், கடன் அன்பை மட்டும் முறிக்காது, வாழ்க்கையையே அழித்துவிடும் என்றார்.

இவர்களைப் போன்று பாதிக்கப்பட்டவர்கள் உங்களுடைய பிரதேசங்களிலும் நிச்சயம் இருப்பார்கள்.

### விழிப்புடன் இருங்கள்!

பிணைக் கையெழுத்துப் போடுவது அவ்வளவு பெரிய தவறா? என்று நீங்கள் கேட்கக்கூடும். பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்ளும் மனப்பாங்குகளில் ஒன்றுதான் இந்தப் பிணை. ஆனால், யாருக்கு பிணைக் கையெழுத்துப் போடுவது என்பதில்தான் கவனமாக இருக்கவேண்டும். காரணம் பிணைக் கையெழுத்துப் போட்டவர்கள் பலரின் தலை எழுத்து இன்று தாறு மாறாக மாறியுள்ளது.

ஒரு கடனுக்கு பிணை கேட்பதன் நோக்கமே கடன் வாங்கியவரின் பொருளாதார நிலைக்கு உத்தரவாதம் தேவைப்படுவதால்தான். அதனால்தான் பிணை வழங்குபவரின் பொருளாதார நிலையின் பேரில் கடன் வழங்கப்படுகிறது. ஆகவே, நட்பு அல்லது கௌரவம் கருதி ஒரு சாதாரண கையெழுத்துதானே போடுகிறோம் என்று அலட்சியமாக கையெழுத்துப் போட்டுவிட்டு பிறகு சிக்கலில் சிக்கிக்கொள்ளாமல், கையெழுத்துப் போடும் முன்னர் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுங்கள்.

1. நாம் உதவப் போகும் நபர் எதற்காகக் கடன் வாங்குகிறார்?
2. அந்தத் தொகையை எப்படிச் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறார்.
3. அவரது வருமானத்துக்கும் கடன் தவணைக்கும் உள்ள விகிதாசாரம் என்ன?
4. கடன் தொகையைத் மீளச் செலுத்தும தகுதி உடையவரா?
5. அவருடைய உண்மையான மாத வருமானம், சொத்து என்ன?
6. அவருக்கு வேறு ஏதாவது கடன்கள் இருக்கின்றனவா?
7. அவருடைய நடத்தை மற்றும் பழக்கவழக்கங்கள் எப்படி?
8. கடன் செலுத்தப்படாத சூழ்நிலையில் என்னால் அதைத் திருப்பிச் செலுத்த முடியுமா? எனது குடும்பத்தின் நிலை என்ன? பொருளதார நிலை என்ன?

இந்தக் கேள்விகளுக்கு சரியான நம்பகரமான பதில் கிடைத்தால் பிணை கையெழுத்துப் போடுவதில் தவறில்லை!



# எமது குடிநீர் எங்கே?

✎ ஆதங்கி

நாம் குடிப்பது நல்ல நீர் தானா? இல்லை நச்சு நீரா? இப்படி தினம் தோறும் பயந்து பயந்து நீரை அருந்தும் மக்களின் நிலையை எத்தனை அதிகாரிகள் அறிவார்கள்.

யாழ்ப்பாணத்தில் குடிநீர் என்பது ஒவ்வொரு வீடுகளிலும் தாராளமாக கிடைக்கப்பெறுவது. ஆனால் இன்று பல கிராமங்கள் குழுவாக ஒரு தாங்கி வைத்து குடி நீரை அளந்து எடுக்கின்றனர்.

சுன்னாகம் கழிவு எண்ணெய் பிரச்சனை. இது எல்லோரும் அறிந்த ஒன்றே. சுன்னாகம் மின்சார நிலையத்தில் நிலத்தடியில் 40அடிக்கு மேல் கிணறு வெட்டி கழிவு எண்ணெயை சேமிக்கப்பட்டதால், நிலத்தடி நீருடன் அவை கலந்து விட்டதாக கூறப்படுகிறது. படிப்படியாக பரவும் விசக்கிருமியாக கழிவு எண்ணெய் அந்தப் பகுதியில் பரவிச் சென்றது. பலர் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகளிற்கும் சென்றதாக கூறப்படுகிறது. இந்த பிரச்சனைகளை


**ஒரு தாங்கியில் 30 குடும்பங்கள் வரை தண்ணீரை பெற்றுக் கொள்கின்றனராம். அப்படியாயின் எத்தனை கான் தண்ணீரை எடுக்க முடியும். மிஞ்சி போனால் 25லீற்றர் கானில் இரண்டு கான் எடுப்பதே சிரமம்.**

யடுத்து, ஊரை விட்டே சில குடும்பங்கள் நகரப்புறம் நோக்கி இடம் பெயர்ந்து வாடகைக்கு வீடு பெற்று வாழ்கின்றனர்.

ஆரம்பத்தில் இந்த பிரச்சனையின் தாக்கம் சுன்னாகம், இணுவில், சுதுமலை, தாவடி, மல்லாகம், போன்ற பிரதேசங்களில்த்தான் கண்டறியப்பட்டது. பின்னர் படிப்படியாக மற்ற இடங்களிற்கும் பரவியது. ஆனால் இப்பொழுது சிக்கல் என்னவென்றால், தற்போது கழிவு எண்ணெயின் தாக்கம் எப்படியுள்ளது? மாசுவீதமம் என்ன? போன்ற கேள்விகளிற்கு யாராலும் பதில் சொல்ல முடியாத நிலைதான் உள்ளது. அதாவது இந்த விடயத்தை உடனடி பிரச்சனையாக கருதி, நிவர்த்தி செய்ய சிறப்பான நிர்வாக பொறிமுறையொன்றை ஏற்படுத்த தவறிவிட்டோம் என்பது தெரிகிறது.

சிறிது காலம் பலரும் ஆய்வு, போராட்டம், அது. இதுவென பத்திரிகைகளில் செய்திகளாகி விட்டு, அவரவர் பிரச்சனைகளை பார்க்க சென்றுவிட்டனர். வழக்கம் போல மக்கள் கைவிடப்பட்டனர். அதாவது ஆபத்தான நீருடன் வாழ்க்கையை நடத்துங்கள் என அனைவரும் கைவிட்டு சென்று விட்டனர் போல்த்தான் தெரிகிறது. இப்படித்தான் அந்த பகுதி மக்கள் உணர்கிறார்கள். அதிகாரிகள், அரசியல்வாதிகளின் வீட்டு கிணறுகள், அல்லது மினரல் வோட்டர்களில் கழிவுஎண்ணெய் கலக்கும்வரை யாரும் கவனம் செலுத்த மாட்டார்கள் என்கிறார்கள் விரக்தியாக.

'குடிநீர் என்று கூறி தண்ணீர் தாங்கிகளை வைத்து நீர் தருகிறார்கள். அதனை தான் குடிப்பதற்கு பயன்படுத்துகின்றோம். ஆனால் எமது தண்ணீர் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே வயிற்றினுள் செல்வதால் மட்டும் தான் உடலிற்கு தீங்கு வருமா? குளிப்பது போன்ற வேறு தேவைகளுக்கு இதனை தானே பயன் படுத்த வேண்டியுள்ளது. இதனால் வரும் விளைவுகளிற்கு யார் பொறுப்பு சொல்வார்கள்' என்று அந்தப்பகுதியிலுள்ளவர்கள் கேட்பதிலுள்ள நியாயம் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரின் செவிகளிற்கும் சென்று சேரட்டும்.



இதேவேளை, இன்னொரு பெரிய பிரச்சனையொன்றும் உள்ளது. கழிவு எண்ணெய் கலந்து நீரை மக்கள் பலர் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள். பல மக்களிடம் அதுபற்றிய விழிப்புணர்வு இல்லை. அல்லது, அதை அருந்துவதை தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாதென்ற நிலை.

சுதுமலைவாசியொருவர் கூறினார் 'எமது ஊரில் பல கிணறுகளில் ஒயில் கலப்படம் வந்து விட்டது. சில குடும்பங்கள் எம்.ஓ.ஏச்க்கு கடிதம் கொடுத்து, கிணற்று நீரை பரிசோதித்து தண்ணீர் தாங்கி வைத்துள்ளனர். சிலர் தனிப்பட்ட ரீதியில் பணம் செலவு செய்து பரிசோதனை செய்து தண்ணீர் தாங்கி பெற்றுள்ளனர்' என்றார்.

தண்ணீர் தாங்கியில் நீர்விநியோகம் என்றால் அது அப்படியிருக்கும் என்பதை நம்மால் இலகுவில் கற்பனை செய்ய முடியும் தானே. ஆம்.. அதேதான். நீர்விநியோகம் சீராக இல்லையென பல மக்கள் எம்மிடம் புகார் தெரிவித்தனர். குறிப்பாக ஜே.129 சுதுமலை கிராம வாழ் மக்கள் தினம்தினம் நீர்ப்பிரச்சனையால் அல்லப்படுவதாக கூறுகின்றனர்.

ஒரு தாங்கியில் 30 குடும்பங்கள் வரை தண்ணீரை பெற்றுக் கொள்கின்றனராம். அப்படியாயின் எத்தனை கான் தண்ணீரை எடுக்க முடியும். மிஞ்சி போனால் 25லீற்றர் கானில் இரண்டு கான் எடுப்பதே சிரமம். தாரளமாக தண்ணீரை பாவித்த எமக்கு இன்று மருந்து போல் அளவையாக நீர். அதுவும் ஒழுங்காக கிடைப்பதில்லை என விரக்தியாக சொல்கின்றனர்.

இதே போன்று ஜே.183 சுதுவை, உடுவில் வாழ் மக்கள் தமது கிணற்றுநீரை பரிசோதிக்குமாறு கோரி மானிப்பாயில் உள்ள எம்.ஓ.ஏச் இற்கு கடிதம் ஒன்றின் மூலம் இரண்டு தடவைகள் விண்ணப்பித்துள்ளனர். அவர்கள் இந்த பிரிவு அல்ல. சுன்னாக பிரிவு. நாங்கள் இதனை சுன்னாகத்திற்கு

**ஆனைக்கோட்டையில் உள்ள பாடசாலை ஒன்றின் கிணற்றிலும் கழிவு எண்ணெய் தாக்கம் ஏற்பட்டதாக கூறி, பரிசோதனை நடத்தினார்கள். அது உறுதிசெய்யப்பட்டு பாட சாலைக்கு தண்ணீர் தாங்கி வைத்துள்ளனர்.**

அனுப்பி வைக்கின்றோம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். ஆனால் இதுவரையும் எந்த நடவடிக்கையும் இல்லை என கூறுகின்றனர்.


இந்த பகுதி மக்களும் ஜே.129 பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர் தாங்கிகளில் சென்று நீரை பெற்று கொள்வதனால் இரண்டு தரப்புமே போதிய நீரை பொற்றுக்கொள்ள முடியாத நிலையேற்படுகிறது. தாங்கியில் நீர் முடிந்தால் வழக்கம்போல கிணற்றுநீரை அருந்துகிறார்கள்.

'எங்கள் நீரில் ஒயில் படலம் இருப்பதை எம்மால் உணர முடிகின்றது. தண்ணீரை குடிக்கும் பொழுது நெஞ்செரிகின்றது. சத்தி வருவது போல் உள்ளது. அதே போன்று தேனீரின் மேலே எண்ணெய் போல் மிதக்கின்றது. ஆனால் எம்மால் 2500 கொடுத்து 3 மாதத்திற்கு ஒரு தடவை தனிப்பட்ட முறையில் பரிசோதிக்க முடியாது. ஏம்.ஓ.ஏச் உம் எமது கடிதத்திற்கு பதில் எதுவும் தரவில்லை. எனவே நாங்கள் இதை தான் குடிக்கின்றோம்' என்கின்றனர்.

சென்ற வாரம் ஆனைக் கோட்டையில் உள்ள பாடசாலை

ஒன்றின் கிணற்றிலும் கழிவு எண்ணெய் தாக்கம் ஏற்பட்டதாக கூறி, பரிசோதனை நடத்தினார்கள். அது உறுதிசெய்யப்பட்டு பாட சாலைக்கு தண்ணீர் தாங்கி வைத்துள்ளனர். பாடசாலை யென்பதால் கிணற்றுநீரை பரிசோதித்தார்கள். எல்லா மக்களும் பணம் கொடுத்து பரிசோதிக்கும் நிலையில் இல்லை. அப்படி பரிசோதித்து தண்ணீர் நிலவரத்தை அறிந்து கொள்ளாத பல குடும்பங்களின் பிள்ளைகள் வீடுகளிற்கு சென்று, ஆபத்தான நீரைத்தான் அருந்துகிறார்கள்.

சுதமலை, இணுவில், தாவடி வாழ் மக்களுக்கு தண்ணீர் தாங்கிகள் போதுமான அளவு வைக்கப்படா மையும் அவர்களுக்கு குடிநீர்



கிரமமாக வழங்கப்பாடதமை பற்றி மானிப்பாய் பிரதேச செயலா ளரிடம் கேட்ட போது, 'நான் ஒரு அரச ஊழியர் என்பதனால் இது பற்றி கூறும் உரிமை எதுவும் எமக்கு தரப்படவில்லை ஆகவே நீங்கள் இது பற்றி அறிய எம்.ஓ.எச் இற்கு தான் செல்ல வேண்டும்' என்றார்.

**வைத்தியர்.ஜீ. ரஜீவன்**
**சண்டிலிப்பாய்**
**சுகாதார வைத்திய அதிகாரி**


தண்ணீர் தாங்கிகளை வைப்பது பிரதேசசபையினுடைய வேலை. அதே போன்று தண்ணீரில் ஒயில் கலப்படம் வந்து விட்டதா என்று பரிசோதிப்பது "வோட்ட வோட்டினது" வேலை. எமது வேலை மேற்பார்வை வேலைகள் என்று சொல்லலாம். ஆனால் மக்களிடம் இருந்து வரும் கடிதங்களை பெற்று டி.எஸ் ஊடாக "வோட்ட வோட்டிற்கு" அனுப்பி அவர்கள் தண்ணீர் பரிசோதனையை மேற்கொண்டு உண்மையில் ஒயில் கலப்படம் இருப்பின் நாம் பிரதேசசபை யிடம் தகவலை கொடுத்தால் அந்த இடத்திற்கு தண்ணீர் தாங்கி களை அவர்கள் தான் வைக்க வேண்டும்.

இம் மக்களுக்கு கொடுக்கப்படும் தண்ணீர் பண்டத்தரிப்பில் இருந்து தான் பெற்று கொடுக் கப்படுகின்றது. ஆனால் மக்கள் கூறியது போன்று சில கிராமங்களிற்கு திருப்தியளிக்கும் வகையில் தண்ணீர் தாங்கிகள் வைக்கப்படவும் இல்லை. அதே போன்று தண்ணீர் ஒழுங்காக வழங்கப்படுவதும் இல்லை. இதற்கு காரணம் உள்ளது.

எமது பிரதேசசபையில் கொண்டுபோய்கொடுக்கும்பவுஸர் தாங்கிகள் மிக குறைவாகவே உள்ளது. அதே வேளை இப்பொழுது பவுஸர் ஓட்டு னரும் பற்றாக்குறையாக உள்ளது. அத்தோடு கிராமப்புறங்களுக்கு வாகனத்தை ஓட்டி சென்று தண்ணீர் வழங்குவது மிக சிரமம். அதற்கு காரணம் வீதிகளின் சீர்கேடு.

ஒரு பவுஸர் ஓட்டுனரால் ஒரு நாளுக்கு 4 தடவை தான் ஓட முடியும். அத்துடன் அவர்களின் நேரம் முடிந்து விடுகின்றது. அதனால் ஒரு நாளில் சில இடங்கள் நீர் கொடுக்கப்படாமல் தவறவிடப்படவே செய்கின்றன. ஆனால் பவுஸரின் எண்ணிக்கை கூடுமாக இருப்பின் தவறாமல் எல்லோருக்கும் சமமாக நீரை தினமும் வழங்க முடியும்.

அதேபோன்று ஒயில் இருப்பதாக சந்தேகித்து உறுதி செய்யப்பட்டு பிரதேச சபைக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் வீடுகளுக்கு கொடுக்க தண்ணீர் தாங்கி இல்லாமையால் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் உள்ளன. தாங்கிகள் பிரதேச சபைக்கே வராமல் உள்ளமையால் அவர்களால் மக்களுக்கு அதனை



எப்படி கொடுக்க முடியும். இங்கு நிதிப்பிரச்சினை காரணமாக இருக்கிறது. இதற்கு பிரதேச சபையோ நாமோ ஒன்றும் செய்ய முடியாது.

ஆனால் மக்கள் தமக்கு தாங்கிகள் போதாமல் உள்ளன என்ற விடயத்தையும் எமக்கு கடிதம் மூலம் சமர்பிக்கும் இடத்து அதனை பெற்று கொடுக்கும் முயற்சியை நாம் முன்னெடுப்போம் என்றார்.

**பொறியியலாளர் நந்தரூபன்**

இதே போன்று இந்த பிரச்சினை தொடர்பாக சுன்னாகம் தண்ணீர் பிரச்சினை தொடர்பான குழுத் தலைவர் நந்தரூபனுடன் பேசிய பொழுது அவரிடம் சில கேள்வி களை கேட்டோம்.

கேள்வி: ஓயில் கலப்படம் உள்ள பிரதேசங்களுக்கு குறிப்பாக சுதுமலை உடுவில் பிரதேசத்திற்கு குடி நீர் ஒழுங்காக வழங்கப்படுவ தில்லை. இதற்கான காரணம்?

இப்ப அந்த பிரச்சினை கைவிடப்பட்டு கொண்டு வருகிறது. ஓயில் கலப்படம் இல்லை பாதிப்பு இல்லை என்று தானே பலரும் கூறுகின்றனர். அத்தோடு அந்த பிரச்சினை இப்பொழுது ஒரு பெரிய பிரச்சினை . ஆனாலும் சுன்னாக மக்கள் தான் அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு தேவையான நீரை கொடுத்ததும் அவர்கள் வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருக்கின்றனர். அதே போன்று ஏனைய கிராம மக்களும் அதை பற்றி அக்கறை இல்லை என்பதால் அரசியல் வாதிகளுக்கும் அது சாத்தியமாக இருக்கிறது. அதனால் தண்ணீர் தாங்கிகளை கொடுப்ப திலும் குடி நீரை மக்களுக்கு திருப்தி கொடுக்கும் வகையில் பெற்றுக் கொடுப்பதிலும் அரசியல்வாதிகள் அக்கறை காட்டாமல் இருக்கின் றனர் என்றார்.

கேள்வி: அப்போ தண்ணீரில் ஓயில்கலப்புஇல்லைஎன்கிறீர்களா? அப்படியாயின் போன வாரம் ஆனைக்கோட்டை பாடசாலை நீர் பாதிக்கப்பட்டுள்ளதாக தாங்கி வைத்ததற்கு என்ன காரணம்?

நான் தண்ணீர் ஓயில் இல்லை சுத்தமானது தான் என்று சொல்லவில்லை. பாதிப்பு உள்ளது தான் . ஆனால் மக்கள் சரி அரசியல் வாதிகள் சரி சுயனலமாக தமது ஒவ்வொருவரும் அந்த நேரத்திற்கு பிரச்சினை தீர்ந்தால் போதும் என்று செயற்படும் பொழுது நாம் என்ன செய்வது. முதலமைச்சர் இப்பிரச்சினை தொடர்பான அறிக்கையினை எதிர்வரும் மாதம் வெளியிடுவதாக இன்றய தினம் (9.30.2015); செய்தி வெளிவந்துள்ளது. எனவே அவர்களின் கையிலும் மக்களின் கையிலும் தான் எல்லாம்.

நாம் மட்டும் தனியாக எதையும் செய்ய முடியாது என்றார். தமக்கு தண்ணீர் ஒழுங்காக கிடைக்கவில்லை, தமக்கு தண்ணீர் தாங்கி அதிகம் வேண்டும் மீண்டும் தமது தண்ணீர் தமக்கு வேண்டும் என்பதில் மக்கள் தான் ஒன்று திரண்டு கடுமையாக நிக்க வேண்டும். அப்பொழுது தான் அரசியல் வாதிகளும் அக்கறை கொள்வர். இல்லை மக்கள் தம் பாட்டில் இருந்தால்; அரசியல்வாதி களும் தம்பாட்டில் இருப்பர் பிரச்சி னையும் ஆறிப்போய் இருக்கும் என்றார்.

இவ்வாறே ஒவ்வொரு பொறுப் பதிகாரிகளும் தாம் என்ன செய்வது கொடுக்கும் வேலையையும் சொல் லும் வேலையையும் தானே செய்ய முடியும் என்கிறார்கள். மக்களும் தமக்குள் தாமே புலம்பிக்கொண்டு தினமும் குடிக்கும் தண்ணீ ருக்கே பயந்து வாழ்கின்றனர்.

ஆகவே தமது தண்ணீரையும் இழந்து இன்று கொடுக்கப்படும் நீரே ஒழுங்காக கிடைக்கப்பெறாத நிலையில் நச்சு நீரை அருந்தும் மக்களின் நிலையை கருத்தில் கொண்டு மக்களின் தேவைகளை பிரதேச சபையோ எம்.ஓ.ஏச்.ஓ நிறைவேற்ற முதலில் பிரதேசசபை எம்.ஓ.ஏச் இல் நிலவும் நிதி பிரச்சினையை தீர்க்க உயர் மேலதிகாரிக்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இப் பிரச்சினைக்கான தீர்வை தெளிவாக மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.










வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையான 27 வது இளைஞர் விளையாட்டு விழா புனித கென்றியரசர் மைதானத்தில் 27.9.2015 அன்று சிறப்பாக நடைபெற்றது.



# இணுவில் இந்துக்கல்லூரி



பி.சியா
siyapj27@gmail.com

யாழ்ப்பாணத்தின் இணுவில் மத்திய கல்லூரி குடா நாட்டின் சிறப்பு வாய்ந்த கல்விக் கூடங்களில் ஒன்றாகும். ஈழத்து திருவாரூர் என சிறப்பு பெறும் இணுவையின் கல்விப்பாரம்பரியத்துடன் நெருக்கமான தொடர்புடைய கல்லூரியிது. இந்த பாடசாலையில் வரலாறு நீண்டு நெடியது. 150 வருடங்களிற்கும் அதிக வரலாறுடையது. ஏண்ணற்ற சாதனையாளர்களை உருவாக்கி விட்ட கல்விக்கூடமிது. நீண்ட நெடிய பாரம்பரியமுடைய கல்விக் கூடத்தின் இன்றைய நிலையென்ன என்பதை ஆராய சென்றோம்.

ஆரம்பத்தில், வெங்கடாசல ஐயர் என்பவர் இணுவிலில் திண்ணை பாடசாலை ஒன்றை அமைத்து நடத்தி வந்தார். சிறிது காலத்தின் பின்னர் ஐயர் உறவினர்களை சந்திப்பதற்காகவும் தலயாத்திரையின் பொருட்டும் இந்தியா பயணமானார். இதன் காரணமாக திண்ணை பாடசாலையை இணுவையூர் அம்பிகைபாகர் பொறுப்பேற்று நடத்தினார். இவரது செயற்திறனால் இது 1864ல் சைவப்பிரகாச வித்தியாசாலை என பரிணாமமடைந்தது. ஆரம்பத்தில் பலரும் இதனை அம்பிகைபாகர் பள்ளிக்கூடம் என்றுதான் அழைத்தனர்.

1903ல் அம்பிகைபாகர் இறைவனடி சேர திரு எஸ்.கே.லோட்டன் திரு.சந்திரசேகரம் அதிபராக கடமையாற்றினார். பின்னர் அம்பிகைபாகரின் மகனாகிய ஏ.கே.இளைய தம்பி பாடசாலையின் அடுத்த முகாமையாளராக 1918ல் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். இவருக்கு பின் 1924ல் திரு. எம். எஸ் இளயதம்பியை முகாமையாளராக நியமித்தனர். இவரின் விருப்பத்திற்கு ஏற்ப 1936ல் இருந்து 1970 வரை எஸ். கந்தையாவையும் முகாமையாளராக அரசாங்கம் அங்கீகரித்தது.

இவர் 1927ல் இளைப்பாற அம்பிகைபாகரின் மகன் அ.க.வைத்தியலிங்கம் தலைமை ஆசிரியர் ஆனார். இவரின் பின்னர் எஸ்.கந்தையா அதிபராக பொறுப்பேற்றார். அதன் பின்னர் சில கசப்பான சம்பவங்கள் ஏற்பட்ட காரணத்தால் 1941ல் பாடசாலை இந்துபோட்டிடம் கையளிக்கப் பட்டது.

இக் காலகட்டத்தில் பாடசாலைக்கென 18பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது. இக் காலத்தில் முகாமையாளராக திரு எஸ்.அட்சலிங்கமும் தலைமை ஆசிரியராக நீர்வேலி பண்டிதர் திரு தம்பையாவும் நியமிக்கப்பட்டனர்.

இணுவில் பண்டிதர் திரு. இ.இராசலிங்கம் அதிபராக கடமை ஏற்று திறம்பட நடாத்தி வந்தார். இக் காலத்தில் இப் பாடசாலையை மகாவித்தியாலயம் ஆக்க வேண்டு;ம் என்று பாடசாலை சமூகமும் ஊர் மக்களும் முனைப்புடன் செயற்பட்டனர். உயர்தர வகுப்புக்கள் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் அவாவாக இருந்தது. உடுவில் கிராமசபை தலைவராக இருந்த திரு ச.முத்துலிங்கமும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி.தர்மலிங்கமும் தீவிர முயற்சி செய்து நிறைவேற்றினர். 1978ம் ஆண்டு மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

1993ம் ஆண்டு இந்து கல்லூரியென்ற பரிமாணத்தையடைந்தது.

2014ல் பாடசாலையின் 150 வது ஆண்டுநிறைவை காணும் வரை 25 அதிபர்கள் கடமையாற்றியுள்ளனர். வெங்கடாசல ஐயரால் தொடக்கப்பட்ட இப்பள்ளி 2014ல் திரு. மு. செல்வஸ்தான் அதிபரின் காலத்தில் 150வது ஆண்டினை கண்டது. ஆனால் சில இடையூறுகள் காரணமாக 2015ம் ஆண்டு இதே அதிபரின் தலமையில் 150வது ஆண்டுவிழா மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது என்கிறார் உப அதிபர் திருமதி. ச.தேவகரன் அவர்கள்.

பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்களில் 1996 தொடக்கம் 2013ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 83 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியினை ஒரே தடவையில் பெற்றுள்ளனர். 2012ம் ஆண்டில் தி.டினேசன், ஜே.அனோஜன் ஆகிய மாணவர்கள் தேசிய மட்ட ஈட்டி எறிதல் போட்டியில் பங்கேற்றுள்ளனர்.

யாழ்ப்பாண நகரிற்கு நெருக்கமாக அமைந்துள்ள இப்பாடசாலை நகரத்திலுள்ள பிரபல பாடசாலைகளிற்கு போட்டி போட்டுதான் பயணிக்க வேண்டிய நிலையுள்ளது. நகரப்பாடசாலைகளின் மீது மக்களிற்குள்ள மோகம் கிராமத்து பாடசாலைகளை பலியெடுத்து வரும் நிலையில், தரமான கல்வியை கொடுப்பது மட்டுமல்லாமல், ஊரிலுள்ள தரமான பாடசாலைக்கு செல்வதொன்றும் கௌரவக்குறைச்சலைஏற்படுத்தும் அல்லது கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துவதல்ல என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் சவாலையும் இந்தவகையான பாடசாலைகள் சந்திக்க வேண்டியிருக்கிறது.

"ஊருக்கொரு பள்ளி வேண்டும் என்னும் நாம் ஊரிலுள்ள பள்ளியை விட்டு செல்வது தவறாகும்"








தி.டினேசன்



ஜே.அனோஜன்



திரு.மு.செல்வஸ்தான்
அதிபர்

இந்துக் கல்லூரி உண்மையிலேயே பழமை வாய்ந்த தொன்மை நிறைந்த வளாகம். ஆனால் இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் பிரச்சினைகள் நிதி பிரச்சினைகள் தான் கல்லூரியின் மேலதிகவளர்ச்சியில் தடையாகவுள்ளது. அதை இந்த ஊரின் மக்கள் பழையமாணவர்கள் தான் உணர வேண்டும்.

இங்கே கல்விகற்கும் மாணவர்களில் 80 வீதமாணவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வசிப்பவர்கள். 30வீதமானவர்கள் தான் ஓரளவு வசதியான குடும்பத்தை சேர்ந்தவர்கள். இங்கு வருகின்ற பிள்ளைகளில் அனேகமானவர்கள் மதிய உணவை பாடசாலையை நம்பியே வருகின்றனர். பசியை போக்கி தான் பாடத்தை புகுத்த வேண்டிய கடமைப்பாடு எம்மிடம் உள்ளது என்பதனை நான் இங்ழி;க வந்த குறுகிய நாளிலே உணர்ந்து கொண்டேன்.

கல்வி மற்றும் கல்வியோடு தொடர்பு பட்ட ஏனைய செயற்பாடுகளுக்கு (விளையாட்டு, போசாக்கு உணவு, சுற்றுலா) என்று எதை செய்வதாக இருந்தாலும் நிதி ஒரு பிரச்சினையாகவுள்ளது.

மாணவர்கள் ஒரு சுற்றுலா செல்வதாக இருந்தாலும் பாடசாலைக்கு என்று ஒரு வாகனம் இல்லை. அதே போன்று மைதானம் உள்ளது. ஆனால் இவர்கள் விளையாடப் போதுமான பொருள்வளம் இல்லை. இவர்கள் நம்பி வரும் உணவை சிறப்பாக கொடுப்பதற்கு கூட இங்கே நிதி இடையூறு தான்.

இதற்காகஇங்குவரும்மாணவர்களிடம் பணம் அறவிடவும் முடியாது. காரணம் 80 வீதமான மாணவர்களின் குடும்ப சூழ்நிலையினை எடுத்து நோக்கினால் வறுமைப்பட்டவர்கள்.

அதேசமயம், இப்பொழுது இன்னொரு சிக்கலும் எழுந்துள்ளது. பாடசாலைக்கு போதிய கட்டிட வசதிகள் இருந்தாலும் மாணவர்களின் தொகை சடுதியாக வீழ்ந்துள்ளது. இதுதான் கல்லூரிக்கு மிக பெரிய பிரச்சினையாக உள்ளது.



சிறுவர் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விழிப்புணர்வு பேரணிகளும் கூட்டங்களும் நடந்தன. வவுனியாவிலும் மானிப்பாயிலும் நடந்த விழிப்புணர்வு பேரணிகள் இவை.



உலக முதியோர் தினத்திலன்று அனுராதபுரத்தில் உள்ள முதியோர் இல்லமொன்றில் நடந்த நிகழ்வில் வடமத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திஸாநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



# தொழில்வாய்ப்பை பெற்றுத்தரும் தொழில்நுட்பவியல் பாடம்!

க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடையும் மாணவர்களில் 50 சதவீதமானவர்கள் உயர்தரத்தில் கலைப்பாடத் துறையை தேர்ந் தெடுப்பதுடன், இவர்களில் பலர் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கக் கூடிய பாடங்களை தெரிவு செய்யாமல் தாம் இலகுவாக கற்கக் கூடிய பாடங்களையே தெரிவு செய்து கற்கின்றனர்.

மூன்று பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றால் மட்டும் பல்கலைக்கழக வாய்ப்பு கிடைத்துவிடாது. நீங்கள் தெரிவுசெய்த பாடங்களின் இஸட் புள்ளி (Z-score) கணிப்பீட்டின் அடிப்படையிலேயே பல்கலைக் கழகத் தெரிவு இடம்பெறுகின்றது. கலைத்துறையைப் பொறுத்த வரையில் அதிகளவானோர் தெரிவு செய்யும் பாடங்களுக்கான இஸட் புள்ளி (Z-score) மிகவும் குறை வானதாகவே காணப்படும். இவ்வாறு இஸட் புள்ளி குறைந்த பாடங்களை தெரிவுசெய்து பரீட்சையில் "ஏ" சித்தி பெற்றாலும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து விடாது.

எனவே, க.பொ.த. சாதாரணத ரத்தின் பின்னர், உயர்தரத்துக்கான பாடத்தெரிவு மாணவர்களுக்கு மிக முக்கியமானது. பாடசாலைக் கல்வியின் பின்னர் பட்டக்கல்வி யைத் தொடர்வதற்கோ, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள் வதற்கோ இது மிக அவசியமானது. குறிப்பாக உயர்தரத்தில் கலைத் துறையை தேர்ந்தெடுக்கும் மாண வர்கள் இலகுவாகக் கற்கக்கூடிய பாடங்களைத் தெரிவு செய்யாது, பல்கலைக்கழக அனுமதி கிடைக் கக்கூடிய பாடங்களைத் தேர்ந் தெடுத்து கற்க வேண்டும்.

**வடக்கு மாகாணத்தில் இந்தப் புதிய பாடத்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகள்.**

| மாவட்டம் | பாடசாலைகள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வேலணை மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| கிளிநொச்சி | கிளி.மத்திய கல்லூரி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம். |
| வவுனியா | வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், மடுக்கந்தை தேசிய பாடசாலை, எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம். |
| முல்லைத்தீவு | முல்லைத்தீவு தம்புத் நுவர சிங்கள மகா வித்தியாலயம். |

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந் துள்ள இன்றைய தொழில் உலகுக்கு ஏற்ற வகையில் இந்தத் துறையில் பாடநெறிகள் உள்ளடக்கப்பட் டுள்ளன.

**இப்பாடத்துறை அனுமதிக்கான அடிப்படை தகுதிகள்!**

க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைவதுடன் யாதாயினும் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருப்பதும் அவசியமாகும்.

**இப்பாடத்துறையின் இரண்டு பிரிவுகள்**

01. பொறியியல் தொழில் நுட்பவியல் (Engineering Technology)
02. உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பியல் (Biosystems Technology)

பொறியியல்தொழில்நுட்பவியல் பிரிவில் பொறியியல் தொழில்நுட்ப பாடத்தையும், உயிரியல் முறை மைகள் தொழில்நுட்பவியல்பிரிவில் உயிரியல் தொகுதி தொழில்நுட்ப பாடத்தையும் தெரிவு செய்வதுடன், மேலும் இரு பிரிவுகளும் தொழில்நுட்பவியலுக்கான விஞ் ஞானப் (கணிதம், பௌதிகம், இரசா யனவியல், உயிரியல், தகவல்தொழில் நுட்பம் ஆகிய உள்ளடக்கம்) பாடத்தையும், கீழ்வரும் பாடத் தொகுதியில் ஏதாவது ஒரு பாடத் தையும் தெரிவுசெய்தல் வேண்டும்.

1. பொருளியல்
2. புவியியல்
3. மனைப் பொருளியல்
4. ஆங்கிலம்
5. தொடர்பாடல் மற்றும் ஊடகத் துறை
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
7. சித்திரம
8. வணிகக் கல்வி
9. விவசாய விஞ்ஞானம்
10. கணக்கியல்

இரண்டு பாடப்பிரிவுகளுக்கும் கோட்பாட்டு அறிவு மட்டுமன்றி பிரயோக பயிற்சிகளுடன், தேர்ச்சி விருத்திகளையும் கல்லூரிக்கு அண்மையிலுள்ள தொழற்பயிற்சி நிறுவனங்களில் பெற்றுக்கொள்ள முடியும். மரபுரீதியான வகுப்பறை கற்பித்தலிலுடன் ஒப்பிடுகையில் இது முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

தொழில்நுட்பவியல் துறையை தெரிவுசெய்வதில் உள்ள நன்மைகள்.

- 2015ஆம் ஆண்டு முதல் அனைத்துப் பல்கலைக்கழகங் களிலும் தொழில்நுட்பவியல் பீடத்தை ஆரம்பிக்க பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதால், இத்துறை யில் உயர்தரத்தில் சிறப்பாக சித்திபெற்றால் பல்கலைக்கழக அனுமதி பெற்று தொழில்நுட்ப வியல் பாடநெறியில் பட்டப் படிப்பை மேற்கொள்ளமுடியும்.
- இத்துறையில் சித்தியடையும் மாணவர்கள் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சினால் புதி தாக உருவாக்கப்பட்டுவரும் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) அனுமதி பெற்று டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும்பட்டப்படிப்பைதொடர முடியும்.
- மேலுள்ளஇரண்டிலும்அனுமதி கிடைக்காதவர்கள் இலங்கை ஜேர்மன் தொழில் நுட்பக் கல்லூரியில், உருகொட வத்தை மோட்டார் வாகன தொழில்நுட்ப நிறுவனம் அல்லது கட்டுநாயக்கா பொறி யியல் தொழில்நுட்ப நிறுவன தில் அனுமதி பெற முடியும்.




- ஏதோ காரணத்தால் தொழில் நுட்பப் பாடத்தில் சித்தியடை யாத மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுக்கொண்ட பிரயோக அறிவுக்கு ஏற்ப திறன்விருத்தி அமைச்சினால் தேசிய தொழில் தகைமை (NVQ-III) மூன்றாம் மட்டச் சான்றிதழ் வழங்கப்படும். இந்தச் சான்றிதழுடன் அவர்கள் தொழில்வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது தொழில்நுட்பக் கல்லூ ரிகளில் இணைந்து 18 மாதங் களில NVQ-IV சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதன்பின் நேரடியாக பல்கலைக் கழகக் கல்லூரியில் இணைந்து தொழில்நுட்பப் பட்டத்தையும் (B.Tec) பெற்றுக்கொள்ள முடியும்.



புகழ்பூத்த வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சமுத்திர தீர்த்தம் கடந்த 28ம் திகதி வெகுசிறப்பாக நடந்து முடிந்துள்ளது. பல்லாயிரக்காணக்கான மக்கள் குழுமியிருந்த நிலையில் தீர்த்தோற்சவம் நடந்து முடிந்தது.



வவுனியா கல்நாட்டியகுளம் பகுதியில் காணப்படும் ஒற்றுமை கோயில். இங்கு நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் தமிழர்கள், சிங்களவர்கள் இணைந்து இப்படியொரு வழிபாட்டிடம் அமைத்துள்ளனர். அறுவடைகாலங்களில் அனைவரும் ஒற்றுமையாக பொங்கல் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

## 1-ம் பக்க தொடர்ச்சி

யுத்தத்தால் பெரும் அழிவுகளை சந்தித்த வடக்கின் அபிவிருத்தி, மீள்கட்டுமானங்களிற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக ஒரு தொகை நிதி வடக்கு மாகாணசபைக்கு வழங்கப்படவிருந்தது. 'சமாதானத்தை கட்டியெழுப்பல்' என்ற திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படவிருந்தது. எனினும், நம்மவர்கள் அதை கோட்டைவிட்டு விட்டார்கள் என்ற அளவில் மட்டும் ஒரு செய்தி நமது காதுகளை எட்டியது. உடனே தீபத்தின் புலனாய்வு செய்தியார்கள் களத்தில் இறங்கினார்கள். பலதரப்பையும் தொடர்பு கொண்டு நமது குழு திரட்டிய ஆதாரங்கள் பல அதிர்ச்சியளிப்பவையாக இருந்தன.

என்ன நடந்தது?

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் வடக்கு மாகாணசபையை எதிரியைப் போலவே நடத்தினார். ஏற்கனவே 13வது திருத்தச்சட்டத்தில் மாகாணசபைகளிற்கு வழங்கப்பட்டிருந்த பல்வேறு அதிகாரங்களை பிடுங்கி, இதனை வலுவற்ற ஒன்றாக மாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.

யுத்தத்தால் பல அழிவுகளை சந்தித்த வடக்கை அபிவிருத்தி செய்ய தெற்கு அரசாங்கத்தை மட்டும் நம்பி பலனில்லையென்ற நிலையேற்பட்டபோதுதான், முதலமைச்சர் நிதியம் பற்றிய பேச்சு எழுந்தது. புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஊடாக கிடைக்கும் நிதியை வடக்கில் பயன்படுத்த அந்த நிதியம் உதவுமென கருதப்பட்டபோதும்,

**சர்வதேச விசாரணை நடத்தியே தீருவோம் என நமது அரசியல்வாதிகள் கூறிவந்த நிலையில், இதற்கு வேட்டு வைத்தது அந்த அறிக்கை. சர்வதேச விசாரணை வலுவிழந்து போகிறதென்பதை சனல் 4 அம்பலப்படுத்தியது**


முன்னைய அரசு அதற்கும் உடன்படவில்லை.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் ஜனாதிபதியை சந்தித்தபோது வடக்கு முதல்வர் பேசிய முக்கிய விடயங்களிலொன்று முதலமைச்சர் நிதியம். அப்போது சில நிபந்தனைகளுடன் அதற்கு கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டது.

ஆட்சிமாற்றத்தின் பின்னரான சூழலில் நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும்

கட்டியெழுப்ப உலகளாவிய அமைப்புக்கள் பல நிதிவழங்க தயாராக இருந்தன. இந்த திட்டத்துடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமும் களமிறங்கியது. அதாவது வடக்கு மாகாணசபையின் ஊடாக இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்தலாமென கணக்குப் பண்ணியது.

ஏற்கனவே சில தன்னார்வ நிறுவனங்களும் இந்த திட்டத்துடன் களமிறங்க எத்தனித்திருந்தார்கள் என்கிறார்கள் விடயமறிந்தவர்கள். எனினும் அப்பொழுது அது சாத்தியப்பட்டிருக்கவில்லை. நிதி



### 150 மில்லியன் ரூபா

**இந்த திட்டத்தின் மொத்த பெறுமதி எவ்வளவென்பது இன்னும் உறுதி செய்யும் தகவல் மூலங்களிலிருந்து வெளியாகவில்லை. என்றாலும் 150 மில்லியன் ரூபா என்கிறார்கள். தமிழ்தேசிய கூட்டமைப்பின் கனடா பிரமுக ரொருவர் எழுதிய கட்டுரையில் 150 மில்லியன் ரூபா என்றுதான் குறிப்பிட்டுள்ளார். என்றாலும் அதை உறுதி செய்யும் தகவல்கள் கிட்டவில்லை.**

நிறுவனங்களோ, நாடுகளோ நேரடியாக வடக்குமாகாண சபையின் ஊடாக நிதி வழங்க முடியாதென்பதே பழைய நிலவரம்.

### தூசு தட்டப்பட்ட புரஜெக்ட்

மைத்திரி ஆட்சிக்கு வந்ததும், முதலமைச்சர் நிதியம் தொடர்பில் சில சாதகமான சமிக்ஞைகளை காட்டினார். இதனையடுத்து, வடக்கு மாகாணசபைக்கு தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட தரப்பினர் நேரடியாக பணம் கொடுப்பதில் சிக்கல்கள் இருக்கவில்லை.

இந்த சமயத்தில்த்தான் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் 'சமாதானத்தை கட்டியெழுப்பல்' நிகழ்ச்சி திட்டத்தை கையிலெடுத்தது. இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு, வடமாகாணசபையென்பன முழு ஆர்வமாக இருந்தன.

முறைப்படி இப்படியான திட்டங்களின் இணைப்பாளர்களை இலங்கை அரசுதான் நியமிக்க வேண்டும். அவர்களிற்கான சம்பளத்தை ஐ.நா வழங்கும். இந்த விடயத்தில் இலங்கை மத்திய அரசு மிக தாராளமாக நடந்து கொண்டு, வடக்கில் நடைமுறைப் படுத்தப்படும் இந்த திட்டத்தின் இணைப்பாளராக பொருத்தமான ஒருவரை நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள் என ஐநாவிடமே அந்த விடயத்தை மத்திய அரசு கொடுத்து விட்டது.

### சிக்கல் ஆரம்பம்

இதன்பின்னர்தான் சிக்கல் ஆரம்பித்திருக்கிறது. முதல் சிக்கல் பெயரில் ஆரம்பித்துள்ளது.

வடக்கை மையப்படுத்திய திட்டத்தில், இணைப்பாளராக வடமாகாணசபையே ஒருவரை தேர்வு செய்து கொள்ளட்டுமென ஐநாவும் விரும்பியது. பொருத்தமான ஒருவரை தேர்வு செய்யும் பொறுப்பை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என அந்தப்பொறுப்பை வடக்கு முதல்வரிடம் கொடுத்தது ஐநா.

முதல்வர் கண்ணைமூடிக் கொண்டு பரிந்துரைத்த பெயர் நிமலன் கார்த்திகேயன். அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றுள்ள இவர் தற்போது யாழில்த்தான் முகாமிட்டுள்ளார். இவர் முதல்வரின் நெருங்கிய உறவுக்காரர் என அண்மையில் சில ஊடகங்கள் சர்ச்சையை கிளப்பியிருந்தன. தற்போது அவர்தான் முதல்வரின் விவகாரங்களில் முக்கிய முடிவெடுக்கும் நபராக உள்ளார் என்று ஒரு தரப்பு கூறுகிறது.

எனினும், இவரது தேர்வு ஐநாவிற்கு பொருத்தமானதாக தோன்றவில்லை. இவர் ஏற்கனவே ஐநா முகவரமைப்பொன்றில் பணியாற்றியவரென்றும், பின்னர் அதிலிருந்து விலகினார் என்றும் சில தரப்புக்கள் கூறுகின்றன.

இணைப்பாளரின் பெயரை முதல்வர் அளவிற்கதிகமாக பரிந்துரைத்ததாகவும், அவருக்கு சார்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் அதிக கரிசனையை எடுத்துக் கொண்டதாகவும் ஐநா தரப்பில் விசனமான தொனியில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் வடக்கு முதல்வர் அமெரிக்காவிற்கு பயணமொன்றை செய்திருந்தார். அந்த சமயத்தில் முதல்வரை ஐ.நா பிரதானிகள் சந்தித்து பேசியிருந்தனர். இந்த திட்டம், மற்றும் ஐநா அறிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் அப்பொழுது பேசப்பட்டதாக தெரிகிறது.

### 'செக்' வைத்த சனல் 4

இந்தப் பேச்சுக்கள் முடிந்த சில தினங்களிலேயே சனல் நான்கு ஒரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டிருந்தது. இதுவரை தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் சர்வதேச விசாரணையே நடக்கும் என கூறிவந்தனர். பாராளுமன்ற தேர்தல் மேடைகளில் சர்வதேச விசாரணை நடத்தியே தீருவோம் என நமது அரசியல்வாதிகள் கூறிவந்த நிலையில், இதற்கு வேட்டு வைத்தது அந்த அறிக்கை. சர்வதேச விசாரணை வலுவிழந்து உள்ளக விசாரணை பொறிமுறையே ஏற்படுத்தப்பட போகிறதென்பதை சனல் 4 அம்பலப்படுத்தியது.

இது ஐநா உள்ளிட்ட தரப்புக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. முதல்வருடன் பேசிய விவகாரங்களையே சனல் 4 வெளியிட்டுள்ளது, விடயங்களை முதல்வர் தரப்பே கசியவிட்டதாக



### யாரிந்த நிமலதாஸ்?

**1990களின் ஆரம்பங்களிலிருந்து பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றி வந்தவர். பின்னர் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சில காலம் பணியாற்றினார். சமாதான உடன்படிக்கை சீர்குலைந்து யுத்தம் ஆரம்பித்ததற்கு நெருக்கமான சமயங்களில் நாட்டிலிருந்து வெளி யேறி அவுஸ்திரேலியாவில் குடியேறினார். அவர் அங்கு செல்வதற்கு முன்னரே அவரது குடும்பத்தினர் அவுஸ்திரேலியாவில் குடியேறிவிட்டனர்.**

**வடக்கு முதல்வருடன் இவரது குடும்பத்தினர் நெருக்கமானவர்கள் என ஏற்கனவே ஊடகங்களில் கூறப்பட்டுவருகிறது. வடக்கு முதல்வர் பதவிக்கு வந்ததும், நிமலன் அவுஸ்திரேலியாவில் இருந்து திரும்பி முதல்வரின் அலுவலகத்தில் செல்வாக்குமிக்க அதிகாரியாக உள்ளார். முதல்வரின் செயற்பாடுகள், உரைகள் அனைத்திலும் நிமலனின் செல்வாக்கு உள்ளதாக கூறப்படுகிறது.**

**மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், அவருடன் முரண்பட்டு அறிக்கையொன்றை வடக்கு முதல்வர் வெளியிட்டிருந்தார். மகிந்த செய்யத்தவறியவையென பல விடயங்களை முதல்வர் பட்டியலிட்டிருந்தார். அதில் ஒரு விடயம் தனது பணிகளிற்கு உதவுவதற்காக ஒரு ஆலோசகரை வைத்திருக்க கேட்டதாகவும், அவருக்கு இரட்டை குடியுரிமை வழங்கக் கேட்டிருந்ததாகவும், ஆனால் மகிந்த மறுத்து விட்டதாகவும் கூறியிருந்தார். முதல்வர் குறிப்பிட்ட நபர் நிமலனாக இருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.**

**சுருக்கமாக சொன்னால் நிமலன் கார்த்திகேயனிற்கு தெரியாமல் முதல்வர் அலுவலகத்தில் அணுவும் அசையாதென்கிறார்கள்.**

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்

**Justice C.V.Wigneswaran**
**Chief Minister - Northern Province**

Telephone 021 221 7311, 021 320 2465, 021 221 7313
Fax 021 221 7227
26, Somasundaram Avenue, Chundikuli, Jaffna
email

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration

My No NP/CM/Res/0160/2015 Date 15.08.2015

Subinay Nandhy Esqr,
UN Resident Coordinator and UNDP Representative
UN Headquarters,
Baudhaloka Mawatha,
Colombo 7

Dear Mr. Subinay Nandy,

I acknowledge with thanks your letter dated 5th August 2015.

Having considered the contents outlined therein I confirm the following for record-

1. As regards the appointment of Special Advisor, I have stated in writing the discussions, understanding and agreements we have had on the matter in my communications with you on 15 May 2015, 23 June 2015 as well as the exchanges in 2014. As such, there is no need for me to respond any further.

2. With regard to your reference to briefing TNA Representatives, as Chief Minister of Northern Province (CM-NP), I have stated the nature and type of approach UN Resident Coordinator's Office should have adopted in his interactions with CM-NP and Northern Provincial Council (NPC) bearing in mind UN values, good governance principles and protocols that need to be adhered to by UN without interference in the Governance aspects of NPC.

   Needless to say it should have been borne in mind that NPC came into being as a new governance structure within the framework of the Thirteenth Amendment after the absence of democratic governance for more than a quarter of a century. It should have also been borne in mind that since the dissolution of the North-East Provincial Council by the then President in March 1990, the Northern Province was directly under Governor's rule mainly spear headed by military commanders.

3. I draw your attention to the issues discussed at the meeting I had with Assistant Secretary General (ASG) UN Peace Building Support (UN PBS) and his team on Friday, 10 July 2015 on the concept note (provided at the meeting) as well as your speech made at the donor conference on comprehensive policy framework and formulation of the resettlement action plan held on 4 June 2015 (the full text of speech appeared in the Daily News of 6 June 2015), which were formulated in a non-inclusive manner continuing the practices adopted by UN Coordinators Office in cooperation with Presidential Task Force (which came into being in May 2009/at the end of a brutal war).

   Despite the insistence and pressure by ASG-UN PSBU at the meeting at his office on 10 July 2015, I did not give my consent to the unilaterally prepared concept note, without consulting the Board of Ministers of NPC.

4. As you are aware there were repeated requests for participatory and consultative approach with Northern Provincial Council (NPC) on UN Inter Agency Joint Needs Assessment (JNA) focused on humanitarian aspects since the presentation made by UN OCHA in February 2014 at my office in Jaffna.

   NPC urged your office to advocate with the Government of Sri Lanka to enable equal partnership of NPC in the JNA process to review the work done till February 2014 and to make it relevant and meaningful for the post war context of Northern Province.

5. Further, I refer to the meeting I had with Mr J. Feltman, Deputy Secretary General, UN DPA on Monday, 13 July 2015, wherein I revisited the issues discussed with ASG UN PBS and requested UN as a family to adopt a conflict sensitive and 'do no harm' based approach with NPC. In addition, I have provided him with a few documents relating to communications between our offices.

   Consequently, in my letter dated 27 July 2015 addressed to Mr Feltman,I have outlined in detail the issues discussed at above meetings and reasons for the rejection of the UN Concept Note. I believe you would have been apprised on the foregoing via your official channels.

   In addition, I stated that NPC will be in a position to work in partnership with UN Sri Lanka provided there is a principled and value' based approach adopted by UN in their interactions with NPC.

6. I refer to the UN Secretary General's Spokesperson's press statement dated 5 August 2015 where Ms. **STEPHANE DUJARRIC** had clearly stated thus and I quote
   - *"The same principle of inclusive, participatory and consultative processes will apply to UN support for the establishment of credible accountability and reconciliation mechanisms that meet international standards.*
   - *The UN believes that there should be genuine and inclusive consultations on a national basis, including the Northern Province, to help arrive at the right model in the Sri Lankan context".*

(http://www.un.org/sg/spokesperson/highlights/?HighD=8/5/2015&d_month=8&d_year=2015 )

7. Considering the above, I wish to reiterate that it is important that UN Sri Lanka adopts a conflict sensitive, lessons learned approach based on UN Values and Good Governance Principles with NPC to establish future cooperation to serve the needs and priorities of the post war communities in Northern Province. What happened at the closing stages of the war and the part played by the UN at that time is fresh in the minds of our people.

In response to the request made by Mr Feltman as a point of contact for my future interactions with UN, I inform you I am nominating Mr. Nimalan Karthikeyan. He will work with me and also with the Board of Ministers of NPC to establish process for effective engagement in the best interests of our key stakeholders.

I look forward to meeting with you in the aftermath of elections to discuss above matter.

Yours sincerely

C V Wigneswaran
Chief Minister
Northern Province

Copy - Mr J.Eliasson, DSG UN
Mr J Feltman, DSG, UN DPA
Mr. H Xu, ASG, UNDP Administrator & Director, Regional Bureau for Asia and Pacific
Mr. R.Sampanthan, Leader, TNA

ஐநா தரப்பு வடக்கு முதல்வர் தரப்பை நோக்கி கைநீட்டியது. 'இரகசிய பேச்சுக்களிற்கு இவர் சரிவராமாட்டார்' என இந்த சம்பவத்துடன் ஐ.நா விடயத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டு விட்டது, நிதிவழங்கும் திட்டமும் கிட்டத்தட்ட கைவிடப்பட்ட நிலைக்கு சென்றுவிட்டதென்கிறார்கள் சிலர்.

இந்த நிதித்திட்டம் தொடர்பில் இன்னும் அதிக தகவல்களிற்கான தகவல்களை தீபம் சேகரித்து கொண்டிருக்கிறது. இதேசமயத்தில், முதல்வரிற்கு நெருக்கமான தரப்பினரும் அந்த நிதித்திட்டம் தொடர்பில் வேறுவிதமான தகவல்களை கூறுகின்றனர். அது, உள்ளக விசாரணையுடன் தொடர்புடைய திட்டம், சர்வதேச விசாரணைகோரும் நமது வாய்களை காசு தந்து அடைக்கப் பார்த்தனர் என அவர்கள் கூறுகின்றனர்.

புதிய ஆட்சிமாற்றத்தின் பின்னரான மேற்குநாடுகளின் நிகழ்ச்சிநிரல், மனிதஉரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான பிரேரணையுடன் இந்த நிதி தொடர்புபட்டது. உள்ளகவிசாரணையென கதையை முடித்தவர்கள், இப்படியான நிதிகளை பயன்படுத்தி அதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்த முயற்சித்தார்கள். என்றாலும், நமது முதல்வர் அந்த திட்டத்தை முறியடித்து விட்டார். தமிழ் தலைவர்களில் சர்வதேச விசாரணை தேவையென்பதில் உறுதியாக உள்ள முக்கிய தலைவர் அவர்தானே என கேட்கிறார்கள் முதல்வரிற்கு ஆதரவான தரப்பினர்.

**United Nations**
**Office of the Resident Coordinator**
Colombo, Sri Lanka

August 28, 2015

Dear Chief Minister Wigneswaran,

Thank you for your letter dated 15 August 2015. I am pleased to note your suggestion to discuss matters of possible collaboration with the UN after the parliamentary elections. I now look forward to you indicating a date for the meeting.

In the meantime, I consider it important to set the record straight by reiterating the UN positon on a number of your assertions as noted in your 15 August letter as well in previous communications to me and other senior UN officials. I would particularly focus on three issues related to the appointment of the proposed Special Advisor, Joint Needs Assessment and the Peacebuilding Programme.

Firstly, in relation to the proposed Special Advisor, the UN on numerous occasions has advised you that there was no donor willing to fund a standalone advisory position for a pre-selected candidate without following standard competitive process for recruitment. In addition, excessive canvassing by the proposed Special Advisor made it even more untenable for the UN to consider such an appointment. We regret that the appointment of the proposed Special Advisor was seen as an entitlement and discussions to partner with the UN have been held hostage to a positive outcome on this.

Secondly, in relation to the Joint Needs Assessment (JNA), your repeated references to the process fail to take cognizance of a few key points. As noted in my letters to you on previous occasions, the JNA process started much before the election of the Northern Provincial Council. In addition, on your election as the Chief Minister, in one of our early meetings, I shared with you the outcome of the preliminary phase of analysis carried out as part of the JNA. As you know, the JNA process was endorsed and approved by the Humanitarian Country Team, which is a body consisting of representatives from national and international humanitarian NGOs, Red-Cross movement, bilateral development partners and the UN. It is a technical exercise based on established methodology, which is part of the standard stocktaking undertaken by the Humanitarian Country Team in close collaboration with the host government, while transiting from humanitarian to longer term development activities. The JNA, as you know, assesses the residual humanitarian priorities of resettled population and the remaining IDPs from across ten districts in four provinces of the country, including the North.

Your noting that "*..You urged my office to advocate with the Government of Sri Lanka to enable equal partnership of NPC in the JNA process..*" perhaps aptly describes the misperception that you convey about the role of the UN. What you do not note in your response is that we advised you to directly communicate with the central government – like you did while pursuing central government approval for the proposed Special Advisor. I offered to arrange for you and your Board of Ministers a comprehensive briefing on the JNA, including elaborating on the scope, purpose and key outcomes. Unfortunately you never responded to the request. This offer of the UN stands to-date.

We therefore were surprised that after your meetings in New York in July, different media channels were presenting the draft concept note that was shared with you as something that was "leaked".

Justice C.V. Wigneswaran
Chief Minister, Northern Provincial Council, Jaffna

United Nations, Office of the UN Resident Co-ordinator
202-204 Bauddhaloka Mawatha • P.O.Box 1505, Colombo 7, Sri Lanka
Telephone: +94 (1) 2583805 • Fax: +94 (1) 2581116 or 2589691 • E mail: info.lk@one.un.org

Given that the draft concept note was shared with stakeholders including yourself in addition to me making a public statement setting out the peacebuilding framework on 4 June, there was nothing to be leaked. This, in our view, does not meet the standard of transparency that is expected of any high office. The Peacebuilding Fund concept note setting out the initial thinking of the Government of Sri Lanka and the UN has been discussed extensively with Government stakeholders and civil society organizations. Henceforth, I strongly encourage you to convey all your concerns and comments to the Ministry of Foreign Affairs, given that the Ministry represents the Government of Sri Lanka to formally seek support from the Peacebuilding Fund. I would also like to clarify that there is no direct connection between the JNA and the Peacebuilding Programme as you allude to in your letter to other UN officials.

I avail this opportunity to highlight that UN agencies have been working alongside the people of conflict affected areas in different phases of displacement and return that started long before you took office as the Chief Minister of the Northern Province. This association continues through an extensive UN programme of support in the five districts of the Northern Province. You will recall that the UN has invited you for ceremonies supporting livelihood generation programmes in your Province, which you have repeatedly declined. We therefore wish to note our strong disagreement with your comment that the UN is not being sensitive to the needs of conflict affected people. The UN, in its operations, will continue to be guided by its core mandate in all its programmes and will not be subordinate to any specific political agenda.

I would also like to point out that in reference to your comments related to my duties and responsibilities as the UN Resident Coordinator in dealing with the Tamil National Alliance, it is best if we operate on the principle of mutual respect and understanding. I would also like to clarify that UN's engagement with you and your office will continue to focus only on projects specific to the Northern Province that fall within the remit of devolved subjects.

I thank you for nominating a representative to undertake future interactions with UN. I wish to encourage your nominated representative to liaise with Mr. Ganesarajah Rajendrakumar, Assistant Country Representative, Governance Empowerment and Social Inclusion Team at UNDP. He will represent UNDP and has been tasked to discuss matters specifically related to the proposed component under the Peacebuilding Fund that will be led by UNDP to support the Northern and the Eastern Provincial authorities.

As mentioned above, on the overall concept and framework of the Peacebuilding Fund the UN will liaise with the Ministry of Foreign Affairs, which will coordinate inputs from different implementing agencies, including the Northern Provincial administration.

I will be sharing this letter with senior UN officials in New York as is standard practice. Looking forward to further deepening UN's engagement with the Northern Province.

Yours sincerely,

Subinay Nandy
UN Resident Coordinator and
UNDP Resident Representative

cc: Hon. R. Sampanthan, Leader, TNA

United Nations, Office of the UN Resident Co-ordinator
202-204 Bauddhaloka Mawatha • P.O.Box 1505, Colombo 7, Sri Lanka
Telephone: +94 (1) 583805 • Fax: +94 (1) 581116 or 589691 • Internet: fo.lka@undp.org

### சிக்கலான சமஅந்தஸ்து

இந்த திட்டத்தில் உடன்பட முடியாதுள்ளதாக கடிதத்தில் ஐநா தரப்பிலிருந்து முதல்வரை நோக்கி குறிப்பிடப்பட்டுள்ள இன்னுமொரு முக்கிய குற்றச்சாட்டு, முதல்வர் சமஅந்தஸ்து கோரியது. இந்த திட்டம் தொடர்பான பேச்சுக்களில் இலங்கை அரசையும், வடமாகாணசபையையும் சமபங் காளிகளாக பேணி பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென முதல்வர் தரப்பு கோரியிருந்தது.

எனினும், இதற்கு ஐநா மறுத்துவிட்டது. 'உங்கள் உள்வீட்டு சிக்கலிற்குள் நாங்கள் வரவில்லையப்பா' என்பதைப் போன்ற பாணியில் பதிலளித்துள்ளது.

அதேசமயம் முதல்வரின் கடிதத்தில் உள்ள ராஜதந்திர அணுகுமுறை சிலர் விமர்சிக்கின்றனர். 'இப்படி பேசினால் நான் உங்களுடன் கதைக்க மாட்டேன்' பாணியில் முதல்வர் கூறியிருப்பது சரியான ராஜதந்திரமாகாதென்பது அவர்களின் அபிப்பிராயம்.

இப்பொழுது எழுந்துள்ள கேள்வி, வடக்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்படவிருந்து நிதியை வடமாகாணசபை கோட்டை விட்டதா? அல்லது விலைபேகாமல் இருந்ததா என்பதே.

எதுஎப்படியோ, இந்த விவகாரம் அண்மையில் மேலோட்டமாக வடமாகாணசபையிலும் பேசப்பட்டது. தமிழரசுக்கட்சியின் ஒரு பகுதியினர் முதல்வரிற்கு எதிராக வரிந்துகட்டிக் கொண்டு களமிறங்கியுள்ள நிலையில், அவர்களும் இதனை முதல்வரிற்கெதிரான பிரமாஸ்திரமாக பயன்படுத்த ஆரம்பிப்பார்கள் என நம்பலாம்.

இந்த திட்டம் தொடர்பான பேச்சுக்கள் மாகாண அமைச்சர்களிற்கு தெரிந்தே நடத்தப்பட்டதாக முதல்வர் கூறினாலும், மாகாண சபையின் ஏனைய உறுப்பினர்கள் பத்திரிகைகளிலேயே இதனை படித்து தெரிந்து கொள்கிறார்கள். இப்படியான திட்டமொன்றை மாகாணசபையில் முதல்வர் கலந்தாலோசித்திருக்கலாமென்ற கருத்தையும் இலகுவில் புறந்தள்ள முடியாது.

இந்த விடயத்தில் முதல்வர் தரப்பின் கருத்துக்கள் என்ன? அதை அறிவதற்காக முதல்வர் தரப்புடன் கேட்டபோது,பதிலளிக்க அவகாசம் கேட்டார்கள். பின்னர் அவர்களை தொடர்புகொள்ள முடியவில்லை. முதல்வர் தரப்பு கருத்துக்களையும், இந்த விவகாரத்தில் புதிய தகவல்களையும் வரும்வாரத்தில் எதிர் பாருங்கள்.




## இணைய ஜன்னல்

**Thaj Azree**
ஹஜ்ஜில் இறந்தவருக்காக பாப்பரசர் பிரார்த்தனை செய்கிறார். நமது மோட்டு மேதாவிகள் அதிலும் இயக்க சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் புத்தி சொல்லுங்க பாப்பரசரே!

**பன்னீர்செல்வன் அதிபா**
தாஜ்மஹாலும் மனைவியின் திருப்தியும் ஒன்றுதான் .. இரண்டுமே உலக அதிசயங்கள்

**Ranjithkumar Jba**
தலையெழுத்து
மலையக மக்கள் வீடு பெறுவதென்றால் அவர்கள் மண்சரிவு ஒன்றிலிருந்து உயிர் பிழைத்துவர வேண்டும். அல்லது உயிரைக் காவுகொடுத்தவர்களின் சந்ததியாக வேண்டும்.

**Rimaz Ahamed**
என்னா டைட்டில் வச்சிருக்காங்க டா. வேதாளமாம் வேதாளம். வேலாயுதம், செந்தூரப்பாண்டி, ஆதி, குருவின்னு மாஸ் டைட்டில் வைக்கவே தெரில இந்த அஜித்க்கு!!!

**Bella Dalima**
ஒரு செல்ஃபோன் வாங்க 80,000 செலவு செய்றீங்கன்னா உங்கக்கிட்ட தேவைக்கதிகமா பணமும் தேவைக்குக் குறைவா அறிவும் இருக்கு என்கிறான் புத்தன்!

**கவிஞர் மகுடேசுவரன்**
செவ்வாயில் நீர் இருப்பதாக அறிவியல் இப்போதுதான் கண்டுபிடித்திருக்கிறது. செவ்வாயில் தேன் இருப்பதைக் கவியியல் எப்போதோ கண்டு அறிவித்துவிட்டது. smile emoticon

**Vanna Serr**
ஐநா சார்,1952ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரங்களின் சூத்திரதாரிகளும் விடுதலைப்புலிகள் தானாம் அதுக்காகவும் அவர்கள் மேல நடவடிக்கை எடுப்பீங்களா?!!



## அந்தமாதிரி நான் சிந்தித்ததே இல்லை

சமந்தாவைச் சுற்றி தினம் ஒரு வதந்தி வந்து கொண்டிருக்கிறது. அவரும் சளைக்காமல் பதிலளித்துக் கொண்டிருக்கிறார். புதிய வதந்தி, சூர்யா தயாரித்து நடித்து வரும் '24' படத்தின் நாயகி சமந்தா. ரஹ்மான் இசையமைக்கிறார். இந்தப் படத்தின் தெலுங்கு உரிமையை நிதின் என்பவருடன் இணைந்து சமந்தா வாங்கியுள்ளார் என தகவல் பரவியது. செய்தி சமந்தாவையும் எட்டியது. ஷாக்கானவர், படங்களை தயாரிப்பது குறித்தோ, வெளியிடுவது குறித்தோ நான் இதுவரை சிந்தித்ததே இல்லை. அப்படியிருக்க இந்த மாதிரி எல்லாம் எப்படி எழுதுகிறார்கள் என கேட்டிருக்கிறார். நீங்க சிந்திக்கலைன்னா என்ன. உங்களுக்கும் சேர்த்து சிந்திக்க இங்க நிறையபேர் இருக்கிறாங்க.



## நயன்தாராவுக்கு விரைவில் கட்டுப்பாடு

நயன்தாரா நடித்த 'மாயா' கன்னாபின்னா ஓட்டம் ஓடிக்கொண்டிருக்கிறது. தமிழில் வெளிவந்த அதேசமயத்தில் தெலுங்கில் 'மயூரி' என்ற பெயரில் வெளியானது. தெலுங்கிலும் அதே கதைதான். படத்தின் சக்ஸஸ் மீட்டில் நயன்தாரா கலந்து கொள்ளவில்லையாம். தெலுங்கு படங்களின் விளம்பர நிகழ்ச்சிகளில் நயன்தாரா கலந்து கொள்வதில்லையென்பதற்காகத்தான் ஏற்கனவே தெலுங்கில் அவருக்கு தடை விதிக்கப்பட்டது. இப்பொழுது நயன்தாராவை இலக்கு வைத்து விதியொன்றையே உருவாக்க எத்தனிக்கிறார்களாம். அதாவது நடிகைகளை ஒப்பந்தம் செய்யும்போதே, கண்டிப்பாக விளம்பர நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேண்டுமென்ற சரத்தையும் இணைத்து கையெழுத்து வாங்க யோசிக்கிறார்களாம்.

## நிருபர் மீது பாய்ந்த பிரியாமணி

'உள்ளம்' படம் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர் பிரியாமணி. பாரதிராஜாவின் 'கண்களால் கைது செய்' படத்திற்கு பிறகு பிரபலமானார். சமீபகாலமாக பெரிய அளவில் படங்கள் எதுவும் இல்லை. தெலுங்கில் திருவிக்ரமன் இயக்கும் 'பன்னி' படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட சம்மதித்து இருக்கிறார். இதுபற்றி அறிந்த ஒரு நிருபர், "இப்படி ஒரு பாடலுக்கெல்லாம் குத்தாட்டம் போட சம்மதிப்பது ஏன்? எப்படியாவது சினிமாவில் முகம் காட்ட வேண்டும் என்பதற்காக 'ஓகே' சொல்லி விட்டீர்களா?" என்று கேட்டதுதான் தாமதம். அந்த நிருபர் மீது சீறிப்பாய்ந்த பிரியாமணி, "கேள்வி கேட்கும் முன்பு யோசித்து கேளுங்கள்" என்று ஆவேசப்பட்டு, நிருபரை உண்டு இல்லை என்று வாட்டி எடுத்து விட்டாராம். ஆவேசம் அடைந்த பிரியாமணி, நிருபரை தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

# டூரிங் டாக்கீஸ்





## மோதும் ராகுல் பிரீத்சிங்

தமிழ், தெலுங்கு பட உலகில் முக்கிய இடம் பிடித்திருப்பவர் காஜல் அகர்வால். தெலுங்கு படஉலகில் இவருக்கு கடும் போட்டியாக உருவாகி இருப்பவர் ராகுல் பிரீத்சிங். அண்மையில் புரூஸ்லி படத்தில் ராமசரண் ஜோடியாக காஜல் அகர்வால் நடிப்பதாக இருந்தது. இதற்கான பேச்சுவார்த்தை நடந்து கொண்டு இருந்தபோதே அந்த படத்துக்கு பிரீத் சிங் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இதனால் காஜல் அகர்வால் அதிர்ச்சி அடைந்தார். தெலுங்கு பட உலகில் காஜல் அகர்வாலுக்கு போட்டியாக பிரீத்சிங் உருவாகி இருக்கிறார் என்று தெலுங்கு படகில் பரபரப்பாக பேசப்படுகிறது. அதற்கு ஏற்ப பிரீத்சிங்குக்கு தெலுங்கு பட வாய்ப்புகள் அதிகமாகி வருகிறது. இது காஜல் அகர்வாலுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.





## சின்னக்குஷ்பூ

தமிழில் வணக்கம், நன்றி போன்ற சொற்களை பேச கற்றுக்கொண்டுள்ளேன் என பூரிக்கிறார் ஹன்சிகா. விரைவில் தமிழ் பேச கற்றுக்கொண்டு விடுவாராம். தன்மீது இவ்வளவு அன்பு காட்டும் தமிழ் மகாசனங்களுடன் தமிழில் உரையாடாவிட்டால் எப்படி என கேட்கிறார் அம்மணி. அதைவிட, தன்னை சின்னக்குஷ்பூ என செல்லமாக அழைப்பது மனநிறைவைத் தருகின்றதென்றும் கூறினார். குஷ்பூ போல நிரந்தர இடம்பிடிப்பதே தனது இலக்கு என்றும் சொன்னார்.

## மீண்டும் நாகர்ஜுனாவின் கதாலியான அனுஷ்கா

யோகா ஆசிரியையாக இருந்த அனுஷ்கா, நாகர்ஜுனா மூலம் சினிமாவில் நடிகையாக அறிமுகப்படுத்தபட்டார். பிறகு அவர் முன்னணி நடிகையான பிறகு, நாகர்ஜுவாவுடன் இணைத்து கிசு கிசுக்கப்பட்டார் என்பதும் அனவைரும் அறிந்ததே. இதையடுத்து நாகர்ஜுனா அனுஷ்கா ஒன்றாக நடிக்கவில்லை. இந்த நிலையில், மீண்டும் நாகர்ஜுவாவுக்கு காதலியாகியுள்ளார் அனுஷ்கா. ஆம், தெலுங்கு இயக்குனர் வம்சி இயக்கத்தில் நாகர்ஜுனா கார்த்தி இணைந்து புதிய படத்தில் நடித்து வருகின்றனர். இப்படத்தை பி.வி.பி.சினிமா பிரம்மாண்டமாக தயாரித்து வருகிறது. இவர் படத்தில் நாகர்ஜுனாவின் முன்னாள் காதலியாக வருகிறாராம். இவர் சம்பந்தப்பட்ட காட்சியை பாரீசில் 3 நாட்களும், பிரான்சில் சில காட்சிகளையும் படமாக்க உள்ளார்களாம்.





## ‘கபாலி’ ரீலிஸ் தேதி வெளியானது

ரஞ்சித் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து வரும் 'கபாலி' படத்தில் ரஜினிகாந்தின் கெட்டப் எப்படி இருக்கும், என்று மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்ட நிலையில், சமீபத்தில் வெளியான அதிகாரப்பூர்வமான போஸ்ட்டர், அனைவருடைய ஆவலையும் பூர்த்தி செய்தது. தற்போது படத்தின் வெளியீட்டு தேதி வெளியாகியுள்ளது. ‘ரிலீஸ் தேதி இன்னும் அதிகாரப் பூர்வமாக முடிவாகவில்லை. ஆனால் கபாலி, தமிழ்ப் புத்தாண்டுச் சமயத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போது சென்னையில் படப்பிடிப்பு நடக்கிறது. பிறகு மீதிக்காட்சிகள் மலேசியாவில் படமாக்கப்படும். சனவரியில் படப்பிடிப்பு முடிந்துவிடும். இரண்டு மாதங்கள் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் நடக்கும். 2016 ஏப்ரலில் படம் வெளியாகும்’ என்று படக்குழுவினர் கருத்து தெரிவித்தார்கள்.

# 'புலி' பார்த்தது காவாலிகளா? ரசிகர்களா?



"மச்சா நான் நேற்று இரவில இருந்து இங்கதான்டா நிக்குறன். ஒரு டிக்கற் கூட இன்னும் கிடைக்கலாடா" இப்படி குரல்கள் யாழ்நகரத்தில் கடந்த சில தினங்களாக கேட்க கிடைத்தது. நின்று நின்று களைத்து, தேனீர்க் கடைகளிலோ பேரூந்து நிலைய இருக்கைகளிலோ அலுத்துக் கொண்டு வந்து அமர்ந்த பல வாலிபர்கள் இப்படி பேசியதை கேட்க முடிந்தது.

கடந்த சில வருடங்களாகவே நமது வாலிபர்களை நாடிபிடித்து பார்த்துவிட்டதால், அவர்கள் அலுத்துக் கொள்வதன் காரணம் சிக்கலின்றி புரிந்தது. அதுதான், விஜய்யின் புலி படத்திற்கு டிக்கற் எடுக்க முண்டியடித்து, கிடைக்காமல் அலுத்துக்கொண்ட வாலிபர்களின் கவலைகள்தான் அவை.

திரைப்பட் வெளியான கடந்த வியாழக்கிழமை காலையிலிருந்தே யாழ்ப்பாண நகரில் சற்று நெரிசலாக உணரமுடிந்தது. காரணம் நமது ரசிககுஞ்சுகள் நகரை நோக்கி படையெடுக்கிறார்களாம். யாழ்ப்பாணத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்தும் கிளம்பியவர்கள், புற்றிலிருந்து ஈசல் கிளம்பி வெளிச்சத்தை தேடிவருவதை போல நகரின் இரண்டு பிரதான திரையரங்குகளை நோக்கியும் வந்தனர். கூட்டம்கூட்டமாக வந்த நமது ரசிகப்பெருமக்களால் அன்றைய தினம் பேரூந்துகளிலும் நெருக்கடி.

நமது ரசிகப்பெருமக்களை நன்றாக அறிந்து வைத்திருந்த யாழ்ப்பாண தியேட்டர்காரர்களும் தீனிபோட்டனர். புலிபடம் திரையிடப்பட்ட சிலோன் தியேட்டர்ஸின் திரையரங்குகள் மற்றும் ராஜா திரையரங்கில் நாளாந்தம் 10 காட்சிகள் வரை திரையிடப்பட்டன. பத்தல்ல நூறு காட்சிகள் காட்டினாலும் நமது ரசிகப் பெருமக்கள் அலைமோதுவார்கள் போலிருந்தது. அப்படியொரு கூட்டம்.


தென்னிந்திய திரைப்படங்கள் வெளிவரும் நாளில் நாயகர்களிற்காக மோதுவது, நாயகர்களில் கட் அவுட்களிற்கு பாலாபிசேகம் செய்வது போன்ற முட்டாள்த்தனமான போக்கு யாழ்ப்பாணத்தில் வேரூன்றி வருவதை எல்லோரும் கையை பிசைந்து கொண்டு பார்த்துக் கொண்டு நிற்க வேண்டியுள்ளது. சேவல்கோழி போல உச்சந்தலையில் கொண்டை, கழுத்துவெட்டி கோழி போல உச்சந்தலையை விட மிச்சப் பகுதி முடியையெல்லாம் அரிந்து, இப்படி பல்வேறு விசித்திர கோலங்களுடன் கொஞ்சப்பேர் பிரதான திரையரங்குகளில் நின்று செய்த அலப்பறைகளை என்னவென்று சொல்வதென்றே தெரியவில்லை. விஜய் கட் அவுட்டிற்கு மாலைபோடுகிறார்களாம், பாலாபிசேகம் செய்கிறார்களாம், கட்டிப் பிடித்து ஆனந்தக்கண்ணீர் வடிக்கிறார்களாம்.. அப்பப்பா, என்னவொரு பரவசநிலை.

இதையெல்லாம் காணக் கண்கோடி வேண்டும். இந்தப் படத்தின் முதல்க்காட்சிக்காக உண்ணாமல், உறங்காமல் அவர்கள் காத்திருந்திருப்பார்கள் போல. அப்படியொரு வெறித்தனம் அவர்களில் தெரிந்தது.

**சினிமா கலாச்சாரம் முன்னெப்போதும் இல்லாத அளவில் முற்றிலுமாக மாறிவிட்டது. மாறியது சாதாரண மாற்றம் அல்ல. 40 அடி உயரமான கட்அவுட்டுக்கு பாலாபிசேகம் செய்யும் அளவுக்கு மோசமானதாக மாறிவிட்டது.**

இந்தவகையானவர்களை எந்த வகைக்குள் அடங்குவதென்றே தெரியவில்லை. இவர்கள் வீட்டில் அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சிகளுடன் என்றாவது ஒரு நாள் உட்கார்ந்து ஒருமணி நேரம் பேசியிருப்பார்களா, அவர்களது சுக துக்கங்களில் பங்கெடுத்திருப்பார்களா தெரியவில்லை. அவர்கள் வாழும் சமூக அசைவியக்கத்தில் ஏதாவது பங்காற்றுகிறார்களா என்பதும்

யாழ்ப்பாணத்தில் சினிமா கலாச்சாரம் முன்னெப்போதும் இல்லாத அளவில் கடந்த சில வருடங்களில் முற்றிலுமாக மாறிவிட்டது. மாறியது சாதாரண மாற்றம் அல்ல. 40 அடி உயரமான கட்அவுட்டுக்கு



பாலாபிசேகம் செய்யுமளவுக்கு மோசமானதாக மாறிவிட்டது.

முன்பெல்லாம் கோயில்த் திருவிழாக்கள், திருமண விழாக்கள் நடைபெறும் போதுதான் வீட்டு வாசல் தொடங்கி வீதியின் இருமருங்கிலும் வாழை மரங்கள் கட்டி, மாவிலை தோரணங்கள் கட்டி, பட்டாசு கொளுத்து விருந்தினர்களை வரவேற்பார்கள். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. சமூகநிகழ்வுகளில் இளைஞர்களை காண முடிவதில்லை. தலைநரைத்த பெரியவர்களின் நிகழ்வுகள் என்றாகிவிட்டது. இளைஞர்கள் எங்கேயென பார்த்தால்.. தியேட்டர் வாசல்களில் காத்திருக்கிறார்கள். யாரோ ஒரு தென்னிந்திய ஹீரோ, தயாரிப்பாளர் காசுபார்க்கும் படத்திற்கு இவர்கள் இங்கே பட்டாசு கொளுத்தும், பாலாபிசேகம் செய்யும் முட்டாள்களாகி நிற்கிறார்கள்.

திரையரங்குகளின் முன்பாக இரவு பகலாக காத்திருக்கும் இந்த 'விசிலடித்தான் குஞ்சுகள்' தாங்கள் கெட்டதும் போதாமல், வீதியால் சென்றுவருபவர்களுடன் வம்புக்கு சென்ற காட்சிகளையும் தாராளமாக காண முடிந்தது. குறிப்பாக பெண்கள். இப்படியான படங்கள் வெளியாகும் நாட்களில், தியேட்டர்கள் உள்ள வீதிகளால் பெண்கள் பயணிக்க முடியாதநிலை விரைவில் வந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. அதற்கு கிட்டவான ஒருநிலைதான் தற்போது உள்ளது.

படம் வெளியாவது ஏதோ சந்திரனிற்கு ரொக்கட் விடும் சாதனையென்பதை போல பாவனை பண்ணிக் கொண்டு திரையரங்கிற்கு முன் வீதிகளில் தெரியும் ரசிகப்பெருந்தகைகள் பொதுநாகரிகமென்ன என்பதையே அறியாமல்த்தான் நடக்கிறார்கள். படத்தில் வரும் ரௌடிகள் எப்படி நடக்கிறார்களோ, அப்படி நடக்கிறார்கள். வீதியில் செல்பவர்களை பற்றிய அக்கறையில்லாமல், நடுவீதியில் திரிகிறார்கள். வீதியால் வாகனங்களில் செல்பவர்கள் உரசாமல் கொள்ளாமல் பவ்வியமாக செல்ல வேண்டுமாம்.

இந்தவகையானவர்களெல்லாம் எங்கிருந்து கிளம்பி வந்தார்கள் என்பதே தெரியவில்லை. இவர்கள் விஜயின் ரசிகர்களா அல்லது அந்தபட வில்லனின் ரசிகர்களா?

யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களிலிருந்து மட்டுமல்லாமல் பல மைல் தொலைவில் இருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் இருந்தும் இங்கு பலர் வந்திருக்கிறார்கள் என்றால் இவர்களின் சினிமா ரசனையை புரிந்து கொள்ளுங்கள்.

சரி இந்த மீசைமுளைத்த, மண்டைமேல் கொண்டை வைத்த குழந்தைகள்தான் இப்படியென்றால், பல தம்பதிகள் தங்கள் குழந்தைகளுடன் வந்து வரிசையில் முண்டியடிப்பதை பார்த்தால்,



தலையை எங்கு கொண்டுபோய் முட்டுவதென்று தெரியவில்லை.

இதற்குள் ரொமான்ஸ்கதை வேறு. பலர் தமது காதலிகளுடன் முதல்ஷோ பார்க்க வருகிறார்களாம். ரிக்கட்டுக்காக முண்டியத்து சில்லெடுக்கையில், சிங்கக்கைக்குள் வந்துமாட்டியபுள்ளிமான்களை போல நெளிந்துகொண்டு நிற்கிறார்கள். இதையெல்லாம் எதிர்பாராமல் வந்திருப்பார்கள் என்று தோன்றவில்லை.

இப்படியான அருவருக்கத்தக்க செயற்பாடுகள். வேண்டாத செயல்கள் எல்லாம் எப்படி எம் யாழ்ப்பாணத்து இளசுகள் மத்தியில் பரவலடைந்தது என்பது அவசியம் கவனிக்கப்பட வேண்டும். அரசியல் நோக்கங்களுடன் இந்தப்போக்கு ஊக்குவிக்கப்படுகிறதா அல்லது, கல்லாப்பெட்டிகளை நிரப்ப பணமுதலைகள் ஊக்குவிக்கிறார்களா என்பதை இனம்காண வேண்டும்.

நடந்த கொடுமைகளிற்காக ஒரு தொகுதியினர் நீதிகேட்டுக் கொண்டிருக்கின்றனர். தங்கள் தந்தையர்களை விடுவிக்க கோரி சுலோக அட்டைகளுடன் சிறார்கள் வீதியில் நிற்கிறார்கள். அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை நிறுத்த நகரில் இன்னொரு தொகுதியினர் விழிப்புணர்வு பேரணி சென்று கொண்டிருக்கின்றனர். சமநேரத்தில் பெருந்தொகை கூட்டமொன்று நடிகனுக்கு பாலாபிசேகம் செய்கிறது. படம்பார்க்கும் சாக்கில் வீதியால் செல்லும் பெண்களுடன் எல்லைமீறுகிறது.

இவ் இளைஞர்களின் இன்றைய செயற்பாடுகளை வைத்துப் பார்த்தால் இவர்களால் அன்று வித்தியாவுக்காக செய்த போராட்டமும் ஆட்களுடன் ஆட்களாக சும்மா பகிடிக்காக செய்தது என்றே எண்ணத்தோன்றுகிறது.

அதேபோல, பல கல்வி, விளையாட்டு, கலைச்செயற்பாடுகள் போன்ற சமூகத்திற்கு அத்தியாவசியமாக விடயங்களிற்கு ஸ்பொன்சர் செய்யுங்கள் என கேட்டால் மூக்கால் அழும் யாழ்ப்பாணத்து முதலாளிகள் பலர், புலிபட ரீசேர்ட்டை சொந்தக்காசில் பிரிண்ட் அடித்து விசிறுகிறார்கள். திரையரங்கே கதியென இளையசமூகம் கிடந்தால் கல்லாப்பெட்டிகளை நிரப்பலாமென்ற விஷச்சிந்தனையுடன் செயற்படும் முதலாளிகளும் சமூகக்கொள்ளையர்களே. இந்தக் கண்றாவிக்கு தெருவிற்கு தெரு பணர் வேறு.

திரையரங்குகளில் முதல்ஷோ, நடிகனிற்கு பாலாபிசேகம் என்பதெல்லாம் கிட்டத்தட்ட ரௌடிக் கலாசாரத்தின் அங்கங்களாக மாறி வருகிறது. அந்தப்பகுதிகளால் பயணம் செய்பவர்கள் சொல்லும் முறைப்பாடிது. இன்னும் வெளிப்படையாக சொன்னால், இந்த சம்பவங்கள் பொதுஅமைதிக்கு பங்கம் விளைவிப்பவை. காவல்த்துறையே, இது உங்கள் கவனத்திற்கு!

---

# சாவிலிருந்து மீட்ட பப்பாசி

## ஒரு தாயின் தன்னம்பிக்கை கதை

வ.நரேஜி



‘எனது கணவன் யுத்தத்தில் இறந்துவிட்டார். இரண்டு பிள்ளைகளையும் படிக்க வைக்க வருமானம் இல்லை. பிள்ளைகளுடன் செத்திடலாமோ என்று நினைத்தேன். அப்போது பப்பாசி செய்கையே எனக்கு வாழ வழி காட்டியது’ இது யுத்தத்தின் வடுக்களை சுமந்தவாறு மீள்குடியேறிய ஒரு தாயின் உள்ளக் குமுறல். இவ்வாறு பல குடும்பங்களுக்கு பப்பாசிச் செய்கை வாழ்வாதராத்தை கொடுத்து வருகிறது.

குறிப்பாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கட்பட்ட மீள்குடியேற்ற கிராமங்களில் வாழும் மக்கள் பலர் மெல்ல மெல்ல தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி வருகின்றனர். நெடுங்கேணிப் பகுதியில் உள்ள சன்னாசிபரந்தன், சின்னடம்பன், ஒலுமடு, மாறா இலுப்பைக்குளம், துவரங்குளம், பட்டிக்குடியிருப்பு, கனகராயன் குளம் வடக்கு உள்ளிட்ட பல கிராமங்களில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக பப்பாசிச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

வவுனியா வடக்கு பகுதியில் பப்பாசி செய்கையை செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று விவசாய திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்துடன் இணைந்து ஆரம்பத்தில் உதவி செய்திருந்தது. தற்போது பல கிராமங்களில் மக்கள் தாமாகவே இப் பயிர்செய்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

இதேவேளை, அவர்களது உற்பத்தியை சந்தைப்படுத்தும் நோக்கிலும் அவர்களது பிரச்சனைகளை கலந்தாலோசிக்கும் நோக்கிலும் பழப் பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

கையில் ஒரு பையுடன் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த நிலையில் மீள்குடியேறிய மக்கள் இன்று தமது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு இப் பயிர்செய்கை பெரிதும் உதவியுள்ளது. கணவனை யுத்தத்தில் காவு கொடுத்து விட்டும்,இ காணாமல் போனோர் வரிசையில் இணைந்து விட்டும் வாழ்வதற்கு வழி தெரியாது தவித்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பலவற்றுக்கு பப்பாசி செய்கையே வாழ்வாதாரத்தை கொடுத்துள்ளது.

கணவனை இழந்த நிலையில் கல்வி கற்கும் இரு பிள்ரைளகளுடன் துவரங்குளம் பகுதியில் வாழும் தாயார் ஒருவர் கூறுகையில், என்னுடைய கணவன் யுத்தத்தில் இறந்து விட்டார். இரண்டு பிள்ளைகளையும் கல்வி கற்க வைக்க முடியாது மிகவும் கஸ்ரப்பட்டேன். தோட்டம் செய்து அதில் வரும் வருமானத்தில் என்றாலும் குடும்பத்தை கொண்டு நடத்தலாம் என்று நினைத்தேன். ஆனால் அது கூட சாதகமாக அமையவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் விரக்தி அடைந்து பிள்ளைகளுடன் செத்திடலாமோ என்று கூட நினைத்தேன். ஆனால் பப்பாசி பயிர்ச் செய்கை பற்றி அறிந்து அதையும் ஒரு தடவை செய்து பார்ப்போம் என முடிவெடுத்து அதனைச் செய்தேன். தற்போது வருமானம் கிடைக்கிறது. அதன் பாராமரிப்புக்கான செலவுகள் போக கிடைக்கும் வருமானத்தில் எனது பிள்ளைகளை நான் நல்ல படியாக கல்வி கற்க வைக்கின்றேன் என்றார்.

தமது வாழ்வாதரத்தை கொண்டு நடத்துவதற்கு பப்பாசிச் செய்கையே உதவியது என்கின்றனர் செய்கையாளர்கள். பப்பாசி கன்று நாடப்பட்டு 6 மாதங்களில் இருந்து பயன் பெறக் கூடியாதக இருப்பதுடன் இதற்கான உற்பத்திச் செலவும் மிகக் குறைவாக வேவுள்ளது.

ஆரம்பத்தில் பப்பாசிவிதைகளை அல்லது கன்றுகளை வாங்கி நடுவதற்கும், மாதத்தில் மூன்று தடவை தன்னீர் பாய்சுவதற்குமே செலவு. ஆறு மாதங்களில் காய் பிடிக்கத் தொடங்கியதும் 10 ஆம் மாதத்தில் இருந்து வருமானத்தைப் பெற முடியும்.

பப்பாசி செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு கால் ஏக்கருக்கு மாதாந்தம் 30,000 ரூபாய் தொடக்கம் 40,000 ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாகவும் இதனைக் கொண்டு குடும்பத்தைக் கொண்டு நடத்தக் கூடியதாகவும் உள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பழப்பயிர் செய்கையாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் கூறுகையில், எங்களுடைய செய்கையாளரின் உற்பத்தியை சந்தைப்படுத்த தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்பந்தம் செய்துள்ளோம். அவர்கள் கிழமையில ஒரு தடவை வந்து கிலோக்கு 30ரூபாய் படி பப்பாசியை கட்டிக் கொண்டு போய் எங்கள் சங்கத்தின் மூலம் பணத்தை தருகிறார்கள். அவர்கள் கட்டிக் கொண்டு போன பின் தனியார் சந்தைகளில இருந்து வந்து பப்பாசிப் பழங்களை 20 ரூபாய் படிகட்டுவார்கள். தற்போது எல்லாருக்கும் வருமானம் வருகிறது என்கிறார்.

இவ்வாறு பப்பாசி செய்கையில் வருமானம் வருகின்ற போதும் வவுனியா வடக்கின் சில கிராமங்களில் ஊடுரும் யானைகள் இப் பப்பாசிபயிர்களை நாசப்படுத்தி அக் குடும்பங்களின் பொருளாதாரத்தை அழித்து விடுகின்றது. இதனால் தாம் வாழ்வதற்கு வழிகாட்டும் தமது பயிர்களை பாதுகாக்க கூடிய ஏற்பாடுகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் செய்து தரவேண்டும் என்பது பயிர் செய்கையாளரின் கோரிக்கையாகவுள்ளது.

இது தவிர, யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்த நிலையிலும் பல குடும்பங்கள் வாழ்வதற்கு வழி தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இப் பப்பாசி செய்கையில் ஈடுபட ஆர்வமாகவும் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு உள்ள ஒரே பிரச்சனை. பப்பாசிக்கான விதைகளைப் பெறுவதற்கும், அதனை முதல் 6 மாதங்கள் வாரத்தில் மூன்று தடவையாவது நீர் இறைந்து பராமரிப்பதற்கும் உரிய மூலதன வசதி இன்மையே.

**கால் ஏக்கருக்கு மாதாந்தம் 30,000 ரூபாய் தொடக்கம் 40,000 ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாகவும் இதனைக் கொண்டு குடும்பத்தைக் கொண்டு நடத்தக் கூடியதாகவும் உள்ளது.**

வடக்கின் அபிவிருத்தி, தொழில் முயற்சி உதவிகள் என கூறிக் கொள்ளும் அரசாங்கம் இவ்வாறான பயிர்செய்கை நடவடிக்கைகளுக்கு வழங்கும் உதவிகளை அதிகரிப்பதன் மூலம் மீள்குடியேறிய நிலையில் அவலத்துடன் வாழும் பல குடும்பங்களின் வீடுகளில் ஒளிரும் என்பதே உண்மை.





# சோதிடம் கூறும் யோகங்களும் அடையக்கூடிய பலாபலன்களும்



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



கடந்த பதிப்புக்களில் சோதிடத்தில் கூறப்பட்டு வரும் வியாழமாற்றம், சனிமாற்றம், ராகுமாற்றம் மற்றும் வாஸ்து கூறும் மனை அமைப்பு நிலை பற்றியும் வாசகர்கள் அறிந்து கொண்டதேயாகும். மேலும் வாசகர்கள் இப்பதிப்பில் தங்கள் ஒவ்வொரு வரதும் கிரக நிலை அமைப்பில் இருக்கக்கூடிய யோகங்களையும் அவை மூலம் அனுபவிக்கக்கூடிய பலாபலன்களையும் அறிந்து கொள்வது சிறப்பாய் அமையும் என நம்புகிறோம்.

**ராஜயோகம் நிலை1:** சூரியன், செவ்வாய், குரு, சனி ஆகிய நான்கும் முறையே தமது உச்சராசிகளாகிய மேடம், மகரம், கடகம், துலாம், ராசிகளில் சஞ்சரிக்க உதித்தவர் ராஜயோகம் உள்ளவராவார். ஆயினும் இந்த நான்கு ராசிகளில் ஒன்று லக்கின நிலையில் அமைய வேண்டும் என்பது விதி.

மேற்கூறிய கிரக அமைப்பு ராஜயோகம் உடையவர்கள் நல்ல அரசர் போன்று வாழ்தல், நீதிபதிகள் போன்று சமூகத்தில் மதிக்கப் பெறுதல், நிதிப்பொறுப்பான உயர் பதவிகளில் இருத்தல், கெட்ட தீய மோசடியான நிலைகளைக் கண்ணுற்று தடை செய்யவும், நடவாது இருக்கவும் நடவடிக்கையில் ஈடுபடுதல், கல்விக்கு ஊக்கமளிப்பவராய் இருத்தல், கலை கலாசாரம் அழகியல் துறைகளை உற்சாகப்படுத்துதல் மற்றும் சட்டம் நீதித்துறையில் பிரகாசித்தல் என்பனவும் இருக்கப்பெறுவர்.

**நீசபங்க ராஜயோகம் நிலை2:** ஒரு ராசியில் ஒரு கிரகம் நீசமானால் அந்த ராசிக்கதிபதியாவது அந்த ராசிக்கு உச்சகிரகமாவது சந்திரனுடனாயினும் சந்திரனுக்கு 47 10ம் இடங்களிலாயினும் இருந்தால் நீசம் பங்கநிலை பெறும்.

இந்த நீச பங்க ராஜயோகம் கொண்டுள்ளவர்கள் தங்களது செயற்றிறன்களால் பெரும் சாதனை படைப்பதுடன் சிலர் உலக சாதனையும் படைப்பார்கள். உதாரணமாக விளையாட்டு வீரர் வீராங்கனைகளை குறிப்பிடலாம்.

**கமலயோகம் அல்லது பத்மயோகம்:** சப்த கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியன 14710 ஆகிய இடங்களில் கேந்திரநிலையில் சஞ்சரிப்பது இந்த யோகமேயாகும்.

இந்த யோகத்தை உடையவர்கள் கல்வி கேள்விகளில் உயர்ந்த புலமை பெற்று திகழ்வர். சிற்றின்ப நாட்டமிகுந்தவராய் இருப்பர். புகழ் உடையவராயும், பூரிப்பான வாழ்வை உடையவாராயும் திகழ்வர்.

**சக்தியோகம்:** 7,8,9,10ம் வீடுகளில் எல்லாக் கிரகங்களும் சஞ்சரிப்பதே சக்தியோகம் ஆகும்.

இந்த யோகத்தை உடையவர் குலத்தொழிலை வெறுப்பர். உயர் குடும்பத்தில் கீழ்நிலைத்தொழில்கள் செய்ய அஞ்சமாட்டார்கள். வீணான பெருமையும் குலப்பெருமையும் பேசமாட்டார்கள். சமதர்மத்தை விரும்புவர். எல்லோருடனும் சகஜமாகப் பழகுவர்.



**நளயோகம்:** லக்கினம் முதல் ஏழாம் வீடு வரை அதாவது 1,2,3,4,5,6,7 பாவங்களிலும் சப்தகிரங்கள் வரிசையாக சஞ்சாரிப்பதே நளயோகம் ஆகும்.

இந்த யோகத்தை உடையவர் புகழும் பூரிப்பும் பெறுவர். பிறர் நலத்தில் அக்கறை கொள்ளாது சுயநலத்தில் அதிக நாட்டம் கொள்வர். சுகபோகங்களை தாம் மட்டும் அனுபவிப்பர்.

**சமுத்திரயோகம்:** சப்த கிரக நாயகர்களும் லக்கினத்திற்கு 2ம் 2,4,6,8,10,12ம் ராசிகளில் சஞ்சரிப்தே சமுத்திரயோகம் ஆகும்.

இந்த யோகத்தில் பிறந்தவர் அரசர்க்கு நிகராவார். செல்வம் செல்வாக்கு, அதிகார அந்தஸ்து, ஆள் பேர் மாகாணம் மாநிலம் எனப் பெற்று அமோகமாக வாழ்வர். உருவ அமைப்பிலும் நோக்கிலும் அரசனைப் போலவே தோற்றமளிப்பர்.

**கஜகேசரியோகம்:** குருபகவான் லக்கினத்திற்கு 7ம் நிலையில் இருப்பதும், சந்திரனிலிருந்து ஒரு கேந்திரத்திலும் தங்கினால் கஜயோகமும், நாலாம் இல்லத்தில் குருபகவான் தங்கினால் கேசரி யோகமும் கிட்டும்.

இந்த இரண்டு யோகமும் உடையவர்கள் செல்வம் செல்வாக்கு தேக ஆரோக்கியம் நீடித்த ஆயுள் என்பவற்றைப் பெறுவர்.

**ஆதியோகம்:** சுபக்கிரகங்கள் (புதன், வியாழன், வெள்ளி) சந்திரனுக்கு 6,7,8ம் இல்லங்களில் தங்கியிருந்தால் ஆதியோகம் எனச் சொல்லப்படும்.

இந்த யோகம் உள்ளவர்கள் கட்டளையிடும் அதிகாரிகளாகவும் படை நடத்திச் செல்லும் வெற்றியாளர்களாகவும், அமைச்சர் நிலை அந்தஸ்து உள்ளவர்களாகவும், செல்வம் புகழ் அரசசுகபோகம் என்பவை எளிதில் கிடைக்கக் கூடியவராயும் இருப்பர்.

**கேதாரயோகம்:** எந்த ராசியிலேனும் எந்தக் கிரகங்களாயினும் நான்கு சேர்ந்து தங்கி, அது லக்கினமாகவும் இருந்தால் கேதாரயோகம் கிட்டும்.

இந்த யோகத்தை உடையவர்கள் பெரிய நிலச்சுவாந்தர்களாகவும். கால்நடைகள் அதிகம் வைத்திருப்பவர்களாகவும், அன்பு பாசம் தயாளகுணமுற்றவர்களாகவும் சுகவாழ்க்கை வாழ்பவர்களாகவும் இருப்பர்.

**சக்கரயோகம்:** லக்கினத்தைத் தொடர்ந்து 3,5,7,9,11 ஆகிய இடங்களில் ஏதாவது கிரகங்கள் தங்கியிருந்தால் சக்கரயோகம் கிட்டும்.

இந்த யோகம் உடையவர்கள் செல்வந்தர்களாகவும், திட ஆரோக்கியத்தை உடையவராகவும், அரசயோகத்தை அனுபவிப்பவர்களாகவும், அரசரைப் போல் அனைவராலும் மதிக்கப்படுபவர்களாகவும் இருப்பர்.

**லக்ஷ்மியோகம்:** லக்கினத்திற்கு ஒன்பதாம் இட அதிபதியான கிரகம் உச்சம் அடைந்தாலும் அல்லது ஒன்பதாம் இடத்தில் இருந்தாலும் அல்லது கேந்திரத்தில் இருந்தாலும் லக்ஷ்மியோகம் அமையும்.

சாதகர் ஒருவர் இந்த யோகத்தை கொண்டிருப்பாராயின் சமூகத்தில் சக்தி வாய்ந்தவராகவும், கல்விமான்களாகவும் உயர்ந்த மதிப்பும் பதவியும் உடையவர்களாய் திகழ்வர்.

**ஹம்சயோகம்:** குரு பகவான் லக்கினத்தில் இருந்து கோணங்களிலோ அல்லது கேந்திரங்களிலோ ஆட்சி, உச்சம் பெற்று தங்கினால் இந்த யோகம் உண்டு எனலாம்.

அதைப் பெற்றுள்ளவர்கள் நன்கு கல்விப்புலமை உள்ளவர்களாகவும், நீண்ட ஆயுள் பெற்றவர்களாகவும், அழகிய மனைவியைப் பெற்றவர்களாகவும் அரசசுகபோகத்துடன் வாழ்பவர்களாகவும் இருப்பர். பெரும்பாலும் இவர்கள் துன்பம் இன்னது என்று தெரியாதவாறு குறை ஏதுமின்றி வாழ்வர்.

**குருசந்திரயோகம்:** சந்திரனுக்கு 1,5,9ம் நிலைகளில் குரு இருப்பினும், குரு சந்திரன் ஒரு ராசியில் சேர்ந்து இருப்பினும் இந்த யோகம் கிடைக்கும்.

இந்த யோகம் உடையவர்கள் உயர்ந்த கல்வியாளராகவும், அதிக புகழ் கொண்டவர்களாகவும், இராஜயோகம் கொண்டும் வாழ்வர்.

**ஆயுள்யோகம்:** சந்திரனுக்கு 14 710 ஆகிய இடங்களில் சுக்கிரன் இருந்தால் இந்த யோகம் உண்டாகும்.

இதனால் பூரண ஆயுள், குல ஆதிபத்தியம், செல்வம் சேமிப்புக்கள், மற்றும் வாகனசுகத்தையும் பெறுவர்.

**கிரகமாலிகாயோகம்:** இலக்கினம் முதலாக ஏழு இராசிகளிலும் இடைவிடாமல் கிரகம் இருந்தால் இந்த யோகம் ஏற்படும்.

> **லக்கினத்திற்கு ஒன்பதாம் இட அதிபதியான கிரகம் உச்சம் அடைந்தாலும் அல்லது ஒன்பதாம் இடத்தில் இருந்தாலும் அல்லது கேந்திரத்தில் இருந்தாலும் லக்ஷ்மியோகம் அமையும்.**

இந்த யோகம் மூலம் பொதுசன மதிப்பு, அதிகாரபதவி, உற்சாகம். நீதியாய் இருத்தல், தானதருமம் செய்தல், நல்ல அறிவு விவேகம், பலசுகங்களை அனுபவித்தல், உண்மையாயிருத்தல், நல்ல புகழ் கொண்டிருத்தல் என்பவை அனுபவிக்கலாம்.

**சசயோகம்:** சனிபகவான் லக்கினத்திற்கு 1,4,7,10ம் நிலையில் உச்சம் பெற்று இருப்பின் இந்த யோகம் காணப்படும்.

இதனால் மாற்றான் சொத்துக்கு ஆசை அபகரிப்பு, நீதி தவறுதல், மற்றவர் உழைப்பு மூலம் முன்னுக்கு வருதல், பிற பெண்களை விரும்பி நேசித்தல், மற்றும் தலைமைப் பொறுப்பு என்பன இருக்கும்.

**பந்தனயோகம்:** லக்கின அதிபதியும், 6ம் அதிபதியும் ஒன்றுகூடி 1,5,7,9,10ம் இடங்களில் சேர்ந்து இருப்பது பந்தனயோகமாகும்.

இதன் காரணமாய் சிறைவாசம்

அனுபவிப்பர். அடிமை போன்று வாழ்வர். பலவாறும் கட்டுப்பட்டு அடங்கி நடக்கும் நிலையும் தரும்.

**சகடயோகம்:** குருவுக்கும் 6,8,12ம் நிலைகளில் சந்திரன் இருப்பின் இந்த யோகநிலை தருகிறது.

இதனை சாதகத்தில் கொண்டிருப்போர் வறுமை, வளமிழத்தல், உயர்வு இல்லாதிருத்தல், ஏற்றம் இறக்கம் மாறி மாறி இருத்தல், புத்திரம் கிட்டாத தோஷநிலை, இருக்கும் புத்திரர்கள் மூலம் பாதிப்பான பலன்களை அனுபவிப்பர்.

**காலசர்ப்பயோகம்:** ராகு கேது பிடிக்குள் ஏனைய எல்லாக் கிரகங்களும் இருப்பின் காலசர்ப்பயோகம் உண்டாகிறது. இந்த யோகம் அனேகமானவர்களிடம் காணப்படுகிறது.

இந்த யோகம் கொண்டவர்கள் கல்வி, தொழில், விவாகம், பணச் சேமிப்பு, குழச்தைச் செல்வம், சொத்து சுகம் அனுபவித்தல், மற்றும் கணவன் மனைவி உறவில் மனக் கசப்புகள் போன்ற பலன்களை அனுபவிப்பர். 32 வயதெல்லைய ளவும் நல்ல நல்ல பலன்களை அனுபவிக்கமாட்டார்கள். சிலர் 37 வயதெல்லையும் இன்னும் சிலர் 42 வயதெல்லையும் நல்ல பலன்களை அனுபவிக்க முடியாமல் கஷ்டங்களை அடையவும் செய்யும்.

**விபாரிதராஜயோகம்:** 6ம் அதிபதி 8 அல்லது 12ல் இருப்பின், 8ம் அதிபதி 6 அல்லது 12ல் இருப்பின், 12ம் அதிபதி 6 அல்லது 8ல் இருப்பின் இந்த விபாறிதராஜயோகம் உண்டாகிறது.

இதனால் சாதாரணநிலையில் வாழ்ந்து வரும் ஒருவர் திடீரென உயர்ந்த அந்தஸ்து செல்வம் செழிப்பு நிலையைப் பெறுவார்.

**சந்திரமங்களயோகம்:** சந்திரனுக்கு 4,7,10ம் நிலையில் செவ்வாய் இருப்பின் இந்த யோகம் அமையப்பெறும்.

இந்த யோகம் கொண்டவர்கள் செல்வந்தராகவும் புகழ்மிக்கவராகவும் சொத்து சுகம் அதிகம் உள்ளவராகவும் இருப்பர்.

**தர்மகர்மாதிபதியோகம்:** ஒருவாஜீன் ஜனன ஜாதகத்தில் 9ம் 10ம் அதிபதிகள் இணைந்து ஒரு ராசியில் இருப்பினும் ஒருவருக்கொருவர் 7ம் பார்வையில் பாலீத்துக் கொண்டாலும் இந்த யோகநிலை உண்டாகிறது.

இதனால் மிதமிஞ்சிய பொருட் சேர்க்கை, தலைமைப் பொறுப்பாய் பதவியில் அமர்தல், மற்றும் பொது மக்கள் மத்தியில் பிரபல்யமாய் பேரும் புகழும் பெறுவர்.

**பாரிவர்த்தனை யோகம்:** இரண்டு கிரகங்களோ அல்லது இரண்டிற்குமேற்பட்ட கிரகங்களோ பரஸ்பரமாய் ஒரு வீட்டில் இருந்து (ராசியிலிருந்து) மற்றொரு வீட்டிற்கு இடம்மாறி அமர்ந்திருப்பதை இந்த யோகம் குறிக்கும்.

இந்த யோகம் உள்ளவர்கள் சம்பந்தப்படும் கிரகத்தின் தெசை அல்லது தெசாபுத்தியில் நல்ல உயர் அந்தஸ்துகளையும் செல்வம் செல்வாக்கையும் பேர் புகழ் நிலையும் பெறுவார்.

**பூமி பாக்கிய யோகம்:** 4,9ம் அதிபதிகள் 3,6,8,12ம் நிலைகளில் இருக்கக்கூடாது. நீசநிலை பாவக்கிரகசேர்க்கை பெறக்கூடாது. இந்த நிலை சாதகத்தில் காணப் பட்டால் பூமி பாக்கிய யோகம் உண்டாகும்.

இந்த யோக நிலையில் ஒருவர் காணி, பூமி, மனை, கட்டிடம் போன்ற அசையாத சொத்துக் களைச் சேர்க்கப் பலன் தரும்.

குரு சண்டாள யோகம்: குருவும் ராகுவும் இணைந்து காணப்படினும் அல்லது ஒருவரை ஒருவர் பார்த்தாலும் இந்த யோகம் உண்டாகிறது.

இதனால் வாழ்வின் முற்பகுதியில் கஷ்டமும் நடுப்பகுதி பிற்பகுதி காலத்தில் செல்வம் செல்வாக்கு பல வெற்றிவாய்ப்புகளும் ஏற்பட்டு பேர் புகழ் பெறுவர்.

**வெளிநாடு செல்லும் யோகம்:** 9,12 ஆகிய அதிபதிகள் கடகம், மகரம், மீனம் ஆகிய ராசிகளில் இடம்பெற்று இருப்பினும் வெளி நாடு செல்லும் யோகம் உண்டா கிறது. இதைவிட சனி சந்திரன் சேர்க்கை பெற்று கேந்திரநிலையில் இருப்பினும், சனி சந்திரன் பரஸ் பரபார்வை பெறினும் வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும். முன் குறிப்பிட்ட அதிபதிகளின் தெசைகள் நடைபெறும் போது நல்ல பயனளிக்கும் தெசாபுத்தியில் வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும்.

ஜாதகர் ஒருவர் தனக்குரிய கிரக அமைப்பில் எத்தகைய யோகம் உண்டு என்பதை அறிந்து கொண்டு அதில் சம்பந்தப்படும் கிரகங்களுக்கு அர்ச்சனை வழிபாடுகளையும், கிரகங்கள் குறித்து நிற்கும் தெய்வ வழிபாடுகளையும் முக்கிய கால நேரத்தை கவனத்திற் கொண்டு நிறைவாக்குவதற்கு தவறக்கூடாது.

---

# அரசியல் கிசுகிசு

கைதடியிலுள்ள தமிழர் இராசதானியின் மந்திரிகளை நாடி பிடித்து பார்க்கும் நடவடிக்கையில் கட்சி இறங்கியுள்ளதாம். கட்சி வேறுதிசையில் செல்கிறது, இராசதானி வேறுதிசையில் செல்கின்றதென்பது தேர்தல் சமயத்திலேயே வெளிப்பட்டு விட்டது. கட்சிக்கு சார்பாக இராசா அறிக்கைவிடவில்லையென்பது கட்சிக்காரர்களை சூடேற்றிவிட்டுள்ளது. இராசாவை மாற்றும் எண்ணமில்லையென அவர்கள் பகிரங்கமாக கூறினாலும், உண்மையென்னவோ அதற்கு மாறாகத்தான் உள்ளதாம். இராசாவிற்கு எதிரான ஆவணங்களையும், கருத்துக்களையும் சத்தமில்லாமல் வெளிவிடும் காரியமொன்றிலும் இறங்கியுள்ளனராம். என்னயிருந்தாலும் 'தமிழர் அராசதானிக்கு' சனங்களிடம் மதிப்புள்ளதால், இராசாவுடன் யார்யார் நிற்கிறார்கள் என்று நாடிபிடித்து பார்க்கிறார்களாம். இராசாவிற்கு விசுவாசமாக இருப்பவர் தோட்டக்கார அமைச்சர்தான் என்று கட்சி முடிவு செய்துள்ளது. ஊசிபோடும் அமைச்சர் போனமாதம் வரை இராசதானி விசுவாசியாகத்தான் இருந்திருக்கிறார். ஆனால், இது இந்தமாதமாயிற்றே!. மீன்பிடிக்கிற அமைச்சர் கப்பல் விட்ட பழக்கமோ என்னவோ, அடிக்கிற காற்றுப்பக்கம் கப்பல் விடுபவர் என்பதை கட்சி கண்டறிந்துள்ளதாம். வாத்தியார் அமைச்சரைத்தான் இன்னும் நாடிபிடிக்கவில்லையாம். அவர் கிளிநொச்சி சிங்கத்தின் ஆள் என்பதால், இராசாவின் பக்கம் போகலாமென எச்சரிக்கையாக நாடி பிடிக்கிறார்களாம்.

1990களில் தமிழீழ பிரகடனம் செய்துவிட்டு கப்பலேறிய பழைய 'ராஜா'வை எத்தனைபேர் நினைவில் வைத்துள்ளார்கள் என்று தெரியவில்லை. இந்தியப்படைகளுடன் போனவர், ஒரிசாவிலோ எங்கோ ஒளிந்திருந்துவிட்டு இப்பொழுது திரும்பி வந்துள்ளார். சிலகாலமாக யாழில்த்தான் நிற்கிறார். சும்மா வந்திருக்க மாட்டார் என்று கிசுகிசுக்கிறார்கள் விடயமறிந்தவர்கள். வந்தவரும் சும்மாயிருக்கவில்லை. கூட்டம், கலந்துரையாடல் என பரபரப்பாக திரிகிறார். ஆடிய கால்கள் சும்மாயிருக்குமா?. தென்னிலங்கையின் உறுமும் கட்சி தலைவர் சிலகாலத்தின் முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். கட்சியை யாழ்ப்பாணத்தில் புனரமைக்க வேண்டுமாம். தீவிர சிங்களகட்சியொன்ற பெயரை நீக்க, பாராளுமன்ற தேர்தலில் வடக்கிலும் வேட்பாளர்களை களமிறக்க திட்டமிட்டது. அந்தகலந்துரையாடல்களில் 'ராஜா'வும் ஆஜராகியிருந்தார். கட்சிக்கு தேசியப்பட்டியல் கிடைத்தால் தன்னை தேர்வுசெய்வார்களா என்பதையும் அறிய ஆர்வமாக இருந்தாராம்.

யானையில் களமிறங்கிய ஒருவர் ஒரு மாதத்திலேயே அந்தர் பல்டியடித்த செய்தியிது. ஆரம்பத்தில் சுன்னாகம் குடிநீரை கையிலெடுத்துக் கொண்டு திரிந்த வைத்தியர் அவர். எலக்சனில் நிற்க சுன்னாகம் போராட்டமே போதுமென நினைத்தார். தேர்தலில் குதித்தார். இடையில் அக்காவுடனும் லடாயானது. தேர்தலிலும் கையை சுட்டுக் கொண்டார். அதன்பின்னர்தான் சுதாகரித்து கொண்டாரோ என்னவோ, இப்போது சுன்னாகம் கழிவுஎண்ணெய் என்றாலே காததூரம் ஓடுகிறாராம்.

வீணையின் நரம்பு அறுந்தது இன்னும் ஒட்டவில்லையென்கிறார்கள். அறுந்த நரம்பு ஒட்டுமென்பதைப் போல கடந்தவாரத்தில் நிலவரமிருந்தது. என்றாலும், குறிப்பிடும்படியான முன்னேற்றமெதுவும் அதன்பின்னர் தென்படவில்லை. தோழரும், சந்திரமானவரும் இன்னும் முகத்திற்கு முகம் பார்ப்பதை தவிர்த்துத்தான் வருகிறார்கள். வின்னர் பட வடிவேலு பாணியில் இருவரும் 'இந்த பார்டரை தாண்டி நானும் வரமாட்டேன். நீயும் வரக்கூடாது' என்பதை போல செயற்படுகிறார்கள் என்கிறார்கள். அண்மையில் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரின் தாயாரின் மரணச்சடங்கு நடந்தது. அதில் 'தோழர்' கலந்து கொண்டிருந்தார். மரணச்சடங்கிற்கு வர தயாரான சந்திரமானவர், அங்குள்ளவர்களை தொடர்பு கொண்டு யார்யார் நிற்கிறார்கள் என விசாரித்துள்ளார். 'தோழர்' நிற்கிறார் என்றதும், நான் பின்னர் வருகிறேன் என நின்றுவிட்டாராம். பின்னர் இரவுதான் போய் வந்திருக்கிறார்.

முன்னைய காலத்தில் கதிர்காமத்திற்கு யாத்திரை கிளம்புவதை போல இப்பொழுது நம்மாட்கள் புதுஇடத்திற்கு யாத்திரை கிளம்ப ஆரம்பித்துள்ளனர். அதுதான்ஞ் ஜெனீவாவைத்தான் சொல்கிறோம். ஆளாளுக்கு மூட்டை முடிச்சுக்களுடன் கிளம்ப ஆரம்பித்துள்ளனர். ஊடகநிறுவனங்களிற்கு தினமும் ஒவ்வொரு செய்தி வருகிறது. 'அண்ணன் ஜெனீவா கிளம்புகிறார். கட்டாயம் பெரிய செய்தியாக போட்டு விடுங்கள்' என கிளம்புபவரின் விழுதொன்று தொடர்பு கொண்டு தகவல் தருகிறது. அதுசரி, இவர்கள் ஜெனீவா போய் என்ன செய்கிறார்கள் என்று கேட்டால், சொல்லும்படி ஒன்றுமில்லை. நமது அரசியல்வாதிகள் யாரும் பிரதானஅரங்கிற்கு செல்ல முடியாது. கூட்டத்திற்கு வெளியில் நடக்கும் கலந்துரையாடல்களில் பங்குபற்றலாம். அதை விட்டால் வேறொன்றும் செய்ய முடியாது. ஜெனீவாவில் என்ன நடந்ததென்பது உங்களிற்கு தெரியும்தானே, அதைவைத்தே எடைபோடுங்கள், நம்மாட்கள் அங்கு போய் எதை வெட்டிக்கிழித்தார்கள் என்பதை.

## நிகழ்வுகள்

ஒக்டோபர் 4: பண்ணை வீரமாகாளி அம்மன் உற்சவம்

ஒக்டோபர் 5: மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் விசேட உற்சவம்வல்வை முத்துமாரி அம்மன் விசேட உற்சவம்

ஒக்டோபர் 10: ஆனைக்கோட்டை வடமேற்கு கண்ணகி அம்பாள் விசேட உற்சவம் திருமலை பத்திரகாளி கேதார கௌரி விரத விசேட உற்சவம் உடையார் கட்டு தெற்கு சுதந்திரபுரம் முத்துமாரி அம்மன் விசேட நிகழ்வு காரை நகர் சிவன் கோவில் விசேட பூசை பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணியர் அன்னாபிசேகம் வவுனியா ஆசிகுளம் சக்தி விநாயகர்சங்காபிசேகம்

ரஜிந்தன்
rajinthan2011@gmail.com

# 'நாவின் அரசி' இணுவில் ஆச்சி

"இணுவில்ல இருக்குற எந்த வீட்டில என்ன விசேஷம் எண்டாலும் ஆச்சியின் கடை லட்டு கட்டாயம் இருக்குமாம்." அந்த அளவுக்கு இந்த ஆச்சி பேமஸ். இணுவிலில் மட்டுமில்லை, யாழ்ப்பாண சுற்றுவட்டத்திலயே ஆச்சி கொடிகட்டி பறக்கிறா.

இந்த ஆச்சியின் கைப்பக்குவத்தில வெறும் லட்டு மட்டுமல்ல, யாழ்பாணத்து பலகாரம் எது என்றாலும் நம்பி வாங்கி நொறுக்கலாம். சுவைக்கு ஆச்சி உத்தரவாதம்.

ஆச்சிக்கு இவ்வளவு பில்டப் கொடுக்கிறோமே என நினைக்காதீர்கள். இதைவிட இன்னும் அதிகமாக கொடுத்தாலும் தகும். ஏனென்றால் ஆச்சியின் பலகாரங்களிற்கு அப்படியொரு சுவை. இதனால்த்தான் ஆச்சி 'பலகார ராணி'யானார். ஆம். ஆச்சி ராணிதான். இணுவில் சுற்றுவட்டத்தை சேர்ந்தவர்கள் எல்லோரது நாவிற்கும் ஆச்சி தான் அரசி. ஆச்சியின் கைப்பக்குவத்திற்கு அப்படியொரு மவுசு. அதிலும் குறிப்பாக, இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு ஒரு முறை சென்றவர்களிற்கெல்லாம் ஆச்சியை பற்றி இவ்வளவு சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இந்த வட்டாரத்திலுள்ளவர்கள் எந்த வயதுக்காரர்கள் என்றாலும் ஆச்சியின் கடை பலகாரம் என்றதும்,கடைவாயை துடைத்துக்கொள்கிறார்கள். பலகாரம், உணவுகள் மூலம் இந்தபகுதிக்கே ஆச்சி ராணியாகிவிட்டார். அதிலும் வெங்காய வடை என்று ஒன்று உள்ளது. அப்பப்பா... அதையெல்லாம் பற்றி எழுத முடியாது. அந்தப்பக்கம் சென்றால் ஒருமுறை வாங்கி நொறுக்கிப்பாருங்கள்.

இந்தளவிற்கும் ஆச்சி இன்னும் குடிசைக்கைத்தொழில் மாதிரித்தான் தொழில் செய்து கொண்டிருக்கிறார். வீட்டிலுள்ளவர்களுடன் இணைந்துதான் ஆச்சி இந்த 'பலகார இராசதானி'யை ஸ்தாபித்துள்ளார். சுவையை மூலதனதாக வைத்து ஆச்சி இன்று ஒரு பெரிய 'சாப்பாட்டு சாம்ராஜ்யத்தத்'யே உருவாக்கிவிட்டார். ஆச்சி ஒரு தன்னம்பிக்கையின் கதையும் கூட.

ஆச்சிக்கு பூர்வீகம் இந்தியா. 70 வருடங்களின் முன்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கிறார். "எங்க ஐயா, அம்மா நாங்க எல்லாம் இந்தியாவுல இருந்து வள்ளத்தில மன்னாருக்கு வந்தம். அப்ப எனக்கு ஒரு 10 வயசு இருக்கும்" என ஆச்சி நினைவை மீட்டினார். இப்போது ஆச்சிக்கு 83 வயதாகிறது.

ஆச்சியின் ஆரம்பகாலமொன்றும் அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. கஸ்டமென்றால் அப்படியொரு கஸ்டம். அப்படித்தான் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்திருக்கிறது. தனது ஐயா, அம்மாவோடு ஆரம்ப காலத்தில் கச்சான் விற்றிருக்கிறார் ஆச்சி. வாழ்க்கை அப்படி ஓடிக்கொண்டிருந்த சமயத்தில்தான் ஆச்சிக்கு திருமணம் நடந்தது. இவர்தான் இணுவிலை சேர்ந்தவர். ஆச்சி இணுவில்வாசிகளின் ராணியான முன்கதைச் சுருக்கம் இதுதான். திருமணம் முடித்த கடந்த ஐம்பது வருடமாக இணுவில் கந்தசுவாமி கோவிலடியிலேயே ஆச்சி வாழ்க்கை நடத்தி வருகிறார். ஐம்பது வருடத்தின் முன் ஆரம்பித்த கச்சான் வியாபாரம் இப்பொழுது 'ஆச்சி மிக்சர்' என நிமிர்ந்து நிற்கிறது.

**ஊர் மக்களுடைய ஆதரவினால் ஆச்சி நீண்டகாலமாக இங்குதான் இருக்கிறார். இங்குதான் இருக்க வேண்டும் என ஆதரவு வளங்கினார்கள். அம்மக்களுக்கு இன்றும் நன்றி சொல்கிறார் ஆச்சி**

இப்போது ஆச்சி கடையில் மிக்சர், பகோடா, லட்டு, கேசரி, முறுக்கு, தட்ட வடை போன்றவற்றுடன்,ஓடருக்கு உணவும்செய்து கொடுக்கப்படுகிறது. ஆச்சி தனது 'சாம்ராஜ்யத்தை' நவீனமென்ற பெயரில் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லையென்கிறார். அதனால் இப்பொழுதும் 'வீட்டுசமையல்' பாணியிலேயே எல்லாம் நடக்கிறது. அதுதான் தனது வெற்றியின் ரகசியமென்பதால் அதைவிட்டு செல்ல ஆச்சி தயாராக இல்லை.

'வீட்டுசமையல்' பாணி கடைகளில் உள்ள பலவீனம், அதிக நெருக்கடியை சமாளிக்க முடியாது. முந்திச்செல்பவரிற்கு கிடைக்கும். ஆச்சியின் கடை நிலவரமும் அதுதான்.

ஆச்சியின் சாம்ராஜ்யத்திற்கு வந்த சோதனைகளுக்கும் குறைவில்லை. உணவு தயாரிப்பதெனில் அதற்கான போதிய வசதிகள், கட்டுமானங்கள் அவசியம். அல்லாவிட்டால் சுகாதார அதிகாரிகள் அனுமதி வழங்கமாட்டார்கள். ஆச்சியின் ஆரம்பநாட்களில் இந்த விவகாரத்தால் நீண்டஇழுபறி ஏற்பட்டுள்ளது. ஆச்சியிடம் போதிய கட்டிடவசதியிருக்கவில்லை. இந்த விவகாரத்தால் ஆச்சியின் சாம்ராஜ்யம் தகர்ந்து விடும் என்ற நிலைகூட ஏற்பட்டதாம். இருந்தாலும், ஊர்மக்களின் ஆதரவினால் சாம்ராஜ்யம் காப்பாற்றப்பட்டதென்கிறார் நன்றிப் பெருக்குடன்.

இதில் நிரந்தரமான இடம் ஒன்று இல்லை, உணவு வகைகள் தயாரிக்கப்படும் இடம் போதிய வசதிகளுடன் இல்லை, சுகாதார சிக்கல்கள் என பல தடைகள் ஏற்ப்பட்டு அவரது வாழ்வாரத்தையும் நிறுத்தும் நிலை ஏற்ப்பட்டது.

இந் நிலையில் இருந்து அவ் ஊர் மக்களுடைய ஆதரவினாலும் அவர்கள் இந்த ஆச்சி நீண்ட காலமாக இங்குதான் இருக்கிறார். இவர் இங்குதான் இருக்க வேண்டும் என ஆதரவு வளங்கினார்கள். அம்மக்களுக்கு இன்றும் நன்றி சொல்கிறார் இந்த ஆச்சி.

இன்று அரை நூற்றாண்டுக்கும் மேலாக இனுவிலே தமக்கு தஞ்சம் என வாழும் இந்த ஆட்சிக்கு இன்றுவரை தான் சொந்தம் எனச் சொல்ல ஒரு வீடு இல்லை. அவரது வீடு மற்றும் கடைகள் வாடகைக்கு பெற்றுக்கொண்டதாகும்.

ஆச்சி தன் மகளுடன் ஆரம்பித்த இந்த வாழ்வாரத்தை இப்பொழுது அவரது மகன் "ஆச்சி மிக்சர்"என்னும் பெயரில் விரிவுபடுத்தி நடாத்தி வருகிறார்.

இத் தள்ளாத வயதிலும் இவ் ஆச்சியின் சேவை அங்குள்ளவர்களுக்காக தொடர்ந்தான் செல்கின்றது.

அட ஆச்சி இருக்கட்டும் இந்த ஆச்சி கடையில் என்ன எல்லாம் ஸ்பெசல் என்று பார்த்தால்

ஆச்சி கடையில இருக்குற வெங்காய வடை இருக்கே அதுக்கென்றொரு தனி ரசிகர்களே இருக்கிறார்கள். பொதுவா வடை எண்டாலே எல்லாருக்கும் பிடிக்கும் அதிலும் ஆச்சி கடை வெங்காய வடை எண்டா சொல்லவா வேணும்.

வெங்காய வடை மட்டுமில்லைங்க லட்டு, பயிற்ரம் உருண்டை, முறுக்கு, தட்டைவடை, என்பன வீட்டுச்சுவை மாறாமல் கிடைக்கும் ஒரே இடந்தாங்க இந்த ஆச்சி கடை.

இனுவில்ல மட்டும்ல எங்க யாருக்கு என்ன என்ன பலகாரம் என்ன என்ன அளவுகளில் தேவை என்றாலும் அந்த அந்த அளவுகளில் செய்து கொடுக்கப்படுகிறது.

இப்படி செய்து கொடுப்பதில் உங்களுக்கு கிடைக்கும் வருமானம் எந்த அளவில் இருக்கும் எனக் கேட்டதற்கு ஆச்சி..

" இங்கு ஒரேயடியாக நிறைய ஓடர் வந்தா எங்களால செய்யுறது கஸ்றடம் வயசும் போட்டுது. உதவிக்கு 4/5பேரை கூட்பிட்டுத்தான் செய்வம், அவர்களுடைய சம்பளம். பலாகாரங்களுக்குத் தேவையான உள்ளீடுகள், எண்ணை,விறகு எல்லாருக்குமான செலவுகள் போக கையில கொஞ்சக் காசு மிஞ்சும் அத வைச்சு எங்கட மிச்ச செலவுகளைப் பார்க்க சரி ஒரு மிச்சமும் இல்லை"

என்று ஆச்சி கூறினாலும், அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு அரசிதான். அவரின் கைப்பக்குவம் அவரை அப்படியாக்கியது.

ஆச்சியைப்பற்றி அறியப்போன இடத்தில் நமக்கும் தனது கைவண்ணத்தை காட்ட விதவிதமான சிற்றுண்டிகளை அள்ளித்தந்தார். ஆச்சி அரசிதான் என்பதை ஒத்துக்கொண்டுவிட்டு விடைபெற, 'தம்பி... எனக்கு வேறெங்கும் கிளைகள் கிடையாது' என்கிறார் குறும்பாக.








# மறந்து விட்ட தாயம்

முன்னர் எதிரெதிரே இருந்து முகத்தைப்பார்த்து ஆடிய ஆட்டங்கள் எல்லாம் இன்று இல்லாமல் போய் கணினித் திரைகளை பார்த்து விளையாடும் காலமாகிவிட்டது.



பி.சியா
siyapj27@gmail.com



இரண்டாக வெட்டப்பட்ட புளியங்கொட்டைகளையோ அல்லது எட்டுப்பக்கமுள்ள கட்டங்களையோ பொத்திய கைகளிற்குள் வைத்து குலுக்கி, கையை ஒருசுழற்றுச்சுழற்றிதரையில்உருட்டி விடும் அழகும் உற்சாகமும் இருக்கிறதே... அடடா... எத்தனை பேரின் மனங்களில் இன்னும் உருண்டு கொண்டிருக்கின்றன அந்த நினைவின் கட்டங்கள்?

ஆமாம்... தாயத்தைத்தான் சொல்கிறேன். தொன்னூறுகளின் மையத்திற்கு முன்னர் பிறந்தவர்கள் அனைவரினதும் பால்யத்தில் பின்னிப்பிணைந்திருந்த விளையாட்டு. இன்றும் கிராமங்களில் மட்டும் குற்றுயிரும் குறையுயிருமாக சேடமிழுத்துக் கொண்டிருக்கிறது.

கைகளிற்குள் தாயக்கட்டத்தை வைத்து குலுக்கி, கட்டத்தை தரையில் சுழற்றிவீசும் போது மனதின் கவலைகளும், பாரங்களும் சிதறிக் காணாமல் போன நாட்கள் இனி திரும்பவும் வராது. நவீனதொழில் நுட்ப வளர்ச்சி நமது பாரம்பரியங்களைத்தான் முதல்ப்பலி கேட்டுள்ளது. இதில் தாயமும் ஒன்று. முன்னர் தாயக் கட்டைகள் உருண்ட கைகளில் இன்று கணணியும் சிமாட் போனும்.

நவீன உலகத்திற்கு, தொழில் நுட்பத்திற்கு எதிரான கருத்தல்ல இது. ஆனால் எந்த விடயத்திற்கும் ஒருஎதிர்விளைவு உண்ணடல்லவா? நவீனத்தின் வளர்ச்சி நமது பாரம்பரியங்களை பலி கேட்ட துயரத்தைத்தான் சொல்கிறேன்.

இன்று சின்னஞ்சிறுவர்கள் கூட லப்ரொப், ஸ்மார்ட்போன் என சரளமாக கையாள்கிறார்கள். முன்பள்ளி சிறார்கள் பலர் கண்டிக் கிராஸ் ரெக்வெஸ்ட் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் சகமாணவர் களிற்கு.முன்னர் எதிரெதிரே இருந்து முகத்தைப்பார்த்து ஆடிய ஆட்டங்கள் எல்லாம் இன்று இல்லாமல் போய் கணினித் திரைகளை பார்த்து விளையாடும் காலமாகிவிட்டது. இவற்றில் சில விறுவிறுப்பானவையாகவும், சிறுவர்களின் ஆர்வத்திற்கு தீனி போடுபவையாகவும் இருக்கலாம். மறுக்கவில்லை. ஆனால் விளையாட்டுக்கள் வெறும் விளையாட்டா?

இதுதான் சிந்திக்க வேண்டிய கேள்வி.

குழந்தைகளின் உருவாக்கத்தில் விளையாட்டுக்களின் பங்களிப்பு என்ன? குழந்தைகளை ஒன்றுதிரட்டி, கூட்டு செயற்பாட்டு உணர்வை வளர்க்கும் விதத்தில் இன்றைய கணினி விளையாட்டுக்கள் எத்தனை உருவாக்கப்படுகிறது? கணினி விளையாடும் குழந்தைகள் வெளியுலகத்திலிருந்து தன்னை துண்டித்துக் கொண்டு அடைபட்ட அறைகளிற்குள் வாழப்பழகுவது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத் தாதா?

இதெல்லாம் சிந்தனைக்குரிய கேள்விகள். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லலாம். தொழில்நுட்பம் என்பது குமிழ்பல்ப் போன்றது. உடனடியாக பத்தி கொள்ளும். சீக்கிரம் சுட்டு விடும். ஆனால் நமது பாரம்பரிய விளையாட்டுக்கள் ரியூப்லைற் போன்றது பத்தி கொள்ள நேரம் எடுத்தாலும் ஆபத்தின்றி நீண்டு ஒளிரும்.

பாம்புகேம், சூட்டிங்கேம், கார்கேம் என்று பல வகையான விளையாட்டுக்களை தனிமையிலிருந்து தொலைபேசிகளிலும், கணினியிலும் விளையாடுகிறோம். ஆனால் அவை எம்மை எந்தளவு தூரம் பாதிக்கின்றன தெரியுமா?

1 தனிமையில் விளையாடத் தொடங்குபவரை நேரம் ஆகஆக வெறித்தனமான மனநிலைக்கு கொண்டு செல்லும்.
2 கணணி அருகே செல்லும் போதும் தொலைபேசியை எடுக்கும் போதும் கேம்விளையாடத் தூண்டி விடுகின்றது.
3 தொடர்ந்து கணணிதிரைகளையெ வெறித்துக் கொண்டிருப்பதால் கண் பார்வையில் தாக்கம் ஏற்படுகின்றது.
4 குழு செயற்பாட்டுணர்வை அழிக்கும். எப்பொழுதும் தனிமையை நாடச் செய்யும்.
5 வீட்டுக்குள்ளேயே இவர்களிற்கு தனி உலகத்தை உருவாக்கும். சமூகத்திலிருந்து அன்னியப்படும் அபாயமும் உள்ளது.

இப்படியான பல தீங்குகள் எம்மை ஒட்டிக்கொள்ள நேரிடும்.


ஆனால் பாரம்பரிய விளையாட்டுக்கள் இரண்டு பேர் மூன்று பேர் என்று குழுக்கலாக சேர்ந்து விளையாடும் பொழுது

1 குழு ஒருமைப்பாடு
2 நாம் மட்டுமின்றி பலருடைய சந்தோசம் ஒரே தடவையில்
3 இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ளுதல்

போன்ற நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன. எனவே இப்படிப்பட்ட பாரம்பரிய விளையாட்டான எம்மவர்களுக்கு மிகவும் பிடித்த வேறுபாடின்றி விளையாடும் தாயம் விளையாட்டு எப்படி விளையாடுவது என்று பார்ப்போம்.

இந்த தாயம் இரண்டு இல்லை நான்கு பேர் என்ற எண்ணிக்கையில் விளையாடுவதாகும். நான்கு பேரெனில் எதிரெதிராக உள்ளவர்கள் ஜோடியாகவும் விளையாடலாம்.

முன்னைய காலத்தில் புளியம் விதையை தான் இதற்கு பயன்படுத்துவார்கள். புளியம் விதைகளை சுட்டு, இரண்டாக பிளந்து, பிளக்கப்பட்ட பகுதியை தரையில் நன்கு தேய்த்து வழுவழுப்பாக்கிய பின்னர் விளையாட பயன்படுத்தலாம். 3 புளியம் விதைகளை இரண்டாக்குங்கள். அதாவது ஆறுபாதிகள். உருட்டிப்போடும் போது, பாதியாக பிளக்கப்பட்ட பக்கம் மேல்நோக்கி விழுவதை வைத்து பெறப்படும் எண்ணிக்கை கணிக்கப்படும். உதாரணமாக ஒன்று மட்டும் நிமிர்ந்து விழுந்தால்



தாயம். ஒன்று, நான்கு, ஐந்து, ஆறு இலக்கங்கள் விழுந்தால் தொடர்ந்து குலுக்கலாம்.

மேலே உள்ளது போன்று ஒரு பெட்டியைவரைந்துகொள்ளுங்கள்.

1 நான்கு பக்கமும் 4 பேர் அமர்ந்து கொள்ள வேண்டும். நான்கு புறமும் உள்ள தர அடையாளம் நான்கு பேரினுடையதுமாகும்.
2 நால்வரும் தமக்கு தமக்கென்று வித்தியாசமான விதைகளை, நிறமுடைய பொருட்களை வைத்துக் கொள்ள வேண்டும். (கல், நிற உருண்டை, விதை போன்றவற்றையும் பயன் படுத்துவர்) .
3 இப்பொழுது வெட்டப்பட்ட நான்கு புளியம் விதைகளையும் ஒருவர் குலுக்கி போடுவர். அப்பொழுது அவருக்கு ஒரு வித்து நிமிந்து விழுந்தால் தாயம் அவர் ஒரு காயினை பெட்டிக்குள் ஏற்ற முடியும்.
4 அதை தொடர்ந்து அடுத்தவர் தாயக்கட்டையை உருட்டிப் போடுவார். இப்படியாக வலச் சுற்றில் உருட்டல்முறை வரும்.
5 இவ்வாறு தாயம் விழுந்தால் பெட்டிக்குள் காயை ஏற்றி பின்னர் விழும் எண்ணிக்கைக்கு ஏற்ப வலது புறமாக நகர்த்தி வர வேண்டும். அவ்வாறு நகர்த்தி வரும் பொழுது எதிராளியின் காய்கள் உள்ள பெட்டிக்கு உங்கள் காய்கள் சென்றடைந்தால், எதிராளியின் அந்தக் காய்கள் வெட்டப்படும். அவை மீண்டும் தாயம் போட்டு முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். இப்படி செல்லும் காய்கள் மையத்திலுள்ள பெட்டியை முதலில் சென்றடைய வேண்டும். ஒருவரது நான்கு காய்களும் சென்று சேர்ந்ததும், மீண்டும் தாயம் போட்டு அவற்றை இறக்க வேண்டும். இதை யார் முதலில் செய்கிறாரோ அவருக்குத்தான் வெற்றி.

எப்படி தாய விளையாட்டு... பசுமைநிறைந்தநினைவுகள் மீண்டும் மனதில் மையம் கொண்டதா?

உங்கள் கணணி, தொலைபேசிக்கு ஓய்வு கொடுத்துவிட்டு தாயக்கட்டைகளை கைகளில் எடுங்கள். உங்கள் சகோதரர்கள். அல்லது கணவன், மனைவி. அதுவும் இல்லாவிட்டால் உங்கள் நண்பர்களை பிடியுங்கள். பிறகென்ன, ஆரம்பிக்கப்பட்டும் ஆட்டம். பக்கத்து வீட்டிலிருப்பவரின் பெயரே தெரியாமல் உள்ள நகரவீட்டு வாசிகளே, ஒரு தாயக்கோடு வரையுங்கள். ஊராரின் சாதகமே உங்கள் விரல்நுனியில் இருக்கும்.



# மணப்பெண் அழகாக தோற்றமளிக்க செய்ய வேண்டியவை






“கல்யாணம் என்பது ஆயிரங்காலத்து பயிர்” என்று சொல்வார்கள். அதனால்தான் அந்த நாளை மங்களகரமாக கொண்டாடுகிறார்கள். திருமண வீட்டிற்கு சென்றால் அனைவருடைய கண்களும் மணமகளின் அழகையே மொய்க்கும். மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்வது என்பது மிக முக்கியமானது. சரி மணப்பெண்ணுக்கு என்னென்ன அலங்காரம் செய்வது என்று பார்ப்போமா...

**திருமணத்திற்கு முன்...**

- அழகாகவும், மிடுக்காகவும் தோன்ற எளிமையான உடற்பயிற்சிகளை செய்து வர வேண்டும். நடப்பது கூட சிறந்த உடற்பயிற்சிதான். தினமும், காலை மாலை அரைமணிநேரம் நடந்து செல்லுங்கள். இது இரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன், உடல் எடையையும் குறைக்கிறது. இரத்த ஓட்டம் சீராக இருக்கும் போது அதிகம் களைப்பு ஏற்படாது.
- உடற்பயிற்சி செய்த பின் அதிகமாக பசி ஏற்படும். அதற்காக நிறைய சாப்பிட்டு விடாதீர்கள். தினமும் அளவுடன் சாப்பிடுங்கள். தினமும் 2 பழங்களாவது சாப்பிடுங்கள். பப்பாளி பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி சாப்பிடலாம். அதன் மீது மிளகுப் பொடி தூவினால் பசி அடங்குவதுடன் சருமமும் பளபளப்பாக மாறும்.
- முகத்திற்கு தரமான ப்ளீச்சிங், ப்ரூட் பேஷியல் (fruit facial) செய்துகொள்ளலாம்.
- திருமணத்திற்கு ஒருமாதத்திற்கு முன்பு கோல்டன் பேஷியல், தலைமுடி பராமரிப்பு ஆகியவற்றை செய்யலாம். முகப்பரு உள்ளவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்பே அழகுக் கலை நிபுணரிடம் சென்று சரிசெய்துகொள்ளுங்கள்.
- தலைமுடியை உறுதியாக சுத்தமாக வைக்க சூடான எண்ணையை தேய்த்து மசாஜ் செய்துகொள்ளுங்கள். நல்ல தூக்கம் அவசியம். தினமும் 8 மணிநேரம் தூங்குங்கள். தூக்கமும் அழகைக் கூட்டும்.
- கண்ணுக்குகீழ் கருவளையங்கள் தோன்றினால், முட்டையின் வெள்ளைக்கருவை எடுத்து அந்த இடத்தில் தேய்த்து, உலர்ந்ததும் கஞ்சி தண்ணீர் கொண்டு கழுவி விடுங்கள்.
- நலங்கு மாவுடன் மஞ்சள் தூளையும் சேர்த்து கை, கால்களில் தடவினால் கரும் புள்ளிகள் மறையும்.
- திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் கை, கால்களில் மருதாணி போட்டுக் கொள்ளலாம். ராஜஸ்தானி மெகந்தி, கறுப்பு மெகந்தி, அராபிக் மெகந்தி என்று பலவகையான டிசைன்கள் உள்ளன.
- மூன்று நாட்களுக்கு முன்பே புருவத்தை அழகுபடுத்திக் செய்துகொள்ளுங்கள்.







**மேக்கப் போடுவது எப்படி?**

மாலையில் நடைபெறும் ரிசப்ஷனுக்கு சற்று அதிகமாகவும், காலையில் மிதமாகவும் மேக்கப் போட்டுக்கொள்ளுங்கள். திருமண நாளன்று அதிகமாக வியர்த்துக் கொட்டும். அதனால், கிரீம் பேஸ் மேககப்பை விட, பவுடர் மேக்கப் போடுவது நல்லது. மேக்கப் போடுவதற்கு முன் ஐஸ்கட்டிகளைக் கொண்டு முகத்திற்கு ஒத்தடம் கொடுங்கள்.

அவரவர் நிறத்திற்கேற்ப பவுண்டேஷன், பவுடர், லிப்ஸ்டிக் போட வேண்டும். கண்களைச் சுற்றி ஐலைனர் வரையும் போது கலைநயத்துடன் வரைய வேண்டும். நிறத்திற்கேற்ப 'ஐஷேடோ'வைத் தேர்ந்தெடுங்கள். மேக்கப் போடும்போது கழுத்து, கைகள் வரை ஒரே சீராக போடப்பட்டுள்ளதா என்று கவனிக்க வேண்டும்.

கன்னத்திற்கு போடப்படும் 'ரூஜ்' தனியாக சிவப்பாக தெரியாமல் முகத்தோடு ஒன்றிப் போக வேண்டும். இதைச் சரியாக செய்தால் பள்ளமாக உள்ள கன்னங்களைக் கூட சரிசெய்திட முடியும்.

மெரூன் அல்லது பிரவுன் நிறத்தில் பொட்டு வைத்தால் போட்டோவில் பளிச் சென்று தெரிவீர்கள். மேலும் அழகூட்ட... பொட்டைச் சுற்றி கற்களால் டிசைன்கள் செய்து கொள்ளுங்கள்.

மேக்கப் செய்யும்போது முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், தோலில் உள்ள சுருக்கங்கள் மறைந்து விட வேண்டும். நல்ல தரமான மேக்கப் பொருட்களையே பயன் படுத்துங்கள். இல்லாவிட்டால், திருமண நேரத்தில் தோலில் அலர்ஜி ஏற்படும்.

**சிகையலங்காரம்**

மணப்பெண்ணின் அழகுக்கு மெருகூட்டுவது சிகையலங்காரம். முன்புறம் முகத்தின் மேற்புறம் சிகையலங்காரம் செய்வதற்கு 'ப்ரண்ட் செட்' என்று பெயர். இதற்கு பொருந்தும் அளவில் தான் பின்புறம் தலையை அலங்கரிக்க வேண்டும். பின்னல் போட்டு ஜடை அலங்காரம் செய்து, பின்னலில் பூ வைப்பதற்கு பதில் ஜரிகை, முத்து, கற்களால் செய்யப்பட்ட மோடி பைப்கள், பைப்பின்னல், ஐந்துகால் பின்னல், மேலே கொண்டை கீழே பின்னல் போடுவது என்று பல வகைகள் உள்ளன.

கொண்டை போடும்போது மணப்பெண்ணின் உயரம், பருமன், கழுத்தின் உயரம் போன்றவற்றைக் கணக்கிட வேண்டும். குட்டையான பெண்களுக்கு சற்று தூக்கியவாறு கொண்டையும், நீளமான கழுத்துள்ளவர்களுக்கு கழுத்தை மறைக்கும் அளவில் கொண்டையை இறக்கியும் போட வேண்டும். முகம் நீளமாக உள்ளவர்களுக்கு

> **மெரூன் அல்லது பிரவுன் நிறத்தில் பொட்டு வைத்தால் போட்டோவில் பளிச் சென்று தெரிவீர்கள். மேலும் அழகூட்ட...பொட்டைச் சுற்றி கற்களால் டிசைன்கள் செய்து கொள்ளுங்கள்.**


காதுகளை மறைக்கும் விதத்தில் சிறிது முடியை எடுத்து சுருட்டி விடலாம். அகலமான முகத்தை உடையவர்கள் முடியைத் தூக்கிக் கட்ட வேண்டும். நடுவகிடு எடுத்து அதில் நெற்றிச்சுட்டியை அணியலாம். அல்லது காதின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு முடியை வாரி எடுத்துச் சென்று பின்குத்தி விட்டு, பின்னால் அழகாக கொண்டை போடலாம்.

**திருமணப் புடவை**

திருமணப் புடவை வாங்கும் போது, அவை குறைந்தது 2 ஆண்டுகளாவது அணிய வேண்டியிருப்பதால், தரமான புடவையாக பார்த்து வாங்குங்கள். அவை நீங்கள் அணியும் நகைகளுக்கு பொருத்தமாக இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். உதாரணமாக, அரக்கு நிற ஜரிகை போடர் போட்ட பட்டுப்புடவை கறுப்பாக சற்று குண்டான பெண்களுக்கு பொருத்தமாக இருக்காது. சிவந்த மேனியுடைய பெண்களுக்கு மிளகாய்ப்பழ சிவப்பில் மெல்லிய ஜரிகை போடர் போட்ட பட்டுப் புடவை எடுப்பாக இருக்கும்.

போட்டோவில் பளிச்சென்று தெரியக்கூடிய வகையில் உடைகளைத் தேர்வு செய்யுங்கள். வாடாமல்லி, மயில் கழுத்து நிறம், தேன் நிறம் போன்ற வண்ணங்கள் ரிசப்ஷனுக்கு ஏற்றவை. பட்டு சேலைக்கு சில்க், பருத்தி வகையில் உள்ள சோளிகள் அணியலாம்.





# தங்கம் போல் ஜொலிக்க தக்காளி பேசியல்

தக்காளிப்பழத்தால் எப்படிப்பட்ட பெண்ணின் முகத்தையும் தக தகக்க வைத்து விடலாம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

தக்காளியானது முக சுருக்கத்தை விரட்டி உங்களை இளமையானவராக மாற்றி விடும்.

நீண்ட நாட்களாக முகத்தை சரிவர பராமரிக்காதவர்களின் முகத்தில் உள்ள செல்கள் இறந்து போய் முகம் பொலிவிழந்து விடும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியின் சாறுடன் கால் தேக்கரண்டி றவையை கலந்து கொள்ளுங்கள். இதை நன்றாக முகத்தில் தேய்த்து கழுவுங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்து பாருங்கள் உங்கள் முகமும் பளிச் என்று பிரகாசிக்கும்.

சில பெண்களுக்கு முகத்தில் மென்மை தன்மை குறைந்து முறட்டுத்தனமாக தெரியும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியை எடுத்து கூழாக்கி கொள்ளுங்கள். இதனுடன் அரைத் தேக்கரண்டி தயிரை கலந்து கொள்ளுங்கள். இதனை முகத்திற்கு பூசி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். முகம் மிருதுவாகி தங்கம் போல் தகதகவென ஜொலிக்கும்.

சில பெண்களின் கண்ணுக்கு கீழ் கருவளையம் தோன்றி எதையோ பறி கொடுத்தது போல் வலம் வருவார்கள். இவர்களை அழகு தேவதைகளாக மாற்றுவதில் தக்காளி சிறந்த பங்கு வகிக்கும்.

ஒரு வெள்ளரித்துண்ட அரைத் தக்காளி இரண்டையும் அரைத்து கொள்ளுங்கள் இமைகளின் மேலே கலவையை பூசி இரண்டு நிமிடம் கழித்து கழுவுங்கள். ஓரிரு வாரங்கள் இப்படி செய்து வந்தாலே கருவளையம் காணாமற் போவதுடன் கண்களும் பழிச் சென்று இருக்கும்.

பெரும்பாலான பெண்கள் முகத்திற்கு கொடுக்கும் முக்கியத்தவத்தை கழுத்திற்கு கொடுப்பதில்லை. இதனால் கழுத்தில் கறுப்பு ககிறு கட்டியது போல் கருவளையம் தோன்றிவிடும். ஆனால் இதனை தக்காளி பேஸ்ரால் எடுத்துவிட முடியும்.

தக்காளி சாறு அரை டிஸ் பூன் தேன் அரை டிஸ் பூன் சமயல் சோடா ஒரு சிட்டிகை. இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள். இந்த பேஸ்ரை கருவளையத்தின் மேல் பூசி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள். இப்படி வாரம் 3 தடவை செய்த வந்தால் கருவளையம் மறைந்து விடும்.

கண்ணாடியை பார்க்கவே பிடிக்காமல் கரும் புள்ளியும் கரும் திட்டுக்களும் உங்கள் முகத்தை ஆக்கிரமித்து கொண்டுள்ளனவா? உங்கள் முகத்தை கண்ணாடி போல் மாற்றி காட்டுகின்றது இந்த தக்காளி பேஸ்ற்.

உருளைக்கிழங்கு துருவல்சாறு 2 தேக்கரண்டி, தக்காளி விழுது அரை தேக்கரண்டி இரண்டையும் கலந்து கொள்ளவும். இந்த பேஸ்ரை முகத்திலும் கழுத்திலும் தடவி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். தொடர்ந்து இதனை செய்து வந்தால் சில வாரங்களில் வித்தியாசத்தை உணர முடியும்.

இப்படியாக வீட்டில் இருந்த வாறே உங்கள் முக அழகை நீங்கள் மெருகூட்டி கொள்ள முடியும். தக்காளியால் உங்கள் முகத்தை பளிச்சிட வைக்கலாம். மேற்கூறிய வாறு இதை செய்து பாருங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.



# அதிகம் வியர்வையா?

கோடைகாலம் என்றாலே பலருக்கு வெறுப்புத் தான் ஏற்படும். கோடையில் வெம்மையும், வியர்வையும் தான் எல்லோரதும் நினைவில் தட்டுப்படும் விடயங்கள். வியர்வை அதிகம் சுரக்கும் ஒரு சிலரது உடலில் நாற்றமும் ஏற்படும். வியர்வையினால் உண்டாகும் இந்த நாற்றம் நமது அருகில் இருப்பவர்களை முகம் சுளிக்க வைக்கும். அத்தகைய நிலை உண்டாகாமல் பார்த்து கொள்ள வேண்டியது அவசியம்.

குளிக்கும் நீரில் ஓர் எலுமிச்சை பழத்தில் இருந்து பிழியப்பட்ட சாறை ஊற்ற வேண்டும். அதில் கால் தேக்கரண்டி அளவு உப்பையும் சேர்க்க வேண்டும். இந்த நீரில் குளித்து வந்தால் வியர்வை நாற்றம் அறவே நீங்கி விடும். இரண்டு தேக்கரண்டி சீயாக்காய் தூள், இரண்டு தேக்கரண்டி வெந்தயத்தூள் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து களிபோல் தயாரிக்கவும். இதை ஒரு நாள் விட்டு ஒரு நாள் தலைக்கு தேய்த்து குளித்து வரவும். இரண்டே வாரத்தில் உடலில் நிரந்தரமாக குடி கொண்டிருக்கும் வியர்வை நாற்றம் ஓடி விடும். உடலும் தலையும் சுத்தமாகி மனம் வீசும்.



# மெதுமையான இடியப்பம்

சாப்பிடவும், சமைக்கவும் இலகுவான சாப்பாடு இடியப்பம். இந்த இடியப்பத்தை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக தயாரிப்பார்கள். அரிசி மா, அவித்த கோதுமை மா இரண்டையும் சம அளவில் கலந்து அவிப்பார்கள். சிலர் தனி கோதுமை மாவிலோ அல்லது தனி அரிசி மாவிலோ அவிப்பார்கள். மாவை உரலில் பிழிய பதமாக்குவதற்கு பெரும்பாலும் எல்லோரும் வெந்நீரைத் தான் பயன்படுத்துவார்கள்.

ஆனால், தனி அரிசி மாவை வெந்நீருக்குப் பதிலாக சாதாரண நீரைப் பயன்படுத்தி பதப்படுத்தி இடியப்பம் தயாரித்தால், இடியப்பம் மிகவும் மென்மையாகவும், சுவையாகவும் இருக்கும். அதுமட்டுமல்ல, இடியப்ப உரலில் பிழிவதற்கும் இலகுவாக இருக்கும். அவித்த இடியப்பங்களை, ஓலைப்பெட்டி அல்லது சிறிய துவாரங்களுள்ள பாத்திரத்தில் அடுக்கி மூடி வைத்தால், அடியில் உள்ளவை வியர்வையினால் பாதிக்கப்பட மாட்டாது.

# ஜீன்ஸ் வாங்குவதற்கு முன்னர் கவனிக்க வேண்டியவை

இன்றைய பெண்கள் அதிகம் விரும்பி அணியும் ஆடைகளில் ஜீன்ஸ் ஒன்றாகி விட்டது. ஆனால் சரியான ஜீன்சை எப்படி தெரிவு செய்வது என்பது பற்றி பல பெண்கள் அறிவதும் இல்லை உணர்வதும் இல்லை.

உங்களுடைய உடல் அமைப்பை பொறுத்தே நீங்கள் ஜீன்ஸ் வாங்க வேண்டும்.

மற்றவர்கள் அணிவதால் அழகாக இருக்கிறது என்பதற்காக அதே ஜீன்ஸினை நீங்கள் வேண்டினால் உங்களுக்கு பொருந்தாமல் இருக்கும்.

மெல்லியஉடல்அமைப்புஉடையவர்கள் சற்று பருமன் அதிகமானவர்கள் என்ற ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஜீன்ஸ் உள்ளது. (உ.ம்: ஜீன்ஸ் அணிபவர்கள் மெலிந்தும் உயரமாகவும் காட்சி அளிப்பார்கள்.)

இடுப்பு பகுதியில் தொள தொள என்று இருக்கும் ஜீன்ஸ் பின்புற அழகை கெடுக்கும் என்பதால் இதனை தவிர்க்க வேண்டும்.

ஜீன்ஸ் நீளம் உங்கள் சப்பாத்தின் பாதியளவு வரை இருக்க வேண்டும். அதற்கும் குறைவாக இருந்தால் உட்காரும் போது மேலே எழுந்து கால்கள் தெரியும். ஒரே மாதிரி ஜீன்ஸினை எப்பொழுதும் வாங்காமல் புதுப் புது டிசைன்களை தெரிவு செய்தல் வேண்டும்.



# நீரிழிவு நோயாளர்கள் கவனத்திற்கு

**முழுமையாக சேர்த்துக்கொள்ள வேண்டிய உணவுகள்**

எல்லா விதமான கீரை வகைகள் புதினா, கருவேப்பிலை, கொத்தமல்லி, முருங்கைக்காய், கத்தரிக்காய, பீன்ஸ், முட்டைக்கோஸ், பாகற்காய், சுரைக்காய், வெள்ளைப்பூசணி, காராமணிக்காய், வெண்டிக்காய், வெங்காயம், பப்பாளிக்காய், கோவைக்காய், இஞ்சி, எலுமிச்சை, வாழைப்பூ, வாழைத்தண்டு, பீர்க்கங்காய், புடலங்காய், வெள்ளை முள்ளங்கி, தக்காளி, காலான் போன்றவை.

**மிதமாக சேர்க்க வேண்டியவை**

பட்டாணி, முழுக்கடலை, பச்சைப்பயறு போன்ற பயறுவகைள். அரிசி, கோதுமை, கேள்வரவு, சோளம், மக்காசோளம் போன்றவையும் அப்பிள், பப்பாளி, கொய்யா, தோடம்பழம் ஏதாவது ஒன்று சீனி கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் போது துவாரம் பருப்பு, பயத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, எள்ளு, மைசூர் பருப்பு, உழுத்தம் பருப்பு போன்ற பருப்பு வகைகளும் குறிப்பிட்ட அளவு எண்ணெயும் சேர்க்கலாம்.

**முற்றிலும் ஒதுக்கப்பட வேண்டிய உணவுவகை.**

நிலத்தின் கீழே விளையும் உணவு வகைகள் கிழங்கு வகைகள். உருளைக்கிழங்கு, பீற்றூட், நிலக்கடலை போன்றவை. உறையும் கொழுப்பு வகைகள் (வெண்ணெய், நெய், மாஜறின்) சீனி தேன் வெல்லம் போன்ற இனிப்பு வகைகளும் அதனால் செய்யப்படும் பொருட்களும் முந்திரி பாதம் போன்ற பருப்பு வகைகளும். தேங்காய் இளநீர் குளிர்பானங்கள் கோர்லிக்ஸ் உள்ள பானங்கள் உலர்ந்த பழவகைகள் வாழைப்பழம் மாம்பழம் சப்போட்டா பலா திராட்சை போன்ற பழ வகைகள் முற்றாக தவிர்க்க வேண்டும்.

# சம்பள நாள்



அளவெட்டி
ப. உதயகுமார்

காலை வேளை கடவுள் வணக்கத்தை முடித்துக் கொண்டு வந்து வந்து கலண்டரில் ஒற்றையைக் கிளித்தேன். அதில் 25ம் தேதி காட்டியது. ..ஓ.. இன்று சம்பள நாள். அனேகமானோருக்கு அது மகிழ்ச்சியான நாளாக இருந்தாலும் என்னைப் போல ஏழைகளாக உள்ள அரசாங்க உத்தியோகம் பாக்கிறவைக்கு இது துக்க தினம்.

எடுக்கும் சம்பளத்தை எப்படி பங்கிடுவது? துண்டு விழும் தொகையை என்ன செய்வது? மாதம் தோறும் சம்பள நாளன்று இப்படியான பிரச்சினைகள் வருவது வழமைதான். ஒவ்வொரு மாதமும் துண்டு விழும் தொகைக்காக கடன் பட்டு, கடன் பட்டு, வட்டியும் முதலுமாக பெரிய தொகை வந்து விட்டது. இந்த மாதம் யாரிட்டை கடன் வேண்டுவது என் மூளை பலமாக வேலை செய்தது.

கடைக்காசு, வட்டிக்காசு, பால் வேண்டிய பணம், மின்சாரப் பட்டியல் பணம், தொலைபேசி கட்டணம், பிள்ளைகளின் படிப்புச் செலவு, மீன் வேண்டிய நிலுவை, எல்லாவற்றையும் ஒருகணம் நினைக்கின்றேன். எடுக்கும் சம்பளத்தை விட துண்டு விழும் தொகை என்னை மிரட்டியது.

“அப்பா இண்டைக்கு உங்களுக்கு சம்பளமெல்லே, எனக்கு பாட சாலையிலை “டான்ஸ்” போட்டி இருக்குதப்பா, நல்ல சாறி வாங்க வேணும். இதுகளுக்கு எப்படியும் ஒரு ஐயாயிரம் வேணும். அதோடை சப்பாத்து பிரிஞ்சு போச்சுது. ரியூசன் காசு கட்டவேணும். இந்த மாதச் சம்பளத்திலை காசு தந்திடுங்கோ” இளைய மகள் பிரியாவின் பட்டியல்.

“அப்பா இந்தாங்கோ பிளேன்ரி.... மா முடிஞ்சிது... இண்டைக்கு சம்பள நாள் தானே, வரேக்கை வேண்டிக்கொண்டு வாங்கோ” மூத்தவள் புனிதாவின் கட்டளை. நல்லவேளை புனிதா வேறொன்றையும் கேட்கவில்லை என்று மனம் திருப்திப்பட்டது. ஏனென்றொல் அவள் மூன்று நாட்களுக்கு முன்னம் தான் வீட்டுக்கு வந்திருக்கிறாள். மூண்டு வரிசமாக வெளிமாவட்ட கல்வியியல் கல்லூரியிலை படிச்சவள். மூண்டு வரிசமும் பத்து லட்சத்துக்கு மேலை செலவழிச்சுத்தான் ஆசிரியர் என்ற பட்டம் என்மகளுக்குக் கிடைத்தது.

“அப்பா நான் சிங்கள வகுப்புக்கு போகப்போறன். அதோடை கணணியை படிச்சனெண்டால் நல்லதுதானே. நியமனம் வாறதுக்கு இடையிலை இதெல்லாத்தையும் படிச்சு முடிச்சிட வேணும். சிங்கள வகுப்புக்கும், கணிணி வகுப்புக்கும் முற்காசு கட்டவேணும். எனக்கு ஒரு நாலாயிரம் தாங்கோ” புனிதா இப்படிக் கேட்பாள் என்று எண்ணவே இல்லை.

“சரி பிள்ளை பாப்பம்”

“என்னப்பா பாப்பம் எண்டு சொல்லுறியள் இண்டைக்கு கட்டவேணும்” எனக்கு தலையெல்லாம் சுற்றியது.

“நீங்கள் கேக்கிறதொண்டும் நடவாது புனிதா. பிறகேன் கேக்கிறியள்... கண்டறியாத அரசாங்க உத்தியோகம்... உங்கை கூலி வேலை செய்யிறதுகளெல்லாம் நல்லாயிருக்குதுகள். உத்தியோககாரன் எண்டு சொல்லி கலியாணம் கட்டி என்னத்தை கண்ட மிச்சம்” என் தர்ம பத்தினி பத்திரகாளியானாள். மனைவியின் திட்டுக்களையும், பேச்சுக்களையும் கேட்டு எனக்கு பழகிப் போய்விட்டது. என்னை எவருமே புரிந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம் தான் என்னை வாட்டியது. காலைச்சாப்பாட்டை எதிர்பார்க்காமல் அலுவலகம் புறப்படத் தயாரானேன்.

“அப்பா சாப்பிடாமல் வெளிக்கிடுறியள்” புனிதா தடுத்தாள்.

“விடு புனிதா போகட்டும், கொழுப்பு வத்தட்டும்!! மனைவி சாபமிட்டாள்.

காலைச்சாப்பாட்டோடை மத்தியானம் கட்டித்தாற சாப்பாடும் இல்லை. சைக்கிளை எடுத்தேன். முன் சில்லு காத்துப்போய் நிண்டது... இரும்பு கூட என்னை மதிக்கவில்லை. டயறில் “பூ” இல்லை மெழுகு மாதிரி வந்துவிட்டது. அது கூட எவ்வளவு காலம் பொறுக்கும்.

“அம்மா சாப்பாட்டை குடுத்து விடுங்கோவன்” இறையவள் அறிவுரை சொன்னாள்.

“போகட்டும் விடு. இஞ்சை இல்லையெண்டால் அவள் கொண்டு வந்து குடுப்பாள் தானே” மனைவி ஆவேசப்பட்டாள்.

எனக்கு கோபம் தலைக்கேறியது... போட்டு மிதிக்கவேணும் போல இருந்தது... வளர்ந்த பிள்ளையள் முன்னால் பேசினால் எனக்கு அவமானம் என்று பேசாமல் கோபத்தை அடக்கிக் கொண்டேன். சைக்கிள் பம் வாங்கிவர இளையவளை பக்கத்துவீட்டுக்கு அனுப்பி விட்டு காத்திருந்தேன். என் தொலைபேசி அலறியது நடுங்கும் கரங்களினால் எடுத்தேன். எந்தக்கடன் காறனோ எண்டு தெரியாமல் “ஹலோ” குரலும் தளதளத்தது.

“எவ்வளவு காலம் தவணை சொல்லியறியள்.... இண்டைக்குக் காசு தராட்டி பொலிசிலை தான் சந்திக்க வேண்டிவரும்” என்று கடன்காரன் மிரட்டினான்.

மகளை வெளிமாவட்ட கல்வியல் கல்லூரிக்கு அனுப்பவும், இடைக்கிடை மாதம் தோறும் அனுப்பவும் எண்டு வேண்டின காசு ஒரு லட்சம் வந்திட்டுது. காசு தந்தவன் தான் பொலிசுக்கு இழுப்பான் என்கிறான்.

மகள் படிச்சு ஆசிரியாராகவும் வந்திட்டாள். வேண்டின கடன் கட்டேல்லை எண்டால் யார் தான் பேசமாட்டினம். என் மனச்சாட்சி எனக்கு சொல்லியது.

டயரின் பசிக்காக சாற்றை நிரப்பிக் கொண்டு வெளியேறினேன். என்மனம் நிம்மதியைத் தேடியது. அது எங்கே இருக்கின்றது என்று நான் தேடினேன். பசி என் வயிற்றைக் கிள்ளியது. இரவும் சாப்பிடவில்லை, காலையும், ஏன் மதியமும் இல்லை. சாப்பாட்டுக் கடையைக் கண்டு சைக்கிளின் வேகத்தைக் குறைத்தேன். சேட் பொக்கட்டில் கை வைத்தேன் அதுகூட வெறுமையாக இருந்தது. என்ன வாழ்க்கை... கண்கள் கலங்கியது யாரும் பார்ப்பதற்கு முன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

“இஞ்சை இல்லையெண்டால் அவள் கொண்டு வந்து குடுப்பாள் தானே” மனைவி சொன்ன இந்த வார்த்தைகள் மனத்திரையில் முட்டி மோதிக்கொண்டது.

என் அலுவலகத்தில் பணியாற்றும் கமலா, சற்று வசதியானவள். திருமணம் முடித்து கணவன் இறந்து விட்டான். இரண்டு பிள்ளைகளோடு வாழ்ந்து வருகின்றாள்.

பணத்தட்டுப்பாடு வருகின்ற போது எனக்கு உதவிக்கரம் நீட்டுகின்றவள் கமலா தான். என்னுடைய சோக வாழ்வைத் தெரிந்து கொண்டிருந்தாள். நல்ல சாப்பாடு வீட்டில் செய்தால், எனக்கும் கட்டி வந்து தருவாள். எல்லோர் முன்னிலையிலும் கடன் கேட்க, என் குடும்ப கஸ்டத்தை சொல்ல எனக்கு மனம் வராது. கமலாவை தனிய சந்தித்தே கடன் கேட்பேன். பல நாட்கள் கமலா முன் அழுதிருப்பேன் என்னுடைய பரிதாபத்தை எண்ணியே கடன் தருவாள். இது என் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு சந்தேகத்தை உண்டாக்க, கதை வீடு வரை போக சண்டை தான் வீட்டில் நடக்கும். என்ன உலகமிது... வாழவும் விடாது சாகவும் விடாது... மனம் அடிக்கடி எண்ணிக்கொள்ளும்.

“அப்பா” குரல் வந்த திசையை பார்த்தேன்... மகிழ்ச்சி பொங்க ஓடி வந்தான் மகன் சிவகரன். “என்ன சிவகரன்” கேட்டேன்.

“அப்பா எனக்கு கம்பஸ்சுக்கு கிடைச்சிட்டுதப்பா” மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான் அவன்.

“நீ கெட்டிக்காரன் தானே, கம்பஸ்சுக்கு போவாயெண்டு எனக்கு நம்பிக்கை இருந்தது. கடவுள் காப்பாற்றிப் போட்டான்”. மனம் ஒரு கணம் சந்தோசப்பட்டது.

நான் கஸ்டப்பட்டுத் தான் சந்தோசப்படுகிறேன் என்பதை இலகுவாக புரிந்து கொண்ட மகன் “சாப்பிட்டியளா அப்பா, முகமெல்லாம் வாடிக்கிடக்குது” கேட்டான். நான் மௌனமானேன். கண்கள் குளமாகியது. தன்னிடமிருந்த நூறு ரூபா தாளை என்னிடம் தந்து சாப்பிடுங்கோ என்று விட்டு அவன் வீடு நோக்கிப்போக நான் அலுவலகம் நோக்கி விரைந்தேன். மகன் தந்த 100 ரூபா தாள் என்னைப் பார்த்து சிரித்தது. வயிறு பசியால் துடித்தது. கடையில் சாப்பிட்டு விட்டு போகலாம் என்று மனம் எண்ணியது. அதையே முடிவாக்கிக் கொண்டு சைக்கிள் பெரலை மிதிக்கிறேன்.

என் குடற்பசியை விட டயரின் ரியூப் பசி அதிகமாகியது. காற்றுப்போன சைக்கிளை உருட்டிச் சென்ற நான் கடை ஒன்றிலே காற்றை நிரப்பினேன். அது சொல்லுக் கேட்கவில்லை. ஒட்டித்தரும்படி சொன்னேன்.

என் அலுவலக நேரத்தை கணக்கிலெடுத்தகடைக்காறன் துரிதமாகச் செயற்பட்டான். இரண்டு ஒட்டு, எண்பது ரூபாவை அவனுக்கு கொடுத்து விட்டு மீதி இருபது ரூபாவுக்கு சாப்பிட முடியாது. விதி என்னைப் பார்த்து சிரித்தது.

அலுவலகம் சென்ற நான் என் கடமையில் மூழ்கிப்போனேன். மதியம் எல்லோரும் சாப்பாட்டு பொதிகளுடன் சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தார்கள். நான் மட்டும் தலைவிதியை நொந்தபடி அலுவலக வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தேன்.

“சிவராசன்ணை... நீங்கள் சாப்பிட போகேல்லையே..” கமலா கேட்டவாறு வந்தாள்.

“இல்லை கமலா நான் சாப்பாடு கொண்டு வரேல்லை” கமலாவுக்கு பொய் சொல்ல மனம் இடம் தரவில்லை.

“இந்தாங்கோ அண்ணை சாப்பாடு... இட்டலி அவிச்சனான் உங்களுக்கும் கொண்டு வந்தனான்” கமலா கட்டாயப்படுத்தினாள்.

“வேண்டாம் கமலா... நீ என்னிலை இரக்கப்பட்டு உதவி செய்யிறதை சனம் பிழையாக கணக்கெடுக்குது...” இதுக்கு மேல் பேச எனக்கு வார்த்தை வரவில்லை.

“சிவராசன்ணை எங்களுக்கை உள்ள உறவு அண்ணன் தங்கை உறவு தான். கதைக்கிற சனத்தை ஒண்டும் செய்ய முடியாது... நீங்கள் சாப்பிடுங்கோ” பார்சலை தந்துவிட்டு போனாள் கமலா.

கையிலே கிடைத்த சம்பளத்துடன் கடன் வாங்கும் கடைக்கு போனேன். அங்கே கணக்கு 24,725 ரூபா என்று சொன்னான் முதலாளி. “இஞ்சை பாருங்கோ சிவராசன்ணை, வரிசமும் முடியுது... இந்த முறையெண்டாலும் முழுசாக கணக்கை முடியுங்கோ” கடைக்காரனின் வார்த்தைகள் எனக்கு வேதனை ஊட்டியது. ஒருவாறு முதலாளியுடன் பேசி காசைக்குறைத்துக் கொடுத்துவிட்டு அடுத்த கட்டம் நோக்கினேன்.

வட்டிக்காசு ஒருவனுக்கு பத்தாயிரம், மற்றொருவனுக்கு ஐயாயிரம், நாலாயிரம் என்று வட்டியின் பட்டியல், அவர்களை சந்தித்து நிலமையை எடுத்துச் சொல்லி வாரம் தவணையும் கேட்டுக் கொண்டேன்.

மீன்காரன் சிவா இவன் ஒரு மாதிரியான ஆள். அவனின் காசு 3800 ரூபாவையும் கொடுத்து விட்டேன். பால்க்காரனுக்கு 1200 ரூபா மீதி என்னிடமிருப்பது வெறும் 1300 ரூபா மட்டும் தான். வீட்டை

சண்டை தான் வரும் என்பதைத் தெரிந்து கொண்டே வீட்டுக்குப் போனேன். "அப்பா எனக்கு காசைத் தாங்கோ. இண்டைக்கு இல்லாட்டி பிறகு உங்களிட்டை காசு வராது". இளையமகள் சொன்னாள்.

"அப்பா பின்னேரம் அஞ்சு மணிக்கு சிங்கள வகுப்பு தொடங்குது. காசு கட்டித்தான் சேரவேணும். காசு தாறியளே" மூத்தவள் கேட்டாள்.

இவர்களுக்கு என்ன பதில் சொல்லுறது. எப்படிச் சொல்லி விளங்க வைக்கிறது மனம் போராடியது. "வாற கிழமை கயந்தாவின்ரை கலியாண வீடு நகை நட்டுத்தான் இல்லை. சாறி ஒண்டு கடனாக வேண்டினனான் 25ம் திகதி தான் தவணை சொன்னன் இன்டைக்கு குடுக்கவேணும்" மனைவியின் கணக்கு இது.

"நீங்கள் ஆளுக்கொருத்தராக காசு கேக்கிறியள்... எடுத்த சம்பளம் கடைக்கு கட்டிப்போட்டன். மீன் காசும், பால் காசும் குடுத்திட்டன். கொஞ்சம் பொறுங்கோ ஆரிட்டையாலும் கடன் வேண்டித்தாறன்" நான் சொன்னேன்.

"எனக்குத் தெரியும் ஒரு சதமும் இல்லாமல் தான் வருவாரெண்டு. நீங்கள் படிக்கப்போக வேண்டாம் வீட்டிலை இருங்கோ கடன் தான் மிஞ்சியிருக்குது. வீட்டிலை இருந்து என்ன லாபம்". மனைவி அழுதாள்.

"என்னப்பா இப்படியே போனால் என்ன செய்யப் போறியள்... எங்களுக்கு என்ன சேர்த்து வைச்சிருக்கிறியள். நாங்களும் இப்படியே இருக்க வேண்டியது தான்" மூத்தமகள் தான் இப்படிப் பேசினாள்.

"கடன், கடன் எண்டு சொல்லுறியள் எப்பிடி வந்தது" இளையவளின் கேள்வி.

"ஆருக்கு குடுத்திட்டு வந்து கடன் எண்டு கதை விடுறாரோ ஆருக்குத் தெரியும்! மனைவியின் புதிய கண்டுபிடிப்பு. நான் அமைதியை இழந்து விட்டேன் கணக்கைத் தொடர்ந்தேன்.

"என்ன பிள்ளை கேட்டனி எங்களுக்கு என்ன சேர்த்து வைச்சிருக்கிறியள் எண்டோ? சொல்லுறன் கேள். உன்னை ஆண்டு ஒன்று முதல் உயர்தரம் வரை படிப்பிக்க நான் உனக்குப் போட்ட முதல் எட்டு லட்சத்துக்கு மேலை. கல்வியல் கல்லூரியிலை படிச்ச மூண்டு வரிசமும் உனக்கு சிலவழிச்சது பத்துலட்சத்துக்கு மேலை, பிறந்தது முதல் இன்று வரைக்கும் சாப்பாடு, மருந்து, உடுப்பு, பிறந்தநாள்கள், எண்டு நீ கேட்டதெல்லாம் வாங்கிதந்தன். அதுக்கும் பத்து லட்சத்துக்குக் கூடத்தான் கணக்கு வரும். ஆக மொத்தம் உனக்கு மட்டும் 28லட்சத்துக்கு மேலை இன்று செலவழிச்சுத்தான் உனக்கு "டீச்சர்" என்ற பட்டத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறன்.

கடன் எப்படி வருகுது என்டு நீ கேட்டனி பிரியா. என்ரை இப்ப எடுக்கிற மாதச்சம்பளம் 24 ஆயிரம் ரூபாய். ஒவ்வொருமாதமும் கடைக்கு இருபத்தைஞ்சுக்கு மேலைதான் வரும், உங்கடை படிப்பு செலவு, உடுப்பு, மருந்து, கரன்ட் காசு, ரெலிபோன் காசு, மீன், பால், எண்டு கணக்கிட்டால் ஒரு மாதம் நாற்பது ஆயிரத்துக்கு மேலை தான் செலவு வருகுது. சம்பளம் போனால் மீதி பத்தாயிரத்துக்கு மேலை கடன் பட்டுத்தான் உங்கடை தேவையளை நிறைவேற்றி வைக்கிறன்.

இப்படி கடன்பட்டால் ஒரு வரிசம் இரண்டு லட்சம் மட்டிலை கடன் வேண்டுறன். இதுக்கு ஒருமாதவட்டி எட்டாயிரம் ரூபா. ஒருபத்து வரிசம் கடன் நிண்டால் வட்டி முதல் எல்லாம் சேர்ந்து முப்பது லட்சத்துக்கு மேலை கடன் வரும். நீ இப்ப ஏ.எல் படிக்கிறாய்.... உனக்கு மட்டும் இது வரை எவ்வளவு செலவு செய்திருப்பன் எண்ணிப்பார்.

சிவகரன் நீ மட்டும் ஏன்! கணக்கு கேக்கேல்லை. நீ கம்பசுக்குப் போகப்போறாய்... நாலு வரிசம் முடிய நீ டாக்டராக வெளிவரப்போறாய். இந்த நாலு வரிசம் உன்னைப் படிப்பிக்கிற செலவுக்கு மட்டும் பதினைஞ்சு லட்சம் காணாது எல்லாம் சேத்தால் எவ்வளவு வரும்! நீயே பாத்துக்கொள்.

"என்னப்பா நீ சொன்னனி? என்ன கண்ட மிச்சமோ. உன்னை கலியாணம் கட்டின காலம் முதல் உனக்கு எவ்வளவு செலவு செய்திருப்பன்.

உனக்கு சிறு நீரகத்திலை பிரச்சினையெண்டு கொழும்பு ஆஸ்பத்திரியிலை ஒரு மாதம் வைச்சிருந்தன். சிறுநீரகம் விலைக்கு வாங்கி உன்ரை உயிரைக்காப்பாற்ற மட்டும் ஒன்பது லட்சம் முடிஞ்சது. கடன் பட்டுத்தான் செலவழிச்சன். இப்ப விளங்குதே கடன் எப்பிடி வந்ததெண்டு" என் மனக் குமுறல்களை கொட்டித் தீர்த்தேன்.

கிணற்றடிக்குப் போய் கால் முகம் கழுவிக் கொண்டேன். வயிறு முட்ட தண்ணீரும் குடித்தேன். உடுப்பை மாற்றி புறப்பட தயாரானேன்.

"அப்பா எங்கையப்பா போகப் போறியள்" மூத்தவளின் ஆதங்கம்.

"கணேசா பேக்கறியிலை பாண் போடுற வேலைக்கு வரச் சொன்னவை, இரவு வேலைக்குப் போனால் மாதம் பதினையாயிரம் தாற மெண்டவை. அங்கை தான் போறன், கணேசா வெதுப்பகத்தை நோக்கி என் பயணம் தொடர்கிறது.







வைத்தியர் கந்தையா சோதிதாசன்

drsothithas@gmail.com

0776284687


அனேக தமிழர் இல்லங்களில் முன்பாக துளசிமாடம் காணப் படும். வட்டமாக கட்டபட்ட மாடத்தில் வளர்க்கப்பட்டிருக்கிற துளசியை காலையில் பூவும் நீரும் கொண்டு பூசிப்பார்கள். துளசி காத்தல் கடவுள் விஸ்ணுவை குறிப் பதாக இந்துக்கள் நம்புகிறார்கள்.

இந்ததுளசி உயிர்காக்கும் மூலிகையாகி வீட்டு மருத்துவராகிறது பல நோய்களுக்கு மருந்தாகும் தெய்வீக மூலிகையாக இது போற்றப்படுகிறது. இத்தன்மையே இதை வழிபாட்டிற்குரியதாக்கி இருக்கலாம். துளசியின் இலை, தண்டு, பூ, வேர் அனைத்திலுமே மருத்துவ குணம் இருக்கிறது.

துளசி உஷ்ண வீரிய தாவரம். இது திசுக்களை உலர செய்யும் இயல்புடையது. திசுக்களில் ஆழமாக சென்று நீர் தன்மையை குறைக்கும். அதனால் உடலில் கபமும், வாதமும் சீராகிறது. சர்வரோக நிவாரணியாக செயற்படும் துளசியின் மருத்துவப் பயன்கள்

### சுவாசரோகங்களில் துளசி

இதற்கு பல்வேறு மருத்துவ குணங்கள் இருந்தாலும் சுவாச ரோகங்களுக்கு சிறந்த பலன் அளிக்கிறது. துளசிச் செடியை நன்கு நறுக்கி சிறிது மிளகுடன் கலந்து கசாயம் போட்டு காலை, இரவு குடித்து வந்தால் சளி, இருமல், தொண்டை வறட்சி நீங்குகிறது.

இலையை புட்டு போல அவித்து, இடித்து, பிளிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சிறுவர்களுக்கேற்படும் சுவாச ரோகங்களுக்கு கொடுக்கலாம்.



துளசி இலைகளோடு, மிளகு சேர்த்து கசாயமாக்கி குடித்தால் ஆஸ்துமா குணமாகிறது. தினமும் துளசியிலையை காலையில் வெறும் வயிற்றில் பச்சையாக தின்றால், சளி, தொண்டைநோ, சளிக்கட்டு நீங்கும். இவ்வாறு சுவாச ரோகங்களில் மட்டுமன்றி பலவித நோய்களுக்கு நிவாரணமளிக்கிறது துளசி.

### காய்ச்சல்குணமாக

துளசியுடன் மிளகு, வெற்றிலை மற்றும் வேம்பு பட்டை ஆகியவற்றை சேர்த்து கசாயம் வைத்து குடித்தால் காய்ச்சல் குணமாகும்.

மழைக் காலத்தில் பரவும் மலேரியா, வைரஸ்காய்ச்சல் என்பன துளசி இலையை தேநீர் போலக் காய்ச்சி குடித்து வந்தால் நீங்கும்..

### வாத வீக்கத்திற்கு

வாதம் காரணமாக உடலில் ரத்த ஓட்ட தடை, வலி, வீக்கம் தோன்றும். இவைகளை துளசிச்சாறு கசாயம் சீர் செய்யும். வீக்கத்திற்கு துளசி இலையை அரைத்து பற்றுப் போடவேண்டும்.

### சருமரோக நிவாரணியாக

தோல் சார்ந்த நோய்களுக்கும் துளசி அருமருந்தாகிறது.

உடலின் வியர்வை நாற்றத்தைத் தவிர்க்க குளிக்கும் நீரில் முந்தைய நாளே கொஞ்சம் துளசி இலையைப் போட்டுவைத்து அதில் குளிக்கலாம்.

தோலில் பல நாட்களாக இருக்கும் படை, சொரிகளையும் துளசி இலையால் குணமடையச் செய்ய முடியும். துளசி இலையை எலுமிச்சை சாறு விட்டு நன்கு மை போல் அரைத்து அந்த விழுதை தோலில் தடவி வந்தால் படைச்சொறி மறையும்.

துளசி இலை, கஸ்துரிமஞ்சள், வேப்பமிலை என்பனவற்றை காயவைத்து பொடி செய்து பூசிக்குளித்தால் தோல் நோய்கள் குணமாகுகின்றது. இதை விழுதாக முகத்தில் பூசி காயவிட்டு பின்பு தேய்த்து குளிக்க முகப்பருக்கள் மறைகின்றன.

துளசியை இடித்து சாறு எடுத்து அத்துடன் சமஅளவு எலுமிச்சை சாறு கலந்து வாரம் ஒரு முறை தலையில் தேய்த்து குளித்து வர பேன், பொடுகு தொல்லை நீங்கும்.

### வயிற்றுப்புண்ணுக்கு

துளசி வயிற்றில் உள்ள புண்களை ஆற்றுகிறது. ஈரலிலுள்ள ஜீரண நீர்களை தூண்டி நஞ்சுகளை வெளியேற்றுகிறது. அத்துடன் கெட்ட கொழுப்பை நீக்குகிறது.

ஜீரண கோளாறு (பசியின்மை வயிற்றுபொருமல்) உள்ளவர்கள் ஒரு தேக்கரண்டி, துளசி, சூரணத்தை 1 தேக்கரண்டி தேனில் கலந்து, காலை இரவு உணவிற்கு பின்பு சாப்பிட்டு வந்தால், அந்த தொந்தரவு குறையும்.

வாய்புண், வாய் நாற்றம் கொண்டவர்கள் துளசி இலையை மென்று வாய் கொப்பளிக்க வேண்டும். சிறுநீரகத்தில் உண்டாகும் அதிகப்படியான யூரிக் ஆசிட்டை வெளியேற்றும் சக்தியும் துளசிக்கு இருக்கிறது. சிறுநீரகக் கல், சிறுநீரக தொற்று போன்றவைகளையும் இது குணப்படுத்தும்.

துளசி இரத்தத்திலுள்ள விஷத்தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்கிறது. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. இதனால் எயிட்ஸ்க்கும் துளசி மருந்தாகலாம் என அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வெட்டுக் காயங்களுக்கு துளசி இலைச் சாற்றை பூசி வந்தால் அவை விரைவில் குணமாகும்.

துளசி விதை ஆண்மையை அதிகரிக்கிறது என்கிறது ஆயர்வேதம். பெண்களுக்கேற்படும் மாதவிடாய் பிரச்சினைகளையும் துளசி சீர்செய்கிறது. துளசியிலை, வில்வ இலை, வெற்றிலை சம அளவு எடுத்து இடித்து சாறு பிழிந்து அதனுடன் சம அளவு விளக்கெண்ணெய் சேர்த்து நன்கு காய்ச்சி ஆறியபின் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, தினமும் காலையில் 1 தேக்கரண்டி எடுத்து அருந்தி வரவேண்டும். இவ்வாறு தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) அருந்தி வந்தால் பெண்களுக்கு உண்டாகும் பெரும்பாடு (இரத்தப் போக்கு) குணமாகும்.

இப்படி துளசி நம் அன்றாட வாழ்க்கைக்கு ஏற்படுகின்ற பலநோய்களை நீக்கும் அருமருந்தாக செயற்படுகிறது. இதை நம்மில் பலர் கண்டுகொள்ளாதிருக்கின்றோம் என்பதுதான் உண்மை.

துளசியை கசாயம் இட்டும், சூரணம் செய்தும் சாப்பிடலாம். தற்காலத்தில் துளசிச்சாறு சேர்க்கப்பட்ட இருமல் பாணிகள் கிடைக்கின்றன.

கருந்துளசி பெரும்பாலும் வீடுகள், தோட்டங்களில் வளர்க்கப் படுகின்றன. வெள்ளை துளசி தரிசு நிலங்கள், வயல் ஓரங்களில் தானாக வளரும். விதைகளை தூவியும் வளர்க்கலாம். அழகுச்சாடிகளில் வைத்தும் வளர்க்கலாம்.

வீட்டில் அழகுக்கு வைக்கின்ற குறோட்டனுக்கு பதிலாக துளசி வளர்த்தால் எவ்வளவு நன்மை. இனி துளசி தீர்த்தம் குடிப் பதற்காவது பெருமாள் கோவிலுக்கு போகலாம்தானே.





## காவத்தை மர்மம்

காவத்தையில் என்ன நடக்கிறதென்றுதான் கேட்க தோன்றுகிறது. அண்மைய சில வருடங்களில் வரிசையாக அங்கு பெண்கள் கொல்லப்படுகின்றனர். அதற்கு என்ன காரணமென்பதுதான் மர்மமாக உள்ளது. பொலிசாரும் தலையை பிய்த்துக் கொள்கிறார்கள். கடந்த வாரமும் ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளார்.


## யுவதியின் அவதி

இதுசற்று சங்கடமான செய்தி. கலாசார காவலர்கள் கடந்து சென்றுவிடுங்கள். இந்த யுவதிக்கு நேர்ந்த அவதி அப்படி. இவர் ஒரு குத்துச்சண்டை வீராங்கணை. இவரது பெரிய மார்பகங்கள் காரணமாக அதிகஎடை பிரிவில் விளையாட வேண்டிய நிர்ப்பந்தமுள்ளதாக கூறுகிறார். 145 இறாத்தல் பிரிவில் விளையாடி வந்தவர் தற்போது 150 இறாத்தல் பிரிவில் களமிறங்க வேண்டியுள்ளது. வெறும் 12 இறாத்தலே அவரிற்கு அதிகமாக உள்ளது.
தனது பெரியமார்பகங்கள் காரணமாகவே இந்தநிலையென மூக்கால் அழுகிறார்.



## இவர்களை தெரியுமா?

அண்மைய சிலநாட்களாக சமூக ஊடகங்களிலும், இணையத்தளங்களிலும் காட்டுத்தீயாக பரவும் வீடியோவின் சில காட்சிகள் இவை. யுவதியொருவரை இரண்டு வாலிபர்கள் அடித்து துன்புறுத்துகிறார்கள். வீடியோவில் பதிவான காட்சிகளில் அவர்கள் சிங்களத்திலேயே பேசுகிறார்கள். இவர்கள் யார்? எங்கு பதவானது? போன்ற விடயங்களை வெளிப்படுத்த வேண்டுமென பலரும் கோரிக்கைவிடுக்கின்றனர்.



## ஒருஇலட்சம் ரசிகர்களின் சொந்தக்காரி

வாலரி சகுன் என்ற இந்த 27 வயது அமெரிக்கப்பெண்ணின் நிறை 108 கிலோ. உங்களிற்கு மூச்சுமுட்டுகிறதா?... ஆனால் அவரிற்கு அப்படியெதுவுமில்லை. சிறுவயதிலிருந்தே பருமனான அவரை பலரும் கிண்டல் செய்கின்றனர். என்றாலும், அதை பொருட்படுத்தாமல் அவர் யோகா செய்து வருகிறார். அதனை சமூகஊடகங்களிலும் பகிர்கிறார். தற்போது சுமார் ஒரு இலட்சம்பேர் அவரது ரசிகர்களாம்.


## சங்கிலியறுக்கும் பெண்கள்

ஆலயங்களை இலக்கு வைத்து திருடர்கள் களமிறங்குவது ஒன்றும் புதிதல்ல. ஆனால் 'பெண்கள் திருடர் படையணி' களமிறங்குவதுதான் புதிது. அண்மைக்காலமாக குடாநாட்டில் ஆலயங்களில் சங்கிலியறுத்து மாட்டும் பெண்மணிகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறது. இது வடமராட்சி வல்லிபுரஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவில் திருடி மாட்டிய பெண்கள்.




## கல்நெஞ்சு தாயார்

அநுராதபுரம் வைத்தியசாலையில் நடந்த கொடுமையை பாருங்கள். பிறந்த சிசுவொன்றை கழிவுநீர் சேகரிக்கும் தொட்டிக்குள் வீசிவிட்டு சென்றுள்ளார் ஒரு கல்நெஞ்சுத் தாயார். பராமரிப்பாளர் ஒருவர் கண்டதால் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளது.



## சிங்கிளாக வந்த சிங்கம்

எம்.பி ஆனாலே போதும். நமது அரசியல்வாதிகளின் பந்தா தாங்க முடியாதது. உதவியாளர்கள், பாதுகாவலர்கள் என அலப்பறை பண்ணுவார்கள். இப்படியானவர்கள் மத்தியில் வித்தியாசமாக தெரிகிறார் இவர். ஜே.வி.பி கட்சியின் சுனில் ஹந்துன்நெத்தி தனது மகனின் முன்பள்ளியில் நடந்த சிறுவர்தின நிகழ்விற்கான பொருட்களை நடைபாதை கடையில் பேரம்பேசி வாங்கிக் கொண்டு சென்றபோது எடுத்த புகைப்படங்கள்தான் இப்பொழுது சமூகவலைத்தளங்களில் தீயாக பரவுகிறது.



இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 04.10.2015 அன்று வெளியிடப்பட்டது